இலவச வெளியீடு: GERMANY , ENGLAND தை .Jan.2018

Free Circulation

# வெற்றிமணி

Vettimaniy

1950 (68)

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck

தொடர்
மலிவு விற்பனை!
தரமான தங்க நகைகளுக்கு
உத்தரவாதமிக்க
நகை மாளிகை

Tel:0231 162377
Königswall 16 (Am HBF)
44137 Dortmund
Germany
Fax:0231 147836



## இராமாயணத்தில் அல்ல இப்போ
## இலங்கையில் மாயமான்(கள்)

Dr IN



அனைவருக்கும்
எங்கள் இனிய
தைப்பொங்கல்
வாழ்த்துக்கள்

M.G.R.51

D.J.vino

கணனிக்குப் பின்னால்
உள்ள கணிதம்

Design:Vettimaniy.Ltd.

சத்தமின்றி ஒரு யுத்தம்



S.K.Silks & Gold Paraadise

மாபெரும் ராஜமுத்திரை

தைப்பொங்கலை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!
02.01.2018 - 15.01.2018

அனைவருக்கும்
எங்கள் இனிய
தைப்பொங்கல்
வாழ்த்துக்கள்

அனைத்து வகை ஆடைகளும் 30%,60% வரை விலைக் கழிவில்!
வகை வகையாக ஆடைகள் வாங்கி மனம் பொங்கி மகிழுங்கள்

Mr.P.Sritharan.Proprietor

Tel:0231 9501 647 Adler str 33 - 44137 Dortmund

செல்வராஜா
Selvaraja Gold House
U.K
தங்க நகைகளுக்கும், மைங்கையர் மனங்கவர் சேலைகளுக்கும்,நாடுங்கள்.
Page.02

T.T.S.Brothers GmbH&Co.KG
Germany
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
Page.9

Gopara Gnanam
Textiles & Jewellery Shop
Germany
Tel: 0231/5450028- Mob: 01713306542
Rheinische Str.81-- 44137 Dortmund
Page.24

# நம்பமுடியாத உண்மைகள்!

மாதவி

## அன்று பெற்ற பிள்ளைகளை விட்டுவிட்டு பெற்றோர்கள் பறப்பது அரிது!





The Wright brothers avoided flying together to ensure that in the event of a fatal crash, at least one of them could continue their work.

நாம் எமது பிள்ளைகள் சிறியவர்களாக இருக்கும் போது முடிந்த வரை எமது பிள்ளைகளை தனியே (தாத்தா அம்மம்மா இவர்களிடம் கூட) விட்டுவிட்டு விமானப் பயணம் செய்வது குறைவு. காரணம் எமக்கு ஏதும் நடந்தால் பிள்ளைகள், தாய், தகப்பன் அற்ற அனாதைகள் ஆகிவிடுவார்கள் என்ற ஒரு வித பயம். ஆனால் இன்று பிள்ளைகள் அப்படி அல்ல. அவர்கள் சொல்லும் காரணம், நாம் எண்ணுவது எல்லாம் எதிர்மறைச் சிந்தனை (*Negative Thoughts*) என்கிறார்கள். ஆனால் இன்று அனேகமான விமான விபத்துக்களின் போது 60 வீதமான குழந்தைகள் ஆதரவற்றவர்கள் ஆகிறார்கள். என்கிறது ஒரு செய்தி. பயணம் செய்யும் இளம் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை தமது பெற்றோருடன் விட்டுவிட்டு விடுமுறைக்கு செல்கின்றனர். ஆதனால் குழந்தைகள் ஆதரவற்றவர் களாகிறார்கள். காப்புறுதியில் கிடைக்கும் பணம் சிறு பிள்ளைகளுக்கு உதவாத உறவாகும்.


அந்த விமானத்தை கண்டுபிடித்தவர்களான (Wright) றயிட்சகோதரர்களுக்கு எம்மைப்போன்று எதிர்மறையான சிந்தனை இருந்துள்ளது. ஆம் றட்யிட் சகோதரர்கள் தம் வாழ்நாளில் ஒரு தடவையேனும் ஒன்றாக விமானத்தில் பறந்து பார்க்கவில்லை. காரணம் விபத்தில் இருவரும் இறந்தால் அந்த பறக்கும் முயற்சிகள் யாவும் தகர்ந்துவிடும். இதனால் அவர்கள் சேரந்து பறப்பதில்லை. விஞ்ஞான வளர்ச்சிக்கு அவர்களது எண்ணம் கைகொடுத்தது. சமுதாய வளர்ச்சிக்கு அன்று எமது எண்ணம் கைகொடுத்தது.

அமெரிக்கா என்றதும் நாசா சந்திரன் செவ்வாய் இன்னும் கண்ணுக்கெட்டாத பல கிரகங்கள் அவர்களது கைக்குள் இருப்பதாக ஒரு கற்பனை நம் கண்முன் தெரியும், அதற்கு காரணம் அவர் அனைவரும் அறிவாளிகள் என்ற எண்ணம் எம்மனதில் பதியவைக்கபட்டுவிட்டது. அதற்கான வேலைத்திட்டம் அன்றுமுதல் இன்றுவரை அவர்கள் செய்து கொண்டுதான் உள்ளனர்.



Seven percent of American adults (which equals about 16 million people) believe that chocolate milk comes from brown cows.

ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு நாடு என்கிறபோது அது அறிவு, அறியாமை, இரண்டும் கலந்ததுதான். அது எந்த நாடாகவும் இருக்கலாம். இன்றும் நம்மில் பலர் பேய் பிசாசு, என்று நம்பவில்லையா! பூமி தட்டை என்று பூமியில் உள்ளவர்கள் பலர் இன்னும் அடம்பிடிக்கவில்லையா? அதுபோல்தான் அமெரிக் காவில் 7 வீதமானவர்கள் இன்னும் சொக்கோ மில்க் பிறவுண் நிறப்பசுவில் இருந்து கறக்கப்படும் பால் என்று நம்புகிறார்களாம்.





# கேரளாவில் மகாத்மா எம்.ஜி.ஆர் ஆனார்?

தாயகத்திலே நாம் ஒரு இடத்திற்கு செல்லவேண்டும் என்றால், செல்ல வேண்டிய தெருக்களின் பெயர்களைச் சொல்லித் தேடுவோம். அந்தப் பெயர்களை நோக்கினால், வாழ்வில் சாதனை படைத்தவர்களது, பெயராகவோ அல்லது மனிதநேயம் மிக்கவர்களது, பெயர்களாகவோ, இல்லை இயற்கைப் பெயர்களாகவோ இருக்கும். சில விதிவிலக்காக, தொழில் பெயரை கொண்டாதாகவும், இருப்பதைக் காணலாம்.

குறிப்பாக நாம் தாய்மண்ணில் காணும் பெயர்கள் சில அப் பெரியவர்களது பெயரைச் சுமந்து நிற்கின்றதை இங்கு காணலாம். நாவலர் வீதி, செல்வா ஒழுங்கை. ஈழகேசரி பொன்னையா வீதி,.......... இவை அப்பெரியார்களை மக்கள் மறவாது இருப்பதற்காக வைக்கப் பட்ட பெயர்கள். இங்கே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரது பெயரை நீளமாக இருக்கிறது என்று எதிர்காலத்தில் அதுவும் ஆங்கிலத்தில் எஸ்.ஏ.என். தெரு ( S.A.N Road) என வைத்தால் யாருக்கு தெரியும் இதுதான் நாவலரது பெயரின் சுருக்கம் என்று. ஆனால் இப்படி ஒரு கொடுமை நம்மண்ணில் நடாக்காது, ஆனால் இப்படி கேரளாவில் இருப்பதைக் கண்டு மலைத்தேன்.

கொச்சின் நகரத்தில் (ஏர்ணாக்குளம்) பிரதான வீதி அது. இப்போ அந்த வீதியின் மேல் மெற்ரோ பாதை போடப்பட்டு உள்ளது. ஓவ்வொரு 10 நிமிடத்திற்கும், மெற்றோ வரும். சுத்தம் சுகாதாரம் இவை ஒன்றிணைந்து சூழல் அழகு கொழிக்கிறது.







ஒரு முறை அந்த மெற்ரோவில் பயணம் செய்ய ஸ்ரேசன் சென்று ரிக்கட்வாங்கியபோது அதில் M.G.Road இல் இருந்து எடாப்பள்ளி என இருந்துத . சரி மக்கள்திலகம் எம்.ஜி.ஆரர் மலையாளம் தானே! அதனால் அவர் பெயரை வைத்துள்ளார்கள் என எண்ணினேன்.

இருந்தும் அந்தப்பயணத்தின் பின் எனது இருப்பிடம் வந்து கூகிளில் தட்டிப்பாரத்தேன் எம்.ஜி.றோட் இருந்து! அது ஆச்சரியமாக இருந்தது. அந்த M.G. Road வேறு ஒன்றும் இல்லை அது Mahathma Gandhi Road என்று இருந்தது. பின்பு பெரியவர்களை அங்கு விசாரித்தபோது தெரியவந்தது, அங்கு நீளமாக பெய்ர்களை சுருக்கி அழைப்பது வழக்கமாம், தனது பெயர் கூட கோபாலபிள்ளை ஆனால் தன்னை G.பிள்ளை என்றுதான் அழைப்பார்கள் என்றார். மகாத்மா காந்தியின் பெயரும் அதுபோல் சுருக்கப்பட்டுவிட்டது. ஆதனால் M.G. road ஆகிவிட்டது. அடுத்த தலைமுறை இந்தியாவின் தேசபிதாவை எப்படி அடையாளம் காணப்போகிறார்கள். காசில் உள்ள காந்தி படம் சுருக்கப்பட்டு அவர் கண்ணாடி மட்டும் ஒருகாலம் வந்தாலும் ஆச்சரியப்படத் தேவை இல்லை. எமது மண்ணில் இந்தச் சுருக்கு எழுத்து இன்னும் அறிமுகமாகவில்லை. அங்கு சுருக்கத்திற்கு இடமில்லை, ஆனால் பெயரையே சுருட்டிவிடும் கைங்கரியம்தான் நடைபெறுகிறது.






வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க

ஓசை 256



ஆரம்பம்:1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.



Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com


**"வெற்றிமணிமொழி"**
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Sanje:07824 61 83 83

Vettimaniy Ltd
Company No: 8876276


# இராமாயணத்தில் அல்ல இப்போ இலங்கையில் மாயமான்(கள்)

## யாழ்ப்பாண மாவட்டம், அன்று கல்வியில், முதல் மூன்று மாவட்டங்களில் இடம்பிடித்தது! இன்று 21 வது இடத்திற்கு தள்ளப்பட்டது!

**யூட் பிரகாஷ்**

எண்பதுகளின் நடுப் பகுதியில், ரஜீவ் காந்தி இந்தியாவின் பிரதமராக பதவியேற்று, இலங்கைப் பிரச்சினையில், இந்திரா காந்தியின் அணுகுமுறையில் இருந்து விலகி நடந்து கொண்டிருந்த காலம். இலங்கை அரசையும் தமிழ் இயக்கங்களையும் இணக்கத்திற்கு கொண்டு வர இந்தியா பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்த கால கட்டம். இந்தப் பின்னனியில் தான் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தினர் "மாயமான்" எனும் தெருக்கூத்தை அரங் கேற்றினார்கள்.

பின்னேரங்களிலும் இரவுகளிலும் யாழ்ப்பாணம் எங்கும் ஊர் சந்திகளில் அரங்கேறிய "மாயமான்" தெருக்கூத்தில் வரும் பாடல்களில் ஒன்று, இன்று மீண்டும் ஒரு தீர்வுத்திட்டம் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் நினைவில் வந்தது.

"தென்னாசியாவின்
மன்னாதி மன்னர் நான்
ஏனென்று கேட்காமல்
என் பின்னால் வாருங்கள்"





என்ற பாடலை பாடிக் கொண்டு ரஜீவ் கதாபாத்திரம் முன்னே போக, தென்னாசியாவின் குட்டி நாடுகள் அவர் பின்னால் போவதைப் போன்று அந்தக் காட்சி அமையும். ரஜீவ் காந்தியை குறித்து எழுதப்பட்ட இந்த வரிகள், ரஜீவ் கொடுக்க விரும்பிய தீர்வுப் பொதியை பற்றியதாகவும் இருந்திருக்கலாம்.

தமிழீழம் என்பது தமிழர்களின் கனவு. அந்தக் கனவு முள்ளிவாய்க்காலோடு யதார்த்தரீதியில் முற்றுப்பெற்றா லும், நாங்கள் சாகும் வரை அந்தக் கனவு எங்கள் கண்களிற்குள் ஒட்டிக் கொண்டு தானிருக்கும். நனவாகாத அந்தக் கனவு எங்களுக்குள் உறங்கு நிலையில் இருக்கும் போது எந்தவொரு தீர்வுத் திட்டமும் எங்களிற்கு திருப்தி தராது.

முற்றுப் பெற்றாலும், நாங்கள் சாகும் வரை அந்தக் கனவு எங்கள் கண்களிற்குள் ஒட்டிக் கொண்டு தானிருக்கும். நனவாகாத அந்தக் கனவு எங்களுக்குள் உறங்கு நிலையில் இருக்கும் போது எந்தவொரு தீர்வுத் திட்டமும் எங்களிற்கு திருப்தி தராது.

தமிழ் தலைமைகளோடு ஏற்படுத்திய ஒப்பந்தங்களை சிங்களத் தலைமைகள் மீறிய வரலாறே 1977ல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கும் ஆயுதப் போராட்டத் திற்கும் வித்திட்டது. தனித் தமிழீழத்திற்கான ஆயுதப் போராட்டம் உச்சம் பெறத் தொடங்க, கிடைத்த இடைக் காலத் தீர்வுகளை தமிழர் தரப்பு நிராகரிப்பதும் எட்டப் பட்ட உடன்படிக்கைகளிற்கு நீதிமன்றங்கள் முட்டுக் கட்டை போடுவதும் வரலாறாகத் தொடங்கியது.

இப்போது 2017ல் மீண்டும் ஒரு அரை குறைத் தீர்வாக இடைக்கால அறிக்கை எனும் பெயரில் வந்திருக்கும் புதிய அரசியல் யாப்பிற்கான சிபாரிசுகளையும் நிராகரிக்க எங்களை நாங்கள் தயார்படுத்தத் தொடங்கிவிட்டோம். அன்றும் இன்றும் நிராகரிக்க நாங்கள் கூறும் காரணங்கள் மிக வலுவானவை, எங்களைப் பொறுத்தவரை வலு நியாயமானவை. மற்றப் பக்கத்தில் சிங்கள பேரின வாதிகளும் தங்களது எதிர்ப்பு ஆட்டத்தை ஆரம்பித்து விட்டார்கள்.


"மச்சான், நாளைக்கு சிங்களவனே மனம் மாறி எங்களிற்கு தமிழீழம் தந்தாலும், நாங்கள் சிலாபத்தில் இருக்கும் தென் தமிழீழ எல்லையை வெள்ளவத்தை மட்டும் நீட்டாட்டி எங்களிற்கு தமிழீழம் வேண்டாம் என்று சொல்லுவமடா" என்று நண்பன் ஒருவன் பகிடியாய் சொன்னதிலும் ஒரு தார்ப்பரியம் இருக்கிறதா?



போரில் தோற்ற நாங்கள் தான் இறங்கிப் போக வேண்டும் என்ற வாதம் சரணாகதிக்கு சமானம் இல்லலையா?

சரி இறங்கிப்போவதுதான் என முடிவெடுத்தால் எவ்வளவு தூரம் இறங்கலாம் என்பதற்கும் ஒரு எல்லை யுண்டல் லவா? அந்த எல்லை எதுவரை என்பதை எப்படி தீர்மானிப்பது ? இறங்கிப்போனால் அப்படியே மூழ்கிப் போய்விடுவோம் என்பவர்களுக்கான பதில் தான் என்ன?

1987லிருந்து தரப்பட்ட தீர்வுகளை நிராகரிக்க நிராகரிக்க, அடுத்து வந்த தீர்வுகள் தேய்ந்து கொண்டு போனது தான் வரலாற்று உண்மை என்று அண்மையில் மெல்பேர்ண் வந்த அமைச்சர் மனோ கணேசன் சொன்ன கருத்து நியாமானதா?



### நாங்கள் விரும்பும் தீர்வும் ஒரு மாயமானா?

தீர்வுத் திட்டங்களின் உள்ளடக்கம் மட்டுமா தேய்ந்தது? யுத்தம் எங்களை விரட்ட, நாங்கள் தென்னிலங்கைக்கும் வெளிநாடுகளிற்கும் புலம்பெயர, தாயகப் பகுதிகளில் எங்கள் சனத்தொகை தேயத் தொடங்கியது. எங்களது சனத்தொகை குறைவதும், ஒரு வகையில் திட்டமிடப்பட்ட சிங்கள குடியேற்றங்களிற்கு வழி விடுவதாகவே அமை கிறது.

தொடர்ச்சி 4ம் பக்கம்




## இராமாயணத்தில் அல்ல...

03ம் பக்கத் தொடர்ச்சி

கல்வியில், 1990களின் ஆரம்பத்தில் முதல் மூன்று மாவட்டங்களில் இடம்பிடித்த யாழ்ப்பாண மாவட்டம், 2016ல் 21வது இடத்திற்கு தள்ளப்பட்டதும் இந்த காலகட்டத்தில் தான். 1980களில் இலங்கையின் பொருளாதாரத்திற்கு 25 சதவீதத்திற்கு பங்களிப்பு வழங்கிய வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பொருளாதார பங்களிப்பு, 2016ல் 6 சதவீதத்திற்கு சரிந்ததும் இதே கால கட்டத்தில் தான். நாங்கள் அரசியல் உரிமைகளை வெல்வதில் மட்டும் குறியாக இருக்க, இலங்கையின் பிற சமூகங்கள் தங்களை பொருளாதார ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் வளப்படுத்திக் கொண்டு விட்டன என்ற கசப்பான உண்மை எமக்கு நன்கு தெரிந்தது தான். அந்த சமூகங்கள் பொருளாதார ரீதியாக அடைந்த முன்னேற்றங்கள் அவர்களை அரசியல் ரீதியாகவும் பலப்படுத்தி விட்டன.

அரசியல் உரிமைகள் வெல்லும் வரை எங்கள் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு முன்னுரிமை கொடுக்க நாங்கள் தொடர்ந்தும் மறுத்து வருவதும் ஏன்? அரசியல்-பொருளாதாரம் எனும் இரட்டை நோக்கங்களையும் சமாந்தரமாக கொண்டியக்கவல்ல கொள்கைகள் நமக்கு கசப்பதன் காரணம் தான் என்ன?

எங்களது அரசியல் உரிமைகள் நோக்கிய பயணத்தை திசை திருப்பவல்ல மாயமான் தான் சமூக, பொருளாதார அபிவிருத்தியா?

“ஜநா வரை எங்கட பிரச்சினை போயிருக்குடா. இப்ப போய் ஒரு அரை குறை தீர்வை ஏற்றுக் கொண்டோம் என்றால் அவ்வளவு தான். பிறகு எந்தக்காலத்திலும் எங்களால் அதிக அதிகாரமோ உரிமைகளோ கேட்க முடியாது, தம்பி” என்று அண்ணர் ஒருத்தர் விளக்கிய நியாயத்திலும் நியாயம் இருக்கிறது.

மே 2009ல் எங்களது ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதோடு, நாங்கள் எங்களை நம்பி,உயிரும் ரத்தமும் உழைப்பும் வியர்வையும் பவுணும் பணமும் விதைத்து கட்டியெழுப்பிய மிகப்
பெரிய பேரம் பேசும் பலம் (bargain power) அழிந்து போனது. இப்போது சிங்கள அரசாங்கத்தை உருட்டி வெருட்டி மிரட்டி அதிக உரிமைகளை தர வைக்க எங்களிற்கிருக்கும் பேரம் பேசும் பலம் தான் என்ன? 225 பேரடங்கிய பாராளுமன்றத்தில் இருக்கும் எங்களது 15 பேரா? இலங்கையின் பொருளாதாரத்தை முடக்க முடியாத வடக்கின் கடையடைப்புக்களா?

2009ல் மனித பேரவலம் நடந்த போது அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் கனடாவிலும் ஜநாவிலும் தலைமைப் பதவிகளில் இருந்தவர்களால் தான், அதற்கு பிந்தைய ஆண்டுகளில் சர்வதேசத்தில் இலங்கை அரசிற்கு எதிராக மேற்கோள்ளப்பட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இன்று அவர்களின் ஆட்சிகளும் மாறி இலங்கையிலும் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு விட்டது. அன்று இருந்த அதே ஓர்மத்துடன் சர்வதேசம் எங்களிற்காக களமிறங்கி எங்களது உரிமைகளை பெற்றுத் தரும் என்று இன்றும் நாங்கள் நம்பலாமா? சர்வதேச தலையீடு என்று நாங்கள் காலங்காலமாக எதிர்பார்த்து இருப்பதும் ஒரு மாயமானா?

நாங்கள் ஒரு பக்கம் இந்த மாயமான்களை துரத்திக் கொண்டு திரிய, போரின் காரணமாக புலம்பெயர்ந்து தங்களை பலப்படுத்திக் கொண்டு விடுதலைப் போராட்டத்திற்கும் பலம் சேர்த்த ஒரு தலைமுறை, “நாட்டிற்கு ஏதாவது செய்ய வேண்டும்” என்ற இன்னும் நிறைவேறாத வேட்கையுடன் முதுமையை நோக்கியும் மரணத்தை நோக்கியும் பயணித்துக் கொண்டிருக்கிறது. 1950களிலும் 1960களிலும் பிறந்த இந்த தலைமுறை தான், போரால் அழிவுண்ட எங்கள் தேசத்தை மீள கட்டியெழுப்ப வேண்டிய நிபுணத்துவத்தையும் நிதிவளங்களையும் தம்மகத்தே கொண்டிருக்கிறார்கள்.

எங்கள் தேசத்தை ஆழமாக நேசிக்கும் இந்தத் தலைமுறைக்கு பின்னர் வரும் தலைமுறைகள் அவர்களிற்கிருக்கும் அதேயளவு பற்றுடன் தாயகத்திற்கு உதவி செய்யப் போவதில்லை. தாயகத்தை நேசித்து புலம்பெயர் தேசத்தில் வாழும் இந்த தேசப் பற்றாளர்களின் பலத்தை தாயக சமூகத்தையும் பொருளாதாரத்தையும்

மீளவும் கட்டியெழுப்ப பயன்படுத்தப் போகிறோமா? இல்லை காலம் அவர்களையும் காவு கொள்ள விட்டு விடப்போகிறோமா? மாயாமான்களிடம் மீண்டும் ஏமாறப் போகிறோமா?

## வருக தை மகளே .....

ஜீவி யோ்மனி



உழைக்கும் உழவர்களின்
உட்சாகத் திருநாள்
விவசாயிகள் ஒன்று சேரும்
வெற்றிப் பெருநாள்
ஆதவனை வரவேற்று
அன்புடன் நன்றி சொல்லும்
மறத்தமிழனின் மங்கலத் திருநாள்
வீரத்தின் அடையாளமாக
மிரட்டி வரும் காளைகளை
விரட்டி அடக்கும்
வெற்றித் திருநாளில்

தை பொங்க...
தமிழ் பொங்க....
வழமான வாழ்வு பொங்க
உறவுகளின் உள்ளமெங்கும்
மகிழ்ச்சி வெள்ளம் பொங்க
இதயத்தில் இன்பம் தங்க
அடிக் கரும்பின் சுவையாக
வாழும் வாழ்க்கை இனித்திருக்க
உலகத் தமிழினத்தின்
உள்ளமெல்லாம்
தமிழ் நிறைந்திருக்க
வழமான வாழ்வு கொண்டு
வருக தை மகளே....!

## வெளிநாட்டு பொங்கல்

நெடுந்தீவு முகிலன்

கிடாரம் - பானை - சருவம் எதுவுமே
ஏரியா கடைத்தெருவில் கிடைக்கவேயில்லை...
பழைய சட்டியை நன்றாக கழுவி
நானும் பொங்குவதற்கு தயாராகினேன்.



மாவிலை - தோரணம் - கல் அடுப்பு - என்று
ஒன்றுமில்லை... வாடகை வீட்டின்
பல்கனியின் ஓடையில் சின்னதாய்
ஒரு காஸ் அடுப்போடு...

பால் பைக்கற் - தேங்காய் பவுடர் - பழங்கள் என
மொத்தமுமாய் எல்லாமே ஒரு வாரத்துக்கு
முன்னரே வாங்கி பத்திரமாய் - பிறிச்சில்
வைத்தும் விட்டேன்.



வாழை இலையும் இல்லை...
வடை மோதகமும் இல்லை ....
கரண்டியும் பேப்பர் தட்டும் - கை
துடைக்கிற ருசுவும்தான்...

புத்தாடை அணியவில்லை..
பட்டாசும் கொழுத்தவில்லை... பக்கத்து
வீட்டுக்கு அடுப்பு புகை போகாமல்
பார்த்து கொண்டேயிருந்தேன்..



பொங்கல் பொங்கி வரும் போது
சூரியனுக்காய் காத்திருந்தேன் - ஆனால்
அணைந்த வீதியோர விளக்குகள்தான்
திரும்பவும் ஒளிர்ந்தது.

உறவுகளோடு ஊரில் பொங்கினால்
பானை மட்டுமே மிஞ்சும் - இங்க என்ன..?
ஒரே ஒரு லாபம் புக்கையை திண்டு முடிக்க
இரண்டு வாரமாகும்.




அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

ESTM Jewellery Dortmund

எங்கள் சேவை
- திருமண ஆபரணங்கள்
- ஓடர் நகைகள்
- திருத்த வேலைகள்
- தாலிக்குப் பொன்னுருக்குதல்
- காது மூக்குக்குத்துதல்

E.S.T

Our Service
- Wedding Jewellery
- Jewellery Order
- Quick Repair of Jewellery
- Wedding Rituals
- Ear and Nose piercing

பழைய நகைகளுக்குப் பதிலாக சிங்கப்பூர் நகைகள் மாற்றிக் கொடுக்கப்படும்

ESTM Jewellery | Rheinische Str. 73a | 44137 Dortmund | Tel.: 0231 / 1899023 | Mobil: 01633642642






அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்


அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்
Luckyfly
Bochum
Lucky Fly Reisebüro
Luckyfly
Lucky Fly Reisebüro வழங்கும்
Colombo
Frankfurt
München
Düsseldorf
January.offer
580€
முற்பதிவுக்கு முந்துங்கள்
பணத்தை சேமிக்க! கோடைகால விடுமுறைக்கு
பதிவுக்கு இன்றே!! முந்துங்கள்!!!
SUMMER 2018
BOOK EARLY AND SAVE
ab
599 €
649 €
699 €
July 2018
Sunday Monday Tuesday Wednesday Thursday Friday Saturday
1 2 3 4 5 6 7
650€
8 9 10 11 12 13 14
650€
15 16 17 18 19 20 21
650€
22 23 24 25 26 27 28
699 €
August 2018
Sunday Monday Tuesday Wednesday Thursday Friday Saturday
29 30 31 1 2 3 4
699 €
Return ony Tuesday and Sunday குறிப்பிட்ட இருக்கைகள் மட்டுமே முந்துங்கள்!
Tel: 0234-2399032
Fax 0234-79457171
Altendorfer Str:266
45143 Essen
Tel: 0201 8009 3749
e.mail:siva 0108 @hotmail.com
Mob:No: 0179 1484 892
Graphic Design Vettimamy Ltd
QATAR AIRWAYS القطرية
Emirates
طيران الخليج
الطيران العُماني
OMAN AIR
Allee Str.38-40a
44793 Bochum


தரமான பொருட்களை வழங்குவதில் உங்கள் மனம் கவர்ந்த நிறுவனம்
TKS BEST FOOD
ASIATISCHE & AFRIKANISCHE LEBENSMITTEL EINZELHANDEL
TKS BEST FOODS
தைப்பொங்கலை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!
11.01. 2018 முதல் 13.01.2018 வரை
எமது TKS Bestfood
இணையத்தளத்திலும்
www.tksbestfood.de
10.01.2018 அன்று
சிறப்பு விலைகளைப்
பார்வையிடலாம்.
Thai pongal
SPECIAL OFFER
TKS BEST FOODS
TKS BEST FOODS
மக்கள் மனம்
கவர்ந்த விற்பனை நிலையம்
நம்ப முடியாத பொருட்கள்!
நம்பமுடியாத விலையில்!
அனைவருக்கும் எங்கள் இனிய
தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்
Rheinische Strasse 79
44137 Dortmund
Tel: 49 231 950 46 883

# மனித மூளையில் எவ்வளவு
# தகவல்களைப் பதிவு செய்ய முடியும்?






Dr.நிரோஷனின்
அதிசய உலகம்

மனித மூளையில் எவ்வளவு தகவல்களைப் பதிவு செய்ய முடியும்?
நமது மூளையைப் போல் ஓர் அதிசயம் இந்தப் பிரபஞ்சத்திலேயே கிடையாது உங்கள் கணினியில் இருக்கும் வன்தட்டு நிலை நினைவகத்தில், அதாவது ர்யசன ஞளைஉ இல் எத்தனை TeraByte பதிவு செய்ய முடியும் என்பது உங்களுக்குத் தெரியுமா? 500 gigabyte? 1 TB? 2 TB அல்லது 4 TB? தற்போது தனிப்பட்ட பாவனைக்கு என்று அமைக்கப்பட்ட கணினிகளில் பொதுவாக 1-4 TB தான் இருக்கும். சரி, உங்கள் கணினி பற்றி இப்படி நன்றாகத் தெரிந்து வைத்திருக்கின்றீர்களே, ஆனால் உண்மை சொல்லப் போனால் உங்கள் மூளையும் ஒரு விதமான Hard Disc தானே? அதில், நமது சிறு வயதில் இருந்து இன்று வரை எவ்வளவோ விஷயங்களைப் பதிவு செய்து வைத்திருக்கிறோம். எனவே, மூளை எனும் இந்த hard disc இல் எவ்வளவு பதிவு செய்ய முடியும் என்று உங்களுக்குத் தெரியுமா? தெரியவில்லை என்றால் கண்டிப்பாகத் தொடர்ந்து படியுங்கள்.

## நமது மூளையைப் போல் ஓர் அதிசயம் இந்தப் பிரபஞ்சத்திலேயே கிடையாது

மனித மூளையில் எவ்வளவு தகவல்களைப் பதிவு செய்ய முடியும்? இதைப் பற்றி பல ஆராய்ச்சியாளர்கள் சிந்தித்து இருக்கின்றார்கள், ஆனால் ஒருவராலும் இதற்கு நிச்சயமாகப் பதில் கூற முடியவில்லை. எனவே நானும் கூட இன்று உங்களுக்கு இதைக் கற்பனைப் பண்ணி பார்ப்பதற்காக ஒரு விளக்கத்தைத் தருகிறேன்.
சரி, முதலில் கணினியில் தகவல்கள் எப்படிப்பதிவு செய்யப் படுகின்றது என்பதைப் பார்ப்போம். இது மிகவும் இலகுவான ஒரு விஷயம் தான். கணினிக்கு இரண்டே இரண்டு விஷயங்கள் மட்டும் தான் தெரியும். ஒன்று அல்லது பூச்சியம், அதாவது one or zero, yes or no, on or off. இதைத் தவிர்த்து வேறு ஒன்றுமே கணினிக்குத் தெரியாது. இப்படிப் பதிவு செய்யப் படும் ஒரு ஒன்று, அல்லது பூச்சியத்தை 1 இருமம் தகவல் (1 bit information) என்று அழைப்பார்கள். நாம் கணினியில் பதிவு செய்யும் ஒவ்வொரு விஷயமும் தொடர்ச்சியான பூச்சியம் மற்றும் ஒன்றால் பதிவு செய்யப் படுகின்றது.
சரி இது எல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். இனி நமது மூளையை சற்று உத்துப் பார்ப்போம். மனித மூளை சுமார் 100 பில்லியன் நியூரான்களைக் கொண்டிருக்கிறது. இந்த நியூரான்கள் ஒவ்வொன்றும் சுமார் 1,000 நரம்பிணைப்புகளுடன், அதாவது Synapses உடன் இணையமுடியும் என்று எடுத்துக்கொள்வோம். அது மட்டும் இல்லை, இந்த ஒவ்வொரு நரம்பிணைப்பிலும் 1 Bit information அதாவது ஒரு ஒன்று அல்லது ஒரு பூச்சியத்தைப் பதிவு செய்ய முடியும் என்றும் எடுத்துக்கொண்டால், நமது மூளையில் எவ்வளவு பதிவு செய்ய முடியும் தெரியுமா? 1 கோடி கோடி பிட்ஸ், அதாவது 100 TeraByte பதிவு பண்ண முடியும். ஆனால், இது ஒரு குறைந்தபட்சமான எண்ணிக்கை தான் என்று சில விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். இவர்களின் கணிப்புப் படி சுமார் 2.5 PetaByte அதாவது 2500 TeraByte வரை பதிவு செய்ய முடியும் என்று கூட சொல்கிறார்கள். ஆச்சரியமாக இல்லையா?
பிறப்பில் இருந்து பார்த்தது கேட்டது எல்லாமே நம் மூளைக்குள்ளே இன்னும் பதிந்து இருக்கிறது. ஆனால், மூள்ளயில் எந்த இடத்தில் பதிவு செய்து இருக்கிறது என்பது தான் தெரிவதில்லை. இப்படித் தெரியாமல் போவதைத் தான் நாம் மறதி என்று அழைக்கின்றோம்.
சரி, 2500 TB என்றால் எவ்வளவு என்று உங்களுக்குத் தெரியுமா? 2500 TBஇல் 30 லட்சம் மணி நேரம், அதாவது 342 வருடங்கள் தொடர்ந்து பார்க்கக்கூடிய சின்னத்திரை நாடகங்களைப் பதிவு செய்ய முடியும். இதே 2500 TBஇல் 4:2 கோடி மணி நேரம் அதாவது 4,800 வருடங்கள் தொடர்ந்து கேட்கக்கூடியதாகப் பாடல்களைப் பதிவு செய்ய முடியும். நம்பவே முடியவில்லை அல்லவா?

# சங்கினுள் கேட்கும் சத்தம் என்ன?




இதை நீங்கள் எல்லோருமே செய்து பார்த்திருப்பீர்கள். கடற்கரையில் ஒரு சங்கைக் கண்டால் அதை எடுத்துக் காதில் வைத்துக் கேட்டுப்பார்க்கும் போது, கடல் அலைகளின் சத்தம் போல் ஒரு இரைச்சல் கேட்கும். பக்கத்தில் இருப்பது கடல் தானே, எனவே கடலின் சத்தம் தானே கேட்கும் என்று நீங்கள் நினைத்தால், அதே சங்கை கடற்கரையில் நின்று கொண்டு காதில் வைக் காமல், வேறெங்காவது எடுத்துச்சென்று வைத்துப்பாருங்கள். அப்போதும் உங்களுக்குக் கடல் அலைகளின் சத்தம் தான் கேட்கும். அது ஏன் என்று உங்களுக்குத் தெரியுமா? அது வேறொன்றும் இல்லை, உங்களுக்குக் கேட்பது நம்மைச் சுற்றியுள்ள மற்றும் நமக்குள் ஒலிக்கும் சத்தங்கள் தான். அவை தான் நமக்குச் சங்கினுள் இரைச்சல் போன்று கேட்கின்றன.

அது எப்படி என்றால், காதினால் இலகுவாகக் கேட்க முடியாத நமது சூழலில் உள்ள மிகவும் மெல்லிய சத்தங்கள், தூரத்தில் இருந்து வந்து, நாம் கையில் வைத்திருக்கும் சங்கினுள் நுழைந்து, உட்புறம் பல முறைகள் பட்டுத் தெறிப்பதால் அந்த மெல்லிய சத்தம் அதிகரிக்கின்றது.
அவ்வாறு அதிகரித்து நமது காதினுள் செல்லும் போது, அந்த ஒலி நமக்கு அலைகளின் இரைச்சல் போல் கேட்கின்றது. சங்கின் வடிவம் மற்றும் அளவு பொறுத்து இந்த இரைச்சல் வெவ்வேறு விதங்களில் கேட்கின்றது.



இவ்வளவு தான் இந்த மர்மத்திற்குப் பின்னால் இருக்கும் அறிவியல் நண்பர்களே!சரி, இனி நீங்கள் கூறுங்கள், இந்த விஷயம் உங்களுக்கு முன்பே தெரியுமா? எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh) அறியத் தாருங்கள்!

SANGEETHA JEWELLERS
"Specialist in 22 ct Gold Jewellery UK"
அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
MONTHLY SEETU FACILITIES
ONSITE WORK SHOP REPAIRS AND ALL OTHER NEEDS
EXCHANGE YOUR OLD FOR NEW JEWELLERY
Tel:020 8902 9246
FOLLOW US ON . I INSTAGRAM I FACEBOOK
#SANGEETHA JEWELLERS
"PRICE GURANTEE ON THE DAY OF PURCHASE"
190 EALING ROAD,ALPERTON,WEMBLEY,HA0 4QD - U.K
" TERMS AND CONDITION APPLY"
சங்கீதா நகையகம்



# சத்தமின்றி ஒரு யுத்தம் நம் மண்ணில் நடக்கிறது!

அனித்தா பூஷன்



## பூரிக்க வைக்கும் பூனகரி வீதி
## இது போதும்! நமக்கு!! இது போதுமே!!!

இன்றைய நிலையில் தாயகத்தில் சகல வசதியுடன் மக்கள் வாழ்கின்றனர். குறிப்பாக 2009ம் ஆண்டின் பின்னரான அரசியல் மாற்றம் பல்வேறுபட்ட அபிவிருத்தி திட்டங்களை கொண்டு செல்கின்றது. இவையே தாயகத்தைப் பற்றிய பெரும்பாலானோரின் இன்றைய கருத்தாகும். இதிலும் புலம்பெயர் நாட்டவர் சிலர் விடுமுறைக் காலத்திற்காக தாயகம் சென்று திரும்பியதும், கதைக்கும் விடயமே "எம்மை விட அங்குள்ளவர்கள் வசதியாக இருக் கிறார்கள்"என்பதும், "எல்லாப் பொருட்களும் அங்கேயே இருக்கின்றது. ஒன்றும் இங்கிருந்து கொண்டு செல்ல வேண்டிய அவசியமில்லை"என்பது போன்ற கருத்துக்களாகும்.
ஆனால் இவையெல்லாம் ஒரு புறம் இருக்க, இன்னொரு புறம் சமூகச்சீரழிவுகளும் அதிகரித்துக் கொண்டே போகின்றன. குறிப்பாக இளம் சந்ததியினரிடையே வன்செயல்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இதிலும் குறித்த பதின்ம வயதுப்பிள்ளைகளின் பழக்கவழக்கங்கள் எமது பண்பாட்டு விழுமியங்களை அழியவைக்க கூடியவையாகவே அமைகின்றன.

முக்கியமாக இன்று "போதைப்பொருள் பாவனை" என்பது யாழில் தலைவிரித்தாடுகின்றது. இதற்கு அடிமையானவர்கள் பெரும்பாலும் பாடசாலை மாணவர்களே. முன்பெல்லாம் யாழ் மண்ணில் நடமாடுபவரை யார், எந்த இடத்தைச் சேர்ந்தவர், ஏன் வருகிறார் என்று ஓரளவிற்கு ஊகிக்ககூடிய நிலையிருக்கும். ஆனால் தற்போது அவ்வாறான சூழல் இல்லை. பல்வேறு விதமான அந்நிய மனிதர்களும் நடமாடுகின்றனர். இவர்களெல்லாம் ஏன், எதற்கு வருகிறார்கள் என்பதே மக்களுக்கு தெரிவதில்லை.

இவ்வாறான நபர்களினூடாக போதைப்பொருட்கள் பெரும்பாலும் மாணவர் களுக்கே விநியோகிக்கப்படுகின்றது. போதைவஸ்தின் சுவை எப்படியிருக்கும் என ஆராயும் நோக்கில் சுவைத்துப்பார்த்த பல மாணவர்களே அதற்கு அடிமையாகியுள்ளனர் என்பதும் வருத்தத்திற்குரியது. போதைப் பொருள் விற்பனையானது இன்று வருமானம் ஈட்டும் தொழிலாகவும் பலரால் தேர்ந் தெடுக்கப்படுகின்றது.

உதாரணமாக கணவனை இழந்த, வறுமையால் வாடும் குடும்பத் தலைவிகளை போதைப்பொருள் விநியோக முகவர்கள் அணுகி, இவ்வாறு போதைப்பொருள் விற்றால் பெருமளவு பணமீட்டலாம் என அவர்களுக்கு மூளைச்சலவை செய்து, அவர்கள் ஊடாக சமூகத்தில் இரகசியமாக இதன் விற்பனையை விஸ்தரிக்கின்றனர். இதில் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவங்களே எமக்கு தெரிகின்றது. ஏனையவை வெளியே தெரிவதில்லை.

கையில் பேனா பிடிக்க வேண்டிய வயதிலுள்ளவர்கள் இன்று வாளுடன் இரத்த வெறிகொண்டு சுற்றித்திரிகின்றனர். சாதாரணமாக இருக்கும் ஒருவனால் இவ்வாறு செய்ய முடியாது. இதற்கெல்லாம் இந்த போதைப்பொருள் பாவனையே காரணமாகும். பணக்காராக வேண்டும் என்ற பேராசையினால் குறுக்குவழியில் பணத்தை தேட முற்படுவோருக்கும் கைகொடுப்பது போதைப்பொருள் விற்பனையேயாகும்.



இவ்வாறிருக்க இன்னொரு பக்கம் ட்டிக்குப் பணம்பெறுதல்" என்பது று யாழில் பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அதாவது, பல காப்புறுதி நிறுவனங்கள், வங்கிகள் என பல பொருளாதார நிறுவனங்கள் விதம்விதமாக உருவெடுத்தது மட்டுமல்லாமல் மக்களை தேடித்தேடி வட்டிக்குப்பணம் கொடுக்கின்றனர்.

இந்த வலையில் படிக்காதவர்கள் மட்டுமன்றி படித்தவர்கள் கூட முகவர்களின் தந்திரோபாய பேச்சுக்களில் மயங்கி தமது முதலீட்டை இழப்பது மட்டுமல்லாமல், அதிகரித்த வட்டியாலும், வட்டிகட்ட இயலாமையினாலும் அல்லலுறுகின்றனர்.

சிலர் இவ்வாறான அதிகரித்த வட்டிகளை கட்டமுடியாது, தமது சொத்துக்களை இழந்தது மட்டுமல்லாமல், உயிரையும் மாய்க்கும் அளவிற்கு துணிகின்றனர். தமது வருமானத்தை கருத்திற்கொள்ளாது, கண்மூடித்தனமாக பெருந்தொகைப் பணத்தை வட்டிக்குப்பெறுகின்றனர். நிதிநிறுவன முகவர்களும் மக்களை இவ்வாறு மூளைச்சலவை செய்கின்றனர். ஆனால் பொருளாதார ரீதியாக தாம் சுரண்டப்படுவதை உணராதவர்களாகவே பல மக்கள் உள்ளனர்.



### கலாஜோதி பட்டமளிப்பு விழா லண்டன்

கலாஜோதி பட்டமளிப்பு விழா லண்டன். Oriental Examination Board London வருடா வருடம் வாய்ப்பாட்டு , வயலின், மிருதங்கம், நடனம்,போன்ற, கலைகளில் பட்டம் பெற்ற மாணவர்களைக் கௌரவித்து வருகிறது. இவ்வருடம் Harrow மாநகர பிதா Clli Rekha Shah அவர்களின் தலைமையில் 25.11.2017 லண்டனில் சிறப்பாக நடைபெற்றது. பட்டமளிப்பு விழாவில் யேர்மனியில் காகன் நகரத்தைச் சேர்ந்த சங்கீத, வயலின் ஆசிரியை இசைக்கலைமணி திருமதி சர்மிளா பிரேமானந்தனின், மாணவர்களான **மிதுர்ஷன் முருகதாஸ், நிதர்சிகா குமாரவேல்** ஆகியோர் வயலினில் சங்கீதக் கலாஜோதி பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டனர், இப்பட்டமளிப்பு விழாவில் ஐரோப்பாவில் இருந்து 150 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கௌரவம் பெற்றனர்.


Nandy's Catering & Partyservice

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
**பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!**
அனைவருக்கும் எங்கள் இனிய
தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

ஒரே குடையின் கீழ்
எங்கள் சேவை!

Mobil 0173-7424955
Tel:0211 76 91 974

உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளோம்


NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf

www.Nandys.de
e.mail:info@nandys.de


அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்




## என்ன செய்யலாம் புத்தாண்டில் ?




ஒவ்வோர் ஆண்டும் சனவரி மாதம் ஒன்றாம் தியதி வந்ததும் நமக்குள் ஒரு இனம்புரியா உற்சாகம் கரை புரளும். "இன்று முதல்" என ஒரு நாலைந்து தீர்மானங்களை அடுக்கி வைப்போம். டைரியின் முதல் பக்கத்தை ஒரு நல்ல வசனத்தோடு துவங்கவும் செய்வோம்.
அந்த தீர்மானங்களின் ஆயுள் எவ்வளவு ? அதிக பட்சம் சில வாரங்கள் மட்டுமே ! சில தீர்மானங்கள் சில நாட்களிலேயே காலுடைந்து விடுவதும் உண்டு.

### எந்த செயலைச் செய்தாலும் அதை இறைவன் பார்க்கிறார் எனும் உணர்வுடன் செய்வோம்.

வீழ்தல் தவறல்ல, எழுந்தே ஆகவேண்டும் எனும் உத்வேகம் மனதில் உள்ளவரை.
தவறுதல் தவறல்ல, சரியை நோக்கியே பாதங்கள் பயணிக்கும் வரை. எனவே இந்த புத்தாண்டையும் சில வாக்குறுதிகளோடு வரவேற்போம்.

1. எந்த செயலைச் செய்தாலும் அதை இறைவன் பார்க்கிறார் எனும் உணர்வுடன் செய்வோம். ஆன்மீக செயல்களை மட்டுமல்ல, உலகப் பணிகளைக் கூட இறைவனின் பணியாகவே நினைத்து ஆத்மார்த்தமாய் செய்வோம். பணியிடங்களில் நமது நேர்மை, உண்மை, அர்ப்பணிப்பு இவற்றின் மூலம் இறைவனை மகிமைப்படுத்துவோம்.

2. நமது ஒவ்வொரு வார்த்தைக்கும் கணக்கு கொடுக்க வேண்டும் எனும் மனநிலையோடு வார்த்தைகளைப் பயன்படுத்துவோம். இயேசு நம் அருகில் இருந்தால் எப்படிப் பேசுவோமோ, அப்படிப்பட்ட வார்த்தைகளை மட்டுமே பேசுவோம்.

3. கிசு கிசு பேசவே மாட்டேன் என முடிவெடுப்போம். ஒருவரைப் பற்றிப் பேசவேண்டுமெனில் நல்லதை மட்டுமே பேச முயல்வோம். அல்லதை விடுவோம். அதுவும் முழுமையாய்த் தெரியாத உண்மையைப் பேசுவதை அறவே தவிர்ப்போம்.

4. பேராசை தவிர்ப்போம். "எது இல்லாமல் ஒரு மனிதனால் வாழ முடியுமோ, அது இல்லாமல் வாழ்வதே சிறந்தது" என சிந்திப்போம். இறைவன் தந்த பொருளாதார எல்லைக்குள் ஆனந்தமாய் வாழ்வோம். அதைத் தாண்டிய ஆசைகள் எல்லாம் நம்மை பாவத்துக்கே அழைத்துச் செல்லும்.

5. வாழ்க்கைத் துணையிடம் அன்பாக நடந்து கொள்வதென முடிவெடுப்போம். இறைவன் தந்த துணையை காயப்படுத்தும் அத்தனை விஷயங்களையும் தவிர்ப்போம். எதிர் தரப்பிலிருந்து காயம் தரும் செயல்கள் வந்தால் கூட இறைமகன் இயேசுவிடம் வலிமை பெற்று துணையை ஆத்மார்தமாய் அன்பு செய்வோம்.

6. பெற்றோரைப் போற்றுவோம். அவர்களுடன் தினமும் உரையாடுவது, அவர்களைச் சந்திப்பது, தேவைகளில் உதவுவது என அனைத்து விஷயங்களையும் செய்வோம். நமது ஆன்மீக வாழ்க்கைக்கு இடைஞ்சலான அறிவுரைகளோ, கட்டாயங்களோ அவர்களிடமிருந்து வந்தால் அவற்றை மட்டும் தவிர்ப்போம்.

7. ஆன்மீக வாழ்வுக்கு அடிப்படையான குடும்ப செபத்தை தொடர்ந்து செய்வதென முடிவெடுப்போம். காலையிலும், இரவிலும் செபிக்கும் பழக்கத்தை வலுக்கட்டாயமாகவேனும் நமது நடைமுறையாக்குவோம்.இறை வார்த்தைகளை வாசித்து தியானித்து செபிக்கும் இல்லங்கள் இறை ஆசீரில் நிரம்பும்.

8. ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு நபருக்கு ஒரு சின்ன மனிதாபிமான உதவியைச் செய்ய முடிவெடுப்போம். அது பண உதவியாகவோ, ஆறுதல் வார்த்தையாகவோ, நேரம் செலவிடுவதாகவோ எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். மனித நேயம் ஒவ்வொரு கணமும் உயிர்ப்புடன் இருக்கட்டும்.

9. சமூக வலைத்தளங்கள், வாட்ஸப், டுவிட்டர் போன்றவை உங்கள் நேரத்தை அழிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். குறிப்பிட்ட நேரம் அதற்கு ஒதுக்கி, மற்ற நேரங்களை பயனுள்ள வகையில் செலவிடுங்கள். தேவையற்ற சேட் செயலிகளை அன் இன்ஸ்டால் செய்து விடுங்கள். வாரம் ஒரு நாள் அதை விட்டு முழுமையாய் விலகியே இருப்போம்.

10. நமது உடல் இறைவனின் ஆலயம். அதையும் கவனமுடன் பாதுகாக்க வேண்டும். தவறான பழக்கங்கள் உடல் எனும் ஆலயத்தை அழிக்கும். எந்த ஒரு செயலைச் செய்யும் போதும் இதை நான் ஆலயத்தில் வைத்து செய்ய முடியுமா ? என யோசியுங்கள். பல விஷயங்கள் விடை பெற்று விடும். உடலை நலமாய் வைத்திருக்க தேவையான உடற்பயிற்சி, சரியான தூக்கம் போன்றவற்றை தொடர்வோம்.
இந்த ஆண்டு நம்மோடு பணம் இல்லாமல் போகலாம், பதவி இல்லாமல் போகலாம், நண்பர்கள் இல்லாமல் போகலாம்.
ஆனால் ஆண்டவர் இல்லாமல் போகக் கூடாது. இந்த ஒரு சிந்தனையை மட்டும் மனதில் ஆழமாய் எழுதுவோம்.
இந்த ஆண்டு நமக்கு ஆன்மீக வளங்களைத் தரும் ஆண்டாய் மலரும்.

**வேலைக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.!**
பகுதி நேர வேலைக்கு எமக்கு ஆள் தேவை
உடன் தொடர்பு கொள்ளவும்.
**BCN TRAVELS** Tel: 0231- 108 763 61



# கடலில் அருங்காட்சியகம்

வ.சிவராஜா



மத்திய கிழக்கு நாடான ஐக்கிய அரபுக் குடியரசு (United Arab Emirates) நாட்டின் தலைநகரமான அபுதாபியில் ஒரு அதிசயம்.
அபுதாபி (Abu Dhabi) ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைநகரமாகவும் நாட்டின் ,ரண்டாவது பெரிய நகரமாகவும் உள்ளது. இந்நாட்டின் கூட்டமைப்பிலுள்ள ஏழு அமீரகங்களில் மிகப் பெரியதான அபுதாபி அமீரகத்திலுள்ள இந் நகரம் அவ்வமீரகத்தின் தலைநகரமும் ஆகும். இது பாரசீக வளைகுடாவின் மத்திய மேற்குக் கரையில் .இருந்து வளைகுடாவுக்குள் துருத்திக் கொண்டிருக்கும் "T" வடிவமான தீவொன்றில் அமைந்துள்ளது. 67,340 ச.கி.மீ (26,000 ச.மை) பரப்பளவு கொண்ட அபுதாபி நகரத்தில் 860,000 மக்கள் வாழ்கிறார்கள்.
உலகின் செலவு கூடிய நகரங்களின் வரிசையில் 26 ஆவது இடத்தில் அபுதாபி உள்ளது. மத்தியகிழக்கு நாடான அதுவும் ஒரு குட்டிநாட்டின் தலைநகரமான அபுதாபியில் ஒரு அதிசயம் நிகழ்ந்திருக்கின்றது.

அதாவது கடலுக்குள் பிரமாண்டமான அருங்காட்சியகம் ஒன்றைக் கட்டித் திறந்து வைத்துள்ளது. சிறிய நாடாக இருந்தாலும் எண்ணெய் வளத்தால் மிகவும் பணக்கார நாடாகத்திகழ்கின்றது. இது மட்டுமல்லாமல் உலக நாடுகளின் மையப்பகுதியில் இந்த நாடு அமைந்துள்ளபடியால் அனேகமான நாடுகளின் விமானங்கள் இங்குதான் தரித்துச் செல்கின்றன. இதனால் அந்தநாட்டிற்கு எண்ணெய் விற்பனையால் பெருந்தொகைப்பணம் வருடாவருடம் கிடைக்கின்றது. இத்தோடு சுற்றுலாப் பயணிகளின் வருகையும் வருடம்தோறும் அதிகரித்துச் செல்வதால் அதன் வருமானங்களும் பன்மடங்காகும்.
அந்த நாட்டில் நிலப்பற்றாக்குறை நிலவுவது இயல்பாகும். அங்கு சகல வேலைகளையும் செய்பவர்கள் 90 வீதமானோர் வெளிநாட்டவர்கள்தான். அதுவும் இந்தியத் தொழிலாளர்கள்தான் மிக அதிகம்பேராவர். இங்கு நிலம் காணாதபடியால் கடலுக்குள் மண்ணை நிரவிப் பிரமாண்டமான இந்த அருங்காட்சியத்தைக் (Museum) கட்டிக் கடந்த 08-11-2017ம் திகதியன்று திறந்து வைத்துள்ளது இந்த நாடு.

இந்தக் கட்டிட வளாகம் கட்டுவதற்கு கடந் 02-09-2007ம் திகதியில் அடிக்கல் நாட்டப்பட்டது. 24.000 சதுர மீட்டர் (2.60.000 சதுரஅடி) நீர்ப்பரப்பில் கடலை மண்ணால் நிரவிப் பிரமாண்டமாகக் கட்டப்பட்டுள்ளது. இதன் கட்டுமானப் பணிகளின் திட்டமிடல் கட்டிட வடிவமைப்பு அனைத்தையும் பிரான்ஸ் நாடே மேற்கொண்டது. அப்போதய பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதியாக இருந்த (Nocolas Sarkozy) நிக்கோலஸ் சாக்கோசி கட்டுமானப் பணிகளுக்கு அத்திவாரமிட்டுத் தொடக்கி வைத்தார். பத்து வருடங்கள் கட்டுமாண வேலைகள் நடைபெற்று கடந்த 08-11-2017 அன்று திறப்பு விழாவில் தற்போதய பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதி (Emmanuel Macron) இம்மானுவல் மக்கோன் அவர்கள் கலந்துகொண்டிருக்கிறார். இக்கட்டிடத்தை வடிவமைத்த (Architect) பிரான்ஸ் நாட்டவரின் பெயர் ஜீன் நொவல் (Jean Nouvel) இக்கட்டிடத்தைக் கட்டிமுடிக்க 600 மில்லியன் யூரோ செலவாகியுள்ளதாம்.
மத்தியகிழக்கில் மட்டுமல்ல உலகிலேயே கடலுக்குள் இப்படி ஒரு அருங்காட்சியகம் அமையப்பெற்றது அதிசயமாகும். இந்தக் கட்டிடத் தொகுதிக்குள் உலக அருங்காட்சிப் படங்கள், நூலகங்கள், பல்கலைக் கழகம், வழிபாட்டுத்தலம், விடுதிகள், உணவுச்சாலைகள், உடற்பயிற்சிக் கூடங்கள், சிற்றுண்டிச்சாலைகள், கடைகள், சுற்றுலா மையங்கள், பொழுதுபோக்கு இடங்கள், கணனி நிலையங்கள், பாதுகாப்பு அணிகள், வாகனங்கள், வங்கிகள் என அனைத்தும் அடங்கியுள்ளன. அபுதாபி விமான நிலையத்துக்கு உடனுக்குடன் செயலக்கூடியவாறு போக்குவரத்து சேவைகள் இணைக்கப்பட்டுள்ள.
காசு இருந்தால் என்னதான் செய்யமுடியாது?...பணம் பாதாளம் வரை பாயும் என்றும் சொல்லுவார்கள் நம்மவர்கள். புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் நம்மவர்கள் தாயகம் செல்லும்போது அபுதாபியில் இறங்கி இந்த மியூசிய வளாகத்தைக் கண்டுகளித்துச் செல்லுங்கள். பார்த்ததை, ரசித்ததை பகிர்ந்து கொள்ளுங்கள். யாம் பெற்ற இன்பம் வையகம் பெறட்டும்!....

## இலங்கை மட்டக்களப்பில் 31 பேருக்கு எய்ட்ஸ்!



இலங்கையில் உள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த ஆண்டு டிசம்பர் வரை 31 பேருக்கு எய்ட்ஸ் நோய் இருப்பதாக மருத்துவர் தெரிவித்துள்ளார். அவர்கள் அனைவரும் எய்ட்ஸ் நோய் கட்டுப்பாட்டு பிரிவில் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை பெற்று வருவதாகவும் மருத்துவர் தெரிவித்துள்ளார்.
31 பேர் என்பது சிறிய தொகை என எண்ண முடியாது. இவர்கள் யாரிடம் பெற்றார்கள்,இன்னும் இலைமறையாக எத்தனை என்று கணக்கிடமுடியாது.
கல்வியிலும், பொருளாதாரத்திலும், எமது இனம் கீழே செல்ல எயிட்ஸ் மட்டும் மேலே ஏறுமுகமாகச் செல்கிறது.






# உப்பு அதிகரித்தாலும் நோய்

## இல்லாவிடினும் நோய்!!!

**டாக்டர் எம்.கே.முருகானந்தன்**
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
**குடும்பவைத்தியர்**

எமது பண்பாட்டில் உப்பு முக்கிய இடத்தைப் பெறுகிறது. இதனால் தாய்மொழியில் பழமொழிகளும் வாய் மொழிகளும் உப்பைப் பற்றிப் பரவலாகப் பேசுகின்றன.
"உப்பிட்டவரை உள்ளவும் நினை..", "உப்பிலாப் பண்டம் குப்பையிலே..", "உப்புச் சப்பில்லாத விடயம்.." இவ்வாறு பல.
"பச்சை மிளகாய் சம்பல் நல்ல ரேஸ்டாக இருக்கு" சப்புக் கொட்டிக் கொண்டு சாப்பிட்டார் அவர். கடுகு போட்டு தாளித்த பச்சை மிளகாய்த் தேங்காய் சம்பலை வெள்ளைமா இடியப்பத்துடன் சேர்த்து அள்ளி வாயில் போட்டு சுவைத்தார்.
இவருடன் சேர்ந்து இருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த மனைவியும் மகளும் அவர் சொன்னதைக் கேட்டு ஆச்சரியத்துடன் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்தார்கள்.

"இந்த மனுசனுக்கு நாக்கு கெட்டுப் போச்சு" என்றாள் மனைவி.

"கடைக்காரன் உப்பை அள்ளிப் போட்டிட்டான் போல கிடக்கு" என மகள் மனம் நோகாமல் கொமன்ட் பண்ணினாள்.

**எமது உணவில் உப்பு**

மொழி மத வேறுபாடுகளைக் கடந்து இலங்கையர்களான நாம் அனைவருமே உப்புப் பிரியர்களாக இருக்கிறோம். தினசரி உட்கொள்ளக் கூடிய உப்பின் அளவானது 3.75 முதல் 5 கிராம் மட்டுமே இருக்க வேண்டும் என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருந்தபோதும் நாங்கள் 12.5 கிராம் வரை உட்கொள்கிறோம்.
இலங்கையில் ஆண்கள் பெண்களைவிட அதிகமாக உப்பை உட்கொள்கிறார்கள் என இலங்கை சுகாதார அமைச்சு வெளியிட்ட ஒரு அறிக்கையில் தெரிவித்திருப்பதை இவ்விடத்தில் ஞாபகப்படுத்தலாம்.

அதிலும் முக்கியமாக 20 முதல் 60 வயதுவரையான ஆண்கள், அவர்கள் நகர்புறத்தைச் சார்ந்தவர்களானாலும் சரி கிராமங்களைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி அதிகமாக உப்பை உள்ளெடுக்கிறார்களாம்.

சோற்றுக்கு உப்புப் போட்டுச் சமைப்பதும், கறிகளுக்கு உப்பும் உறைப்பும் செழிக்கப் போடுவதும் எமது தேசத்தின் பழக்கம். அதற்கு மேல் கடையில் வாங்கும் துரித உணவுகள் உப்பைத் தாரளமாகக் கொட்டித் தயாரிக்கப் படுகின்றன.
கிழக்கு ஆசிய நாட்டவர்களான நாம் மேலைத் தேசத்தவர்களை விட அதிகம் உப்பை உண்கிறோம் என்பதும் குறிப்பிடத்தக்கது. உப்பு என்பது NaCl. அதிலுள்ள சோடியம் (Na) எனும் கனிமம்தான் பாதகங்களுக்கு முக்கிய பங்களிக்கிறது

**அதிக உப்பின் பாதக விளைவுகள்**

உப்பை அதிகம் உட்கொண்டால் பிரஷர் வரும், ஏற்கனவே பிரஷர் உள்ளவர்களுக்கு மேலும் அதிகரிக்கும் என்பது எல்லோருக்குமே தெரிந்த செய்திதான். அதே நேரம் தினசரி 12 கிராம் உப்பை உட்கொண்டவர் அதனை 3 கிராம் ஆகக் குறைத்தால் பிரசரானது 3.6 முதல் 5.6 ஆல் குறையும் என ஆய்வுகள் சொல்லுகின்றன.
ஆனால் அதிக உப்பானது மாரடைப்பு மற்றும் பக்கவாதம் வருவதற்கான சாத்தியத்தையும் அதிகரிக்கும் என்பது பலரும் அறியாத செய்தியாக இருக்கலாம்.

உப்பு அதிகரிப்பதால் பிரஷர் அதிகரிக்கும். அதனாலதான் மாரடைப்பு பக்கவாதம் ஆகியன வரும் என நீங்கள் எண்ணலாம். ஆனால் பிரஸர் அதிகரிப்பதால் மட்டும் இவ் ஆபத்துக்கள் வருவதில்லை. அதீத உப்பு நேரடியாகவே இரத்தக் குழாய்களிலும், இருதயத்திலும் பாதிப்புகளை ஏற்படுத்தி மாரடைப்பையும் பக்கவாதத்தையும் கொண்டு வரும் என்கிறார்கள் மருத்துவ ஆய்வாளர்கள்.



ஆனால் உட்கொள்ளும் உப்பின் அளவை 12 கிராமிலிருந்து 3 கிராம் ஆகக் குறைத்தால் பக்கவாதம் வருவதற்கான சாத்தியம் நாலில் ஒரு பங்காலும், இருதய நோய்கள் வருவதற்கான சாத்தியம் மூன்றில் ஒரு பங்காலும் குறையும் என்ற நல்ல செய்தியையும் ஆய்வுகள் கூறுகின்றன.

அதீத உடல் எடைக்கு தவறான உணவு முறைதான் காரணம் என்ற போதும் கூடுதலாக உப்பு உட்கொள்வதும் ஒரு காரணமாகும்.

எண்ணெய், கொழும்பு, இனிப்பு மற்றும் மாப் பொருட்களை அதிகம் உட்கொள்வதே தவறான உணவு முறை என நாம் பொதுவாகக் கருதினாலும் அதிகமாக உப்பை உட்கொள்வதும் அதில் சேர்த்தியே.

உப்பை அதிகம் சேர்த்தால் தாகம் அதிகமாகும். தாகம் அதிகமாதால் இனிப்புள்ள பானங்களை அடிக்கடி அருந்துவம் எடை அதிகரிப்பிற்கு ஒரு காரணமாகிறது. முக்கியமாக குழந்தைகள் நொறுக்குத் தீனிகளை அடிக்கடி சாப்பிடுகிறார்கள். இவற்றில் உப்பு அதிகம். இதனால் ஏற்படும்தாகத்தைத் தணிக்க மென் பானங்களையும் இனிப்புள்ள ஜீஸ் வகைகளையம் குடிக்கிறார்கள். இதானால் எடை அதிகரித்து குழந்தைகள் குண்டாகிறார்கள். 'இவன் சாப்பிடுறதே இல்லை ஆனால் குண்டாகிறான்' என அம்மாமார் சொல்வதுண்டு. அதற்கான காரணம் இப்பொழுது புரிகிறது அல்லவா?

இரைப்பை புற்றுநோய்
ஓஸ்டியோபொரோசிஸ்
சிறுநீரகக் கற்கள்
ஆஸ்த்மா பாதிப்பு தீவிரமடைதல்

போன்ற பல பிரச்சனைகளுக்கும் உப்பு காரணமாக இருக்கிறது என்பதை மறக்காதீர்கள்.

**தொடர்ச்சி 11ம் பக்கம்...**



## உப்பு அதிகரித்தாலும் ......

09 பக்கத் தொடர்ச்சி

### மறைந்திருக்கும் உப்பு உணவுகள்

'இவருக்கு பிரஷர் என்றபடியால் நான் உப்போ போட்டு சமைப்பதில்லை' என்றார் ஒரு இல்லத்தரசி. அவ்வாறு சமைப்பது நல்லதா கூடாதா என்பதையிட்டு பிறகு பார்க்கலாம். ஆனால் அவள் உப்பு போடாவிட்டாலும் கூட வேறு பல வழிகளில் அதீத உப்பு வேறு உணவுகள் வழியாக அவரையும் எங்களையும் சென்றடையும் என்பதை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

இன்று உணவு என்பது முற்று முழுதாக வீட்டு உணவு அல்ல. உணவகங்களில் கிடைக்கும் உணவுகளை அடிக்கடி உட்கொள்ள நேர்கிறது. அவற்றில் உப்பு அதிகமாகவே இருக்கிறது.

அதற்கு மேலாக பதப்படுத்தப்பட்ட உணவுகளையும் உண்ண நேர்கிறது. அவற்றில் பெரும்பாலும் உப்பின் செறிவு அதிகமாகவே இருக்கிறது.

பதப்படுத்தப்பட்ட இறைச்சி வகைகள், ஹம்பேர்கர் போன்ற இறைச்சி வகைகள், சோஸ் வகைகள், ஊறுகாய், அச்சாறு போன்றவை அதீத உப்பிற்கு நல்ல உதாரணங்களாகும்.

ஆனால் இவற்றில் மட்டுமின்றி நாம் சந்தேகிக்காத பல உணவுகளிலும் உப்பு அதிகமாக இருக்கிறது. பாண், கேக், பிஸ்கற் போன்றவற்றைச் சொல்லலாம்.




பிள்ளைகளும் பெரியவர்களும் விரும்பிச் சாப்பிடும் பொட்டேட்டோ சிப்பஸ் போன்ற பெரியல் வகைகளில் நிறைய உப்பு இருக்கிறது. பக்கற்றில் கிடைக்கும் உருளைக் கிழங்கு பொரியல் மாத்திரமின்றி, மரவெள்ளி, பாகற்காய் பொரியல்கள் யாவுமே உப்புப் பாண்டங்கள்தான்.

ஒவ்வொரு ரோல்ஸ்சிலும் 230 மிகி வரையும், பிட்ஷா ஒரு துண்டில் 760 மிகி சோடியும் இருக்கிறதாம். பற்றிஸ், சமோசா, மிக்ஸர் போன்றவை சற்றும் குறைந்தவை அல்ல.

போத்தலில் அடைக்கப்பட்ட மினரல் வோட்டர்களின் சோடியச் செறிவு அதிகம் இருக்கலாம்.

சில வகை மருந்துகளிலும் யே அதிகமாக உண்டு. அஸ்பிரின், பரசிற்றமோல் போன்ற மருந்துகள் கரையக் கூடிய மருந்துகளாகக் கிடைக்கின்றன. சோடியம் பை கார்பனேட் சேர்ப்பதாலேயே அவை கரையக் கூடிய தன்மையைப் பெறுகின்றன. இவற்றில் சிலதில் உள்ள சோடியமானது ¼ தேக்கரண்டி உப்பின் அளவிற்கு இருப்பது குறிப்பிடத்தக்கது. ஒருவரின் தினசரி உப்பு உட்கொள்வு ஒரு தேக்கரண்டியளவே இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

வலிக்கு பொதுவாக உட்கொள்ளபப்டும் டைகுளோபெனிக் மருந்தில் சோடியும் (Diclofenac Na) உள்ளது. இதனால்தான் வலி மாத்திரைகளை அளவு கணக்கின்றி உபயோகிக்கும் நோயாளிகளுக்கு பிரஷர் நோய் வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மருத்துவர்கள் பொதுவாக பழவகைகளையும் காய்கறிகளையும் உணவில் அதிகம் சேர்க்கச் சொல்வார்கள். இதற்குக் காரணம் அவற்றில் உள்ள நார்ப்பொருளாகும். அவை உணவு உறிஞ்சப்படுவதை தாமதப்படுத்துவதால் நீரிழிவு அதிகரிக்காதிருக்க உதவுவதுடன் எடை அதிகரிப்பையும் குறைக்கும் என்பதாலாகும்.

ஆனால் பெரும்பாலான பழங்கள் மற்றும் காய்களிகளிலுள்ள கனிமமான பொட்டாசியமானது, உப்பில் உள்ள சோடியத்தின் பாதிப்பை குறைக்கும் என்பதையும் வலியுறுத்தலாம். எனவே உணவில், பழவகைகளை அதிகம் சேருங்கள்.

### குருதியில் உப்பு குறைதல்

குருதியில் உப்பு குறைதலை மருத்துவத்தில் (Hyponatremia) என்பார்கள். ஆனால் இது உணவில் உப்பைக் குறைப்பதால் ஏற்படுவதல்ல. இருதய வழுவல், சிறுநீரக வழுவல், ஈரல் சிதைவு, தைரோயிட் குறைபாடு போன்ற நோய்களால் ஏற்படும். கடுமையான வயிற்றோட்டம் வாந்தி போன்றவற்றால் நீரிழப்பு நிலை ஏற்படுவ்தாலும் இது ஏற்படலாம். இவை மருத்துவர்களால் உடனடியாக அணுக வேண்டிய பிரச்சனைகள் ஆகும்.

இருந்தபோதும் உணவில் உப்பின் தினசரி அளவை 1.5 கிராம் அளவிற்கு கீழ் குறைப்பது நீரிழிவு இருதய வழுவல் சிறுநீரக வழுவல் போன்ற பிரச்சனை உள்ளவர்களுக்கு நல்லதல்ல என அண்மைய மருத்துவ அறிக்கைகள் கூறுகின்றன.

இறுதியாக

உணவில் உப்பைக் குறையுங்கள். ஒருவரது தினசரி உப்புத் தேவை ஒரு தேக்கரண்டிக்கு மேற்படக் கூடாது. உப்பு அதிகமுள்ள பதப்படுத்தப்பட்ட மற்றும் கடை உணவுக்ளை ஒதுக்குங்கள். உப்பைக் குறைப்பது நல்லது.

ஆனால் முற்று முழுதாக உப்பில்லாத உணவு அவசியமல்ல.


பழவகைளை உணவுகள் அதிகம் சேருங்கள். பொதுவாக பலதரப்பட்ட போசாக்குகளும் அடங்கிய சமச்சீரான உணவுகள் (Balanced food) ஆக உட்கொள்வது நல்வாழ்வற்கு உகந்தது.



நன்றி: தமிழர் தகவல்- கனடா





# எங்கு போகின்றோம் ஏன் போகின்றாம் யாவும் பெற்றோருக்கு சொல்ல வேண்டுமா?

றஜினா தருமராஜா

இளம் வயதினரிலிருந்து முதியவர் வரை கேட்டு விடயங்களைச் சேகரித்துக் கொண்டேன்.
ஒரு தந்தை கூறினார்:
பெற்றோர்களுக்கு பிள்ளைகள் எங்கு போகின்றார்கள் என்று கூறும் பொழுது பிள்ளைகள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்கின்றார்கள் என்பது எனது கருத்து. எல்லா பெற்றோரின் கருத்தும் இவ்வாறே தான் இருக்கும்.
பிள்ளைகள் தாய் தந்தையருக்குக் கூறாமல் வெளியே சென்றால், பிரச்சினைகள் ஏற்படும் போது எங்கு சென்று பிள்ளைகளைத் தேடுவார்கள்? தெரிந்தால் சிறிதேனும் இலகுவாக இருக்குமல்லவா! பிரச்சினை, இடர் என்பது மற்றவர்களுக்கு மட்டுமல்ல எங்களுக்கும் உங்களுக்கும் கூட வரலாம். பெற்றோருக்கு
பிள்ளைகள் மீது நம்பிக்கை ஏற்படுமல்லவா!
ஆகையால் ஒன்றும் சொல்லாமல் பெற்றோரைத் துன்பப் படுத்தாதீர்கள் என்றார்!
தொடர்ந்து கூறுவது இளம் பிள்ளை ஒருவர்:

பெற்றோர்கள் கடினமாக நடந்து கொள்வதால் சொல்லாமலே வெளியே செல்கிறோம் என்கின்றனர். நண்பர்களுடன் வெளியே செல்லப் போகின்றோம் என்றால், இல்லை என்று கூறி தடுத்து விடுவார்கள். எங்களுக்கு எங்களைப் பாதுகாக்கத் தெரியுமல்லவா! சில சமயங்களில் நாங்களாகவே முடிவெடுக்க வேண்டும்.
முடிவுகள் எடுக்கப் பழகிக் கொள்ள வேண்டும் என்றார்.
அடுத்ததாக ஒருவர் வாதாடினார்:
நான் எனது பெற்றோரிடம் சொல்லி வெளியே செல்வேன் என்றார். அவர்களுக்கு நான் பாதுகாப்பான இடத்தில் நிக்கிறேன் என்பதை தெரிவிப்பது முக்கியம் என்றார். பெற்றோர்கள் கடினமாக இருப்பது எங்களது நன்மைக்கே. அவர்களுக்கு மரியாதை கொடுத்து எங்கு ஏன் போகின்றோம் என்பதை கூற வேண்டும். அவர்களிடம் புரியும்படி எடுத்துக் கூறி வெளியே சென்று வாருங்கள் என்றார்!

பெண் ஒருவர் கூறியவை:

ஒரு குறிப்பிட்ட வயதுவரை பெற்றோருக்கு வெளியே செல்கிறோம் என்று கூறுவதும் அவர்கள் கவனம் எடுப்பதும் நல்ல விடயம், அவர்களின் கடமையும் கூட என்றார்.
இளம் வயதில் ஏமாந்து போகாமல் நேர் வழியைக் காட்டுபவர்கள் அம்மாவும் அப்பாவும் மட்டுமே! அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூற ஆசைப்படுகிறேன். அவர்களை விட வேறு யார் எங்கள் மீது அக்கறை காட்டமுடியும். அவர்களின் உணர்வுகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.
இவ்வுலகம் எவ்வளவு வளர்ச்சி அடைந்தாலும், எங்கள் தாய் தந்தையினரது அனுபவங்களுக்கு ஈடாகாது!
எங்களுக்கு ஒரு வயதுக்குப் பின் அவர்கள் கேள்விகள் கேட்கும்பொழுது சினம் வரும். நாங்கள் குழந்தைகளோ என்று கூட நினைக்கத் தோன்றும்! ஆனால் எல்லாப் பெற்றோருக்குமே அவர்களின் பிள்ளைகள் ஐம்பது, அறுபது வயது ஆனாலுமே குழந்தைகள் அல்லவா!

ஓர் வயதுக்குப் பிறகு எமக்கு அனுமதி தேவையில்லை. ஆனால் அவர்களை நண்பர்களாய் ஏற்றுக் கொண்டு ஆலோசனை பெற்றுக்கொள்ளலாம்.
எங்கு செல்கிறோம் என்று கூறாமல் விட்டாலும் வெளியே சென்று வருகிறேன் என்றாவது சொல்லுங்கள்.
பெற்றோர்கள் குழந்தைகளாக மாறும் பொழுது அவர்கள் பிள்ளைகளிடம் எங்கு செல்கிறார்கள் என்று கூறவேண்டுமல்லவா!

வருடங்கள் கடந்து சென்றாலும்.... நீ...நீயாகவே இரு! அதாவது நீ குழந்தையாகவே உன் பெற்றோருக்கு இரு

# தனிமைதான் நிரந்தரம்.



அன்பை கேட்டு யாரிடமும் போகாமல்
நான் தனியாய் தான் இருந்தேன்.

அப்போது என் வாழ்வில் புன்னகைகள்
மட்டுமே சொந்தமாயும் இருந்தன.

சரியாய் தூங்கி எழுவதினால் பெருமளவில்
இரவுகளையே நான் பார்த்திருக்கவில்லை...

என்னை நானே நம்பிக் கொண்டிருந்ததால்
என் கண்கள் நனையும் வாய்ப்பும் இருக்கவில்லை...

அழகாய் நகர்து கொண்டிருந்த அந்த நாட்க்களில்
எனக்கு என்ன ஆனதோ தெரியவில்லை..?

தேடி வந்த நேசத்தின் பின் நானே
விரும்பி தொலைந்து போனேன்.

எவரையும் தெரியாத ஊர்களில் எல்லாம்
கை கோர்த்தும் நடந்து போனேன்.

எப்போதும் சாய்த்திடவே தோள் கிடைத்து
விட்டதாகவும் நினைத்திருந்தேன்.

அந்த மகிழ்சியை முழுதாய் அனுபவிக்கும்
முன்னே - ஏனோ நான் தூக்கி எறியப்பட்டேன்.

ஆரம்பத்தில் இருந்ததை போலவே
தற்ப்போதும் தனியாயே இருக்கின்றேன்.

ஆனால் இப்போதும் சந்தோசமாக இருப்பதாக
மற்றவர்கள் முன் நன்றாய் நடிக்கின்றேன்.

நெடுந்தீவு முகிலன்







1st
ANNIVERSARY
K.K.L
Textilien Schmuck Haushaltsware
1 ம் ஆண்டு நிறைவையும், தைப்பொங்கலையும் முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!
12.01.2018 வெள்ளிக்கிழமை,13,01.2018 சனிக்கிழமை இருதினங்கள் மட்டும்
50% முதல் 70% வரை
அனைத்து ஆடைகளும் [ சாறி,சாறி பிளவுஸ், பஞ்சாபி,சேட்,குருதா
மற்றும் சிறுவர் ஆடைகள்]
இமிரேஷன்
நகைகள்
அனைத்தும்
30%
கழிவில்.
12,13- இருதினங்களிலும்
100€ மேல் கொள்வனவு செய்யும்
ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
ஒரு நிச்சய பரிசுப்பொருள் உண்டு.
அனைவருக்கும் எங்கள்
இனிய தைப்பொங்கல்
வாழ்த்துக்கள்
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.
https://m.Facebook.com/kkl.textillenschmuck
வீட்டுச் சமையல் உபகரணங்கள்
கிறைண்டர், மிக்சி, அனைத்திற்கும் நாடுங்கள்
சேலைகளுக்கு பிளவுஸ் தைத்துக் கொடுக்கப்படும்.
Rheinische str.56 - 44137 Dortmund Tel: 0231 96 98 6610

# இன்றைய கணக்கில் அன்று 350 கோடியை வசூலித்த “எம்.ஜி.ஆர். படம்! அடிமைப்பெண்!!!

நூற்றாண்டு விழா கடந்த ஆண்டு சிநப்பாகக் கொண்டப்பட்டது. அப்போது அதற்கு சிறப்பு சேர்க்கும் வகையில், எம்.ஜி.ஆர். ஜெயலலிதா நடிப்பில் வெளியாகி மிகப்பெரிய வெற்றி பெற்ற 'அடிமைப்பெண்' திரைப்படத்தை புதுப்பொலிவுடன் அதி நவீன தொழில்நுட்பத்துடன் 'தி ரிஷிஸ் மூவீஸ்' நிறுவனத்தின் சார்பில் சாய் நாகராஜன். வெளியிட்டார்.






எம்.ஜி.ஆர், அடிமைப்பெண் படத்திற்கு முன், பல படங்களில் ராஜா வேடம் ஏற்று நடித்திருந்தாலும், இந்த படத்தில் தான் முதன்முறையாக ஐரோப்பிய பாணியில் உடை அணிந்து நடித்திருக்கிறார். அவரது கட்டுமஸ்தான புஜங்களும், புடைத்த மார்புகளும், உருண்டு திரண்ட தொடைகளும் தெரியும்படியான் அவரது அந்த தோற்றம்,

52 வயதிலும், அவர் அனைவரும் ரசிக்கும் அழகனாக இருந்தார் என்பதைக்காட்டுகிறது.

சினிமாவில் இருந்து அரசியலுக்கு வந்தவர்களில் மக்கள்திலகம் எம்.ஜி.ஆர். செல்வி ஜெயலலிதா இருவரும் வித்தியாசமானவர்கள். பட்டென்று வந்து ஜொலிக்கவில்லை. படாதபாடு பட்டே வந்தனர். ஜெயலலிதா வின் சாணக்கியத்திற்கு கலைஞரை எதிர்த்து அரசியல் செய்த தகமை ஒன்றே போதும். எம்.ஜி.ஆர் இன்றும் அதே செல்வாக்குடன் மக்கள் மனதில் உள்ளார்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., நடிப்பில் 1969 ம் ஆண்டு வெளிவந்த படம் 'அடிமைப்பெண்'. நகைச்சுவை நடிகர் சந்திரபாபுவும், எம்.ஜி.ஆரும் கடைசியாக நடித்த படம் இது.





இந்த படத்தில் எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும் இரண்டு வேடங்களில் நடித்திருக்கின்றனர். இவர்களுடன் அசோகன், ஆர்.எஸ்.மனோகர், சோ, பண்டரிபாய், ராஜஸ்ரீ, ஜோதிலட்சுமி ஆகியோர் நடித்திருக்கிறார்கள். கே.வி. மகாதேவன் இசையமைத்திருக்கிறார்.

வி.ராம்மூர்த்தி ஒளிப்பதிவு. கே.சங்கர் இயக்கி உள்ளார்.எம்.ஜி.ஆர் பிக்சர்ஸும், இயக்குநர் கே.சங்கரும் அப்போதிருந்த தொழில்நுட்பத்தைக் கொண்டே, பிரம்மாண்டமான முறையில் படத்தை உருவாக்கிய விதம் வியப்புக்குரிய விஷயமாகும்.

## 17.01.2018 மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்களின் 101 வது பிறந்தநாளை முன்னிட்டு சில நினைவலைகள்

ஜெய்ப்பூர் அரண்மனையில் படப்பிடிப்பு, பாலைவனத்தில் ஒட்டகச் சண்டை, க்ளைமாக்ஸில் சிங்கத்துடன், எம்.ஜி.ஆர் நேருக்கு நேர் மோதும் மெய்சிலிர்க்க வைக்கும் காட்சி என பல கமர்ஷியல் அம்சங்களைக் கொண்ட படம் அடிமைப்பெண்.சிங்கத்துடனான சண்டைக்காட்சிக்காக, எம்.ஜி.ஆர் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டார். பாம்பே சர்க்கஸிடம் இருந்து, சிங்கத்தை விலைக்கு வாங்கி, தன்னுடைய சத்யா ஸ்டுடியோவில் பிரத்யேக பயிற்சியாளர் உதவியுடன் ஆறு மாதங்கள் பயிற்சியில் ஈடுபட்டார்.

பாடகர் எஸ்.பி. பாலசுப்ரமணியம், இந்த படத்தில் இடம்பெற்றிருந்த 'ஆயிரம் நிலவே வா' என்ற பாடல் மூலம் தான் தமிழ்த் திரையுலகுக்கு அறிமுகமானார். இசைத்திலகம் கே.வி.மகாதேவன் ஜெயலலிதாவை 'அம்மா என்றால் அன்பு' என்ற பாடலை பாடவைத்தார். ஜெயலலிதா பாடிய முதல் பாடல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த படத்தில் டி.எம்.எஸ் பாடிய 'தாய் இல்லாமல் நானில்லை' என்ற பாடல் எம்.ஜி.ஆருக்கு தாய்மார்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுக் கொடுத்தது. இப்படி சுவாரஸ்யமான அம்சங்களுடனும், திருப்புமுனைகள் நிறைந்த திரைக்கதையுடனும் உருவான இந்த படம் பிரம்மாண்டமான வெற்றிப் படமாக அமைந்து,வெள்ளி விழா கொண்டாடியது. வசூலிலும், அந்த காலத்திலேயே இரண்டு கோடியே முப்பது லட்சம் வசூலித்ததாக சொல்லப்படுகிறது. இன்றைய காலகட்டத்தில் இதன் மதிப்பு 350 கோடியை தாண்டியிருக்கும் என்பது வியப்புக்குரிய விஷயம்.










கலாசூரி திவ்யா சுஜேன்

# நேசம்

நேசமும், பாசமும், கருணையும், கனிவும் காதலில் மட்டுமல்ல யாவுமாய் யாதுமாகி நிற்கும் பரம் பொருளினிடத்து வெள்ளம்போல் உள்ளதை உணர்வதே எம் மெய்ஞ்ஞானம் என உண்மை பக்தியை உளமார தமிழ் மறையில் பாய்ச்சுகிறார் நம் பாரதி.
அனைத்தும் அறிந்தவனாய், அறிந்ததெல்லாம் உணர்ந்தவனாய், உணர்ந்ததெல்லாம் மொழிபெயர்க்க தெரிந்தவனாய் தெரிவதெல்லாம் சிவமென்று கூத்தாடிய சித்தன்.

வெள்ளமடா தம்பி
விரும்பியபோது எய்தி நினது
உள்ளமிசை தான் அமுத
ஊற்றாய் பொழியுமடா



மெய்ஞ்ஞான அறிவினால் நிரம்பி ததும்புகின்ற பரசிவ வெள்ளமானது கிடைப்பதற்கு நாம் நம்மை தயார் நிலைக்கு கொண்டு சென்றாலே போதும், காருண்ய மூர்த்தி கருணா சாகரன் தம் பக்தரிடத்து கொண்ட அளப்பரிய அருளம்பினால் தாமாகவே வந்து ஆட்கொள்வார், ஆகவே நீயாகவே விரும்பம் கொண்டு இறை உணரும் நிலை அடையும் போது, உன் உள்ளத்தில் அமுத ஊற்றை போல சிவ வெள்ளக்கருணை பொழிந்துகொண்டிருக்கும்.

யாண்டும் இந்த இன்ப வெள்ளம்
என்றும் நின்னுள் வீழ்வதற்கே
வேண்டும் உபாயம்
மிகவும் எளிதாகுமடா

மின்னல் வேகத்தில் ஒரு க்ஷணத்தில் ஆன்மாவாய் தொட்ட அந்த பேரானந்த பெரு வெள்ளம் எப்பொழுதும் எங்கணும் உன்னுள் பாய்ந்து கொண்டு இருப்பதற்கான வழி மிகவும் இலகுவானது என நான்கு மறை சாரத்தையும் நான்கு சொற்களில் சொல்லி செல்லும் சித்த புருஷன்.

எண்ணமிட்டாலே போதும்
எண்ணுவதே இவ்வின்பத்
தண்ணமுதை உள்ளே
ததும்பப் புரியுமடா

எளிமையான வழிமுறைகளில் ஒன்றாய் கூறுகிறார், வேற்று நினைவுகளுக்குள் அதிகம் காலத்தினை செலவிடாது , எந்நேரமும் இடைவிடாது சிவனை எண்ணி இருந்தாலே போதும். அவ்வாறு எண்ணுவதே இவ்வாறான பேரானந்தத்தை உள்ளுக்குள் ததும்ப செய்யும். எண்ணங்களுக்கு சக்தி உண்டு, எண்ணத்தில் இறை அமர்ந்தாலே என்னும் காரியாவும் யாவிலும் வெற்றி.

எங்கும் நிறைந்திருக்கின்ற
ஈசவெள்ளம் என்னகத்தே
பொங்குகின்றது என்றெண்ணி
போற்றி நின்றால் போதுமடா.

புறத்தே இறையை தேடி பக்தி என்ற பேரில் பற்பல பறை சாற்றும் பழக்கங்களுக்கு உடன் படாதவராய் மேலும் சொல்கிறார். எங்கும் எல்ல இடங்களிலும் நிரம்பி இருக்கின்ற ஈசன் எனக்குள்ளும் குடிபுகுந்துள்ளான் என்று உணர்ந்து அதை தியானித்தால் போதும் என அக மார்க்கம் காட்டுகிறார்.

யாதுமாம் ஈசவெள்ள
என்னுள் நிரம்பியது என்று
ஓதுவதே போதும் அதை
உள்ளுவதே போதுமடா

எல்லாமாகவும் இருக்கின்ற அந்த இன்ப வெள்ளம் என்னுள்ளத்திலும் நிறைந்திருக்கின்றது என்று சொல்லுவதே போதும், அதனை சிந்திப்பதே போதும் என்று சிவமோடு ஐக்கியமாகும் ஆனந்த அலைகளை சொல்கிறார்.

தொடரும்




ஸ்ரீ வெங்கடேஸ்வரப் பெருமாள் திருக்கோவில் - ஹம்

அடியவர் குறைதீர்க்கும் வெங்கடேஸ்வரப்
பெருமானை வணங்கி உங்கள் குறைதீருங்கள்

31.01.2018 புதன்கிழமை தைப்பூசம்
அன்றைய தினம் ஆலயத்தில் விஷேட பூசை,
அபிசேஷகம் இடம்பெறும்
ஸ்ரீ வெங்கடேஸ்வர பெருமாள் ஆலய கும்பாபிஷேகம் கடந்த ஆண்டு
தைப்பூச தினத்தில் இடம்பெற்றது அடியவர்கள் அருள்பெற்றனர்.

ஆலய தரிசன நேரம்:
காலை 9.00 மணிமுதல் 13.00 மணிவரை
மாலை 17.00 முதல் 20.00 வரை
பூஜை நேரம்: தினமும்:
காலை 10.00 மணி மாலை 18.00 மணி
Sri Venkateswara perumal Temple.e.V
Nassauerstraße 20
59065 Hamm-Mitte/Germany

Tel:02381 42 66 420
+49(09176 80 56 96 09







# நான் வில்லானாக இருந்த சில கணங்கள்!

மாதவி

ஓவ்வொரு மனிதனும் சில கணங்களில் வில்லனாக இருக்கவே செய்கின்றான். அது பிறருக்கு தெரியவேண்டும் என்பது அல்ல அவரவருக்கு நிச்சயம் அக்கணம் தெரியும். அப்படியாக நான் சந்தித்த அக்கணத்தினை இங்கு சொல்கின்றேன்.

விடுமுறை. குடும்பத்துடன் அயல்நாட்டில் ஒரு வாரம். மனைவி, பிள்ளைகள், இவர்களுடன் பேரப்பிள்ளைகளும். எனவே ஆனந்தத்திற்கு குறைவில்லை. சிலருக்கு காட்சிகளை நேரே பாரா்ப்பது ஆனந்தம். ஆனால் எனக்கு ஆனந்தம் தரும் காட்சிகளைப் பதிவு செய்வதில் ஆனந்தம். எனவே எனது வருமானத்தில் ஒரு பகுதியை அன்று முதல் இன்றுவரை படப்பிடிப்பு கருவிகளை வாங்குவதில் செலவு செய்பவன்.

1966 களிலேயே கணனியின் உதவியின்றி வெறும் கறுப்பு பேப்பரை துணையாகக்கொண்டு நானும், நானும் சைக்கிளில் முன்னும் பின்னும், இருந்து போவதுபோல் மூன்று வேடங்களில் படம் எடுத்து, எனக்குள்ளேயே பரபரப்பானவன். அந்த பழைய நினைப்புகள் சில திமிரை எனக்குள் விதைத்துவிட்டது, ஏதோ உண்மைதான்.

ஸ்பெயின் நாட்டில் நானும் பேரப்பிள்ளைகளும் அழகிய நவீன சிற்பங்கள் நிறைந்த தெருவால் சென்று கொண்டு இருந்தோம். என்னால் முடிந்த வரை நான் காட்சிகளையே படமாக்கினேன். எனது கண்கள் குடும்பத்தைவிட்டு இயற்கைக் காட்சிகளையே மையப்படுத்தி நின்றன. இருந்தாலும் சில இடங்கள் நினைவுக்காக, குடும்பத்துடன் படம் எடுத்துக்கொண்டோம். எனது கையில் புதியமொடல் கனேன் கமறா. எனது பேத்தியின் கையில் பெயரில்லாத ஒரு சாதாரண குட்டிக்கமரா. ஆனால் அவளும் என்னைப் போலவே, நான் எடுக்கும் இடம் எல்லாம் நிற்பாள்.

ஒரு தருணம் குடும்பப்படம் எடுத்தால் இந்த இடம் நல்லது, என்று எண்ணி எல்லோரையும் ஒரு கோணத்துக்குள் சிறைப்பிடித்து, பின்னணிக்காட்சியும் அதற்குள் அடங்கும் வண்ணம் எடுக்க முயற்சித்தபோது. எனது பேத்தி குறுக்கே வந்து தன் கமராவால் படத்தை எடுத்தாள்.
அவ்வளவுதான் இவ்வளவு நேரமும் பேத்தியைப்பாருங்கள், அவளும் தாத்தா மாதிரித்தான் படப்பத்தியம், என்று மகளும், மனைவியும், சொல்லும் போது எல்லாம், ஒருவித பெருமிதத்துடன் கேட்டு இரசித்த என் மனம். அப்போது எங்கு போய்த் தொலைந்ததோ தெரியவில்லை.




சட்டென பேத்தியின் கைகளைத் தட்டி, “உந்தக்கமரா சரியில்லை, உதைவைத்து வீணாக எடுக்கவேண்டாம்”. தாத்தா நல்ல கமராவால் எடுகிறார் குழப்பாதையுங்கோ!

என்று கரகரத்த குரலில் ஒரு அந்நியன் போல கத்தினேன். அது அவளின் தன்மானத்தையும், தனக்கு அப்பா வாங்கித்தந்த கமராவையும் கேவலப்படுத்தியதாக எண்ணினாள். அத்துடன் எனது சொற்கள் அவளுக்கு படம் எடுக்கத் தெரியாது, என்பதை மறைமுகமாகவும், நான் சொல்வதாக எண்ணிக்கொண்டாள்.
அவள் புரிந்துகொண்டது 100 வீதம் சரியானதே. காரணம் நான் 100 வீதம் அப்படி எண்ணித்தான் சொன்னேன் என்பது எனக்கும் தெரியாதா? ஒரு கணம்தான். ஆனால் அக்கணம் விதைத்த சொற்கள் நல்ல பயிரைத் தரவல்லன அல்ல.
வயது என்பது அனுபவத்தின் முதிர்ச்சியே. அதனை நாம் சரியாகப் பயன்படுத்தினால் அது இளையவர்களுக்கு பசளையாகும். அவர்களது மனமும் வாழ்வும் செழிக்கும்.

கொஞ்ச நேரம்தான் பேத்தியின் முகம் வாடியது. சுற்று நேரத்தில் சொறி தாத்தா என்று வந்து கட்டிப்பிடித்தாள். சில நேரங்களில் நாம் சிறியவர்களாகவும், சிறியவர்கள் பெரியவர்களாகவும் இருந்து விடுகிறார்கள். அந்தச் செயல் என் மனதை குனிக் குறுக்கியது.
உண்மையில் என் அனுபவம், அவளை தட்டிக்கொடுத்து, பார்! பேத்தி எடுக்கும் படத்தை!!. அவள் எப்படி எடுத்தாலும், எந்த டப்பா கமராவால் எடுத்தாலும், அவளது கண்கள் தெரிவு செய்யும் காட்சியைவைத்து படம் அற்புதமாக வருகிறது, என்று சொல்லி இருக்கவேண்டும். ஆனால் நான் ஒரு கணம் பெருவிருது பெற்ற வில்லன் போல்! பேத்தியின் கரத்தை தட்டி விட்டுள்ளேன்.


நேற்றுத்தான் முகப்புத்தகத்தில் அவள் பதிவு செய்த அந்த படங்களைப் பாரத்தேன். உண்மையில் அசந்து போனேன். அவளது படப்பிடிப்புக் கோணங்கள் அற்புதம். வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்பது எப்பவும் எக்காலத்திலும் பொருந்தும் என்பதற்கு அவள் புகைப்படங்கள் சான்று.

அவளது படங்களுக்கு கீழே பலர் தமது கருத்தைப் பதிவு செய்துள்ளார்கள். அதில் ஒன்று - தாத்தாவின் கலைத்தன்மை பேத்திக்கு வருவதில் வியப்பில்லை - என்று இருந்தது. மகிழ்ச்சியாக இருந்தது. இருந்தாலும் எனக்குள் இருந்த வில்லனுக்கோ அது சௌவுக்கடி!!!

நாம் ஒரு பிழைசெய்தால் முடிந்த வரை அக்கணத்திலேயே குழந்தைகளிடம் மன்னிப்புக் கேட்டுவிடவேண்டும். இது அவர்களுக்கா மட்டுமல்ல, எமது உள ஆரோக்கியத்திற்கும் அதுவே சிறந்தது.








# வேட்டியும் சேலையும் தமிழரின் முகவரியாக

சேவியர்



'என் வேட்டி ஒண்ணு இருக்குமே ! எங்கே தெரியுமா ?" அலமாரியில் இருந்த துணிகளைப் புரட்டிக்கொண்டே கணவன் கேட்டான்.
'எதுக்கு இந்தக் காலங்காத்தால வேட்டி தேடறீங்க ? ஆபீஸ் போகலையா ?" மனைவி குழப்பமாய்க் கேட்டாள்.

'ஆபீஸ்க்கு கட்டிட்டு போகத் தான் தேடறேன்'
'வாட் ? ஆபீஸ்க்கு வேட்டியா ? என்ன சொல்றீங்க ?'
, 'இன்னிக்கு ஆபீஸ்ல எத்னிக் டே, அதாவது கலாச்சார ஆடை தினம். அதனால வேட்டி கட்டிட்டு போகவேண்டியிருக்கு ! கணவன் விளக்கம் கொடுத்தார்.
நவீன ஆடைகளின் ஆதிக்கத்தில் புதைந்து போன வேட்டிகளைத் தேடி எடுக்கும் தினமாகத் தான் அலுவலகங்கள் கலாச்சார ஆடை தினம் கொண்டாடுகின்றன.

தமிழர்களின் அடையாள ஆடையாய் இருந்த வேட்டியை, ஒழுங்காகக் கட்டத் தெரிந்த இளைஞர்கள் இன்றைக்கு எத்தனை பேர் என ஒரு கணக்கெடுப்பு நடத்தினால் முடிவு நிச்சயம் அதிர்ச்சியளிப்பதாகத் தான் இருக்கும் ! வேட்டியை இடமிருந்து வலம் கட்டுவதா ? வலமிருந்து இடம் கட்டுவதா ? வேட்டிக்கு பெல்ட் போடணுமா ? இல்லை முடிச்சு போடணுமா ? இல்லை சுருட்டி விடணுமா ? என இளைஞர்களுக்குள் மில்லியன் டாலர் கேள்விகள் அலை மோதும்.
இந்த சிக்கல்களையெல்லாம் அறிந்த சில நிறுவனங்கள், அப்படியே பாவாடை மாதிரி கட்டிக் கொள்ளும் வேட்டிகளை அறிமுகம் செய்திருக்கின்றன. பெயர் ரெடிமேட் வேட்டி ! வேட்டில என்னயா ரெடிமேட் என நீங்கள் கேட்பது கேட்கிறது ! என்ன செய்ய ? கலாச்சார ஆடையான வேட்டி இனிமேல் கல்வெட்டுகளில் மட்டுமே காணக் கிடைக்கும் போல !
அப்படியே பெண்கள் பக்கம் திரும்பினால் சேலைக்கு இதே நிலமை தான் ! ஆனால் ஒரே ஒரு ஆறுதல் விஷயம், பெண்கள் சேலைகளை தொடர்ந்து வாங்கிக் கொண்டே இருக்கிறார்கள். சின்ன பிள்ளைகள் ஸ்டாம்ப் கலெக்ஷன் செய்வது போல, பெண்கள் சாரி கலக்ஷனில் இறங்கி விடுகின்றனர். பக்கத்து வீட்டு அக்காவை விட அதிகம் இருக்கணும் என்றேனும் இலட்சியம் வைத்துக் கொள்கின்றனர். பாவம் ஆண்களின் பர்ஸ்கள் தான் வெலவெலத்துப் போகின்றன. சேலை கட்டிக்கொண்டு செல்கின்ற பெண்களிடம், 'ஏதாச்சும் ஃபங்ஷனா ?" என தவறாமல் வினவுகின்றன வாய்கள். ஃபங்ஷனுக்கு சேலை கட்டாமல் வந்தால் சேலை இல்லையா ? என்பார்கள். மற்ற வேளைகளில் சேலை கட்டி வந்தால் 'வேற வேலை இல்லையா' என்பார்கள். சேலை கட்டுவது பெண்களுக்கு ஒரு மிகப்பெரிய வேலையாய் தெரிகிறது.
வேட்டியும் சேலையும் தமிழர்களின் கலாச்சார அடையாளங்களாய் இருந்தன. அவர்களுடைய வாழ்வோடு பின்னிப் பிணைந்து குடும்ப உறவுகள் போல இருந்தன. இன்று அவை சிலருக்கு தூரத்துச் சொந்தம், சிலருக்கு வேண்டாத விருந்தாளி, சிலருக்கு தவிர்க்க முடியாத தலைவலி !
என் நினைவலைகளை பின்னோக்கி அலையவிட்டால், அம்மாவின் சேலை நுனியைப் பிடித்துக் கொண்டு தத்தித் தத்தி நடந்த நினைவுகள் பசுமையாய் வருகின்றன.
அம்மாவின் முந்தானை தான் நமக்கு எல்லாமே ! நடக்கப் பழகும் போது முந்தானை பிடித்து நடப்போம் ! அப்பா துரத்துகையில் முந்தானைக்குள் ஒளிந்து கொண்டு தலையை மட்டும் நீட்டுவோம் ! கைகழுவிய பின் முந்தானை தான் நமக்கு வாசனை டவல் ! மழைக்கால நடைப்பயணத்தில்
அது தான் நமக்கு குளிர் குடை !



தடுக்கி விழுந்து காலில்
இரத்தம் வந்தால் முந்தானை
முனை தான் முதலுதவிக்
கட்டு ! இரவின் நித்திரையில்
அம்மாவின் சேலை தான்
கனவுகளின் கைப்பிடி !
தனிமையின் பரிதவிப்பில்
சேலையின் வாசனை தான்
நிம்மதியின் கையேடு !

பழையதாகிப் போனால்
அம்மாவின் சேலை
அக்காவுக்குத் தாவணியாகும் !
மிச்சம் மீது தங்கைக்கு
ரிப்பனாகும் !
அம்மாவின் சேலை
எழுப்புகின்ற நினைவலைகளும்,
அது தருகின்ற
அதிர்வலைகளும் அநேகம் !
இறுக்கிப் பிடிக்கும் ஜீன்ஸ்
அம்மாக்களின்
குழந்தைகளுக்கு முந்தானை
என்பது வேற்றுலக மொழி !
அவை உடலையும்
மறைப்பதில்லை, நினைவையும்
நிறைப்பதில்லை !

அம்மாவின் சேலையைப் போலவே நினைவுகளையும், நெகிழ்வுகளையும் சுமந்து திரிபவை தான் அப்பாவின் வேட்டிகள். தரையில் பட்டு பட்டு கிழிந்து போன வேட்டியை, தலைகீழாய் உடுத்து கிழிசல் மறைத்து திரியும் வறுமை அப்பாக்கள் தியாகத்தின் வேர்கள்.


## மணமகள் தேவை!

28 வயதுடைய கிறிஸ்தவ இளைஞன். இலங்கைத் தமிழ். யேர்மனியில் படித்து நல் வேலை பார்க்கும் மகனுக்கு பெற்றோர் 24 வயது 26 வயதிற்கு உட்பட்ட கிறிஸ்த்தவ மணமகளைத் தேடுகின்றனர். மேற்குறிப்பிட்ட வயதுகொண்ட பிள்ளையின் பெற்றோர் மட்டும் தொடர்பு கொள்ளவும். மணமகள் யேர்மனியில் வசிப்பவராக இருக்கவேண்டும்.


தொடர்புகளுக்கு: 0152 1051 2973



**Chilli Mixx Catering**

உங்கள் மங்கலகர வைபவங்கள்
சுவைபெற எம்மை அழையுங்கள்!

திருமண விழாக்கள்
பூப்புனித நீராட்டு வைபவங்கள்
பிறந்த நாள் கொண்டாட்டங்கள்
ஒன்றுகூடல்கள் எதுவானாலும்
அறுசுவை படைக்க அழையுங்கள்



+49 176 41842298 +49 176 21303158

# வேட்டியும் சேலையும்

தொடர்ச்சி 15 ம் பக்கம்



அவர்களின் மடித்து வைத்த வேட்டிகளுக்குள் மடியாமல் இருப்பவை குழந்தைகளுக்கான கனவுகள்.

இன்று அவை இல்லை ! வேட்டிகளை மறந்து விட்ட அப்பாக்களுக்கு முழுக் காற்சட்டையே வசதியாய் இருக்கின்றன.

சேலையையும், வேட்டியையும் கலாச்சாரமாகக் கொண்ட தமிழன் உயரிய சிந்தனை கொண்டவன் ! ஒரு வேட்டி ! எல்லோருக்குமே பொருந்தும் ! தொப்பை வந்தவனுக்கு தனி வேட்டி, ஒல்லிக்குச்சிக்கு தனி வேட்டி என்பதெல்லாம் இல்லை.

இன்றைக்கு இஞ்ச் கணக்கில் இடுப்பைக் கட்டிக்கொள்ளும் ஜீன்ஸ் மனிதர்களுக்கு வயிறு வளர வளர ஆடை மாற்ற வேண்டியிருக்கிறது ! வேட்டியில் அப்படி ஒரு சிக்கலே இல்லை ! அப்பாவின் வேட்டி கிழியும் வரை கட்டலாம் ! அப்பாவின் வேட்டியை மகனும் கட்டலாம் !

சேலையும் அப்படியே ! ஒரு சேலை போதும் யார் வேண்டுமானாலும் மாறி மாறி உடுத்திக் கொள்ள ! ஆளுக்கும் ஏற்றபடி அளவில் மாற்றம் தேவையில்லை ! அதனால் தான் அந்த ஆடைகள் காலம் கடந்தும் பயனளித்தன. இன்றைய நவீன ஆடைகள் மாதங்கள் கடந்தாலே மறைந்து விடுகின்றன.நமது இலக்கியங்களின் செழுமையிலும், நமது பண்பாட்டின் வளமையிலும் நமது ஆடைகளின் பதிவுகள் அழுத்தமாய் இருக்கின்றன. அவை வெறுமனே ஒரு அடையாளமாக இல்லாமல், வாழ்வியலின் அங்கமாக இருப்பது தான் நமது கலாச்சார ஆடைகளின் மீதான கர்வத்தை நமக்குத் தருகிறது.

இன்று வசதி குறைவு போல தோன்றுகின்ற வேட்டியும், சேலையும் தான் உண்மையில் அதிக வசதியுடையவை. உடலில் தட்பவெப்ப நிலையை சீராக வைப்பது முதல், ஓடியாடி வேலை செய்யவும் வசதியாக இருக்கின்றன. ஒரு துண்டு துணியை வைத்து அத்தனை வித்தைகளையும் காண்பித்த தமிழனின் கலாச்சாரம் வியக்க வைக்கிறது தானே !
ஒரு மொழி பேச்சு மொழியாக இல்லாத போது அது மெல்ல மெல்ல அழியும் என்கிறது வரலாறு. வீடுகளிலும், சந்திக்கும் இடங்களிலும் தமிழைப் பேசாமல் இருந்தால் ஒரு காலத்தில் தமிழ் மொழியே கூட வழக்கொழிந்து போய்விடலாம். அதற்கு உதாரணமாய் பல மொழிகள் இருக்கின்றன.

ஒரு ஆடை, பயன்பாட்டு ஆடையாக இல்லாமல் போகும் போது அது நாளடைவில் அழிந்து போய்விடுகிறது.

அதற்கும் வரலாற்றில் உதாரணங்கள் இருக்கின்றன. அந்த அழிந்து போன ஆடைகளின் பட்டியலில் வேட்டி சேலை கூட வந்துவிடும் அபாயம் உண்டு.

## நடுப்பக்கம்

சேவியர்



பயன்பாடு தான் ஒரு பண்பாட்டை வாழவைக்கிறது ! பயன்பாடு தான் ஒரு கலாச்சாரத்தைக் கட்டிக் காக்கிறது !
வேட்டியும் சேலையும் வெறும் ஆடைகளல்ல, அவை நமது கலாச்சாரத்தின் நீட்சி !நமது தன்மானத்தின் காட்சி என உணர்வோம் ! தயக்கமின்றி பயன்படுத்துவோம்.

## நலமா

சேவியர்

நலமா,
எனும் விசாரிப்புகள் தொடரும்.
செவிப்பறைகள்
பதில் வருமுன் பூட்டிக் கொள்ளும்.

உன்னைப் பார்த்ததில்
மனசு மகிழ்கிறது
எனும்போதும்.
கண்கள்
தூக்கக் கலக்கத்தில் விழிக்கும்.

மிச்சமிருப்பதெல்லாம்
சொற்களுக்கும்
பற்களுக்குமான உறவு.

இமைகள் கூட
கண்களை தனிமைச் சிறைக்குள்
தள்ளும் கதவு தான்.

கடிகாரக் கட்டளைகளும்
அதிகார மூச்சிரைப்புகளும்
விரட்டிக் கொன்று விட்டன
சில
வெளிவராத வெளிச்சங்களை.

இன்னும்
எங்கள் விசாரிப்புகள் தொடரும்,
உள்ளீடில்லா வார்த்தைகளோடும்
ஊமையான
செவிகளோடும்.



இது நீ அல்ல! நானுமாக இருக்கலாம்!!

மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan
உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில் மொழிபெயர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம்.
A.to.Z Dolmetscher - und Übersetzungsdienst
Für alle weltsprachen
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888
Lise-Meitner-Str.20
45144 Essen

Akchaya Digital Photography


Akilan Wedding planner
Grüner Weg-6 53474 Bad Neuenahr-AW, GERMANY
contact : E,Akilan
Professional Photography
e-mail:akchayadigitalphotography20@gmail.com
Tel:02641 91 68 98
Mobile:0163 39 40 474

பரிஸ் - இலண்டன் - பீலபெல்ட்

பொங்கல், - புத்தாண்டை வரவேற்று

# வாகைசூட்டு விழா 2018

**International Tamil Educational Cultural Scientific Development Federation**

## இருபதாவது ஆண்டில்
## அனைத்துலகத் தமிழ்க் கல்வி பண்பாடு அறிவியல் மேம்பாட்டு இணையம் (itec)

வாகைசூட்டுவிழா - குழந்தைகளுக்கான கொண்டாட்டநாள். ஆண்டுதோறும் பெருநகரங்களில், நாடு தழுவிய அளவில் **itec** நிறுவகத்தால் நடத்தப்படும் வெற்றிவிழா பண்பாட்டுவிழா தமிழ்மொழியை, தமிழ்க்கல்வியை, தமிழர்மரபைக் கொண்டாடும் விழா.

அனைத்துலகத் தமிழ்மொழித்தேர்வு 2017 ல் நாடளவில் வளர்நிலை1 ல் இருந்து ஆண்டு12 வரை தேர்வு எழுதிய மாணவர்களில் சிறந்த புள்ளிகளைப் பெற்று, முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களைப் பாராட்டிப் பரிசளித்துச் சான்றிதழ் வழங்குதல்.

அத்தேர்வில் வளர்நிலை1 ல் இருந்து ஆண்டு12 வரை தேர்வு எழுதிய மாணவர்களில் **A*** பெற்றவர்களைப் பாராட்டிப் பரிசளித்தல்.
ஆண்டு 12 வகுப்பில் தேர்ச்சி பெற்று, நிறைவு செய்யும் பிள்ளைகளுக்குச் சிறப்புச் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கிச் சிறப்பித்தல்.
itec நிறுவகத்தோடு இணைந்து இயங்கும் அந்தந்த நாட்டு தமிழ்ப்பள்ளிகள் வழங்கும் கலைநிகழ்வுகள்.

**07.01.2018 ஞாயிற்றுக்கிழமை 14:00ல் இருந்து 20:00 மணிவரை.**
**SALLE JENNE D´ARC, 50, Place de Torcy, 75018 Paris , France**

**07.01.2018**
**France**

**13.01.2018 சனிக்கிழமை 14:00ல் இருந்து 20:00 மணிவரை.**
**The Winston Churchill Hall, Pinn way, Ruislip, Middlesex, HA4 7QL, UK**

**13.01.2018**
**U.K**

**27.01.2018 சனிக்கிழமை 15:00 மணி**
**Gymnasium Am Waldhof, Waldhof 8, 33602 Bielefeld, Germany**

**27.01.2018**
**Germany**

தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் வருகை தந்து பிள்ளைகளைப் பாராட்டி கொண்டாடி அவர்களை ஊக்கப்படுத்துமாறு வேண்டிக் கொள்கின்றோம். 1999 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் கால்கோளான itec கல்வி நிறுவகம், தமிழர் புலம் பெயர்ந்து, பரந்து வாழும் நாடுகளைச் சேர்ந்த தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலில் நீண்ட கால பட்டறிவைக் கொண்ட கல்வியியலாளர்களையும், ஆசிரியர்களையும், தாய்த் தமிழ் நாட்டிலுள்ள மூத்த தமிழ் அறிஞர்களையும் தனது வளமாகக் கொண்டது. இந் நிறுவகம் அரசியல் சார்பற்றது.

2001ம் ஆண்டு தமிழ்வழிப் பாடநூல் தொடர் itec நிறுவகத்தால் உருவாக்கப்பட்டு வெளிக்கொணரப்பட்டது. அப்பாடநூல்களில் கேட்டல்,பேசுதல், வாசித்தல், எழுதுதல் திறன்களுக்கான கூறுகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இப்பாடநூல்கள் புலம் பெயர் தமிழ்க்குழந்தைகளின் நலன் கருதி நவீன முறையில் அமைக்கப்பட்டவையாகும்.

அனைத்துலக அளவிலான புதிய பாடத்திட்டம், புதிய பாடநூல்களை உருவாக்கிய பின், அதனைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நவீன முறைக் கற்பித்தல்களுடன் கூடிய பயிற்சிப்பட்டறைகள் நாடுகள் எங்கும் itec நிறுவகத்தால் நடத்தப்படுகின்றன.

2001ம் ஆண்டில் தமிழ்மொழிப்பாடத்துக்கான அனைத்துலகப் பொதுத்தேர்வு இந் நிறுவகத்தால் நடத்தப்பட்டது. இத் தேர்வே அனைத்துலக அளவில் நடத்தப்பட்ட முதல் தமிழ் மொழிப் பாடத்துக்கான பொதுத்தேர்வாகும். கல்விச் செயற்பாட்டில் நீண்ட கால பட்டறிவு கொண்டவர்களால் நடத்தப்படும் அனைத்துலகப் பொதுத்தேர்வில் பங்கு கொள்ள விரும்பும் பள்ளிகள், தனியார்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.



**தமிழ் எங்கள் உயிர்ப்பின் இருப்பு**

தொடர்புக்கு: **+ 49 17641415642**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**



# நாளை முக்கியம்தான், இன்று அதைவிட முக்கியம்!

**ஜெயமோகன்**

சமீபத்தில் ஒரு மின்னஞ்சல் வந்தது. வழக்கம்போல வாசகர் எழுதியதல்ல, வாசகரின் தந்தை எழுதியது. தன்னை அறிமுகம் செய்துகொண்டார் அவர். மத்திய அரசில் ஆரம்பநிலை அதிகாரியாக இருந்தவர். இரண்டாம்நிலை அதிகாரியாக ஓய்வு பெற்றார். இரு பிள்ளைகள். இருவருமே நன்றாகப்படித்து அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலுமாக வேலைபார்க்கிறார்கள். இவர் திருச்சியில் மனைவியுடன் வாழ்கிறார்.

அவரது பிரச்சினை தனிமைதான். மனைவிக்கு கடுமையான கீல்வாதம். ஆகவே குளிர்நாடுகளில் சென்று வாழமுடியாது. அவருக்கு ஆஸ்துமாபிரச்சினை உண்டு. பிள்ளைகள் வெளிநாடுகளில் குடும்பத்துடன் வாழ்கிறார்கள். அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறைகூட ஊருக்கு வருவதில்லை என்பதே அவரது மனக்குறை. வந்தால் அதிகபட்சம் ஐந்துநாட்கள். உடனே கிளம்பிவிடுகிறார்கள். அந்த ஐந்து நாட்களிலும் மொத்தமாக ஐந்துமணிநேரம் பெற்றோரிடம் செலவழித்தால் அதிகம்

'உங்கள் நூல்களை இங்கே வரும்போது என் இரண்டாவது மகன் கட்டுக்கட்டாக வாங்கிச்செல்கிறான். நீங்கள் ஏன் இதை அவனிடம் பேசக்கூடாது? நீங்கள் பேசினால் அவன் கேட்பான்' என்றார் அவர். இம்மாதிரி குடும்ப விஷயங்களில் தலையிடக்கூடாதென்பது என் கொள்கை. ஆனால் அவர் மீண்டும் ஒரு மின்னஞ்சல் அனுப்பியபோது அதை அவரது மகனுக்கு அப்படியே திருப்பி விட்டேன்.

அவர் மகன் ஒருவாரம் கழித்து மிகநீளமான ஒரு மின்னஞ்சல் அனுப்பியிருந்தார். என்னை பலகோணங்களில் சிந்திக்கவைத்த கடிதம் அது. 'நான் திருச்சியில் இருபத்திரண்டு வருடம் வாழ்ந்திருக்கிறேன். ஆனால் திருச்சியுடன் எனக்கு மானசீகமாக எந்த உறவும் இல்லை. இருபத்திரண்டு வருடம் அப்பா அம்மாவுடன் வாழ்ந்தேன். ஆனால் அவர்களைப்பற்றி ஒரு நல்ல நினைவுகூட இல்லை' என்றார் அவரது மகன். அவரது தந்தை அவரை ஒரு பொறியியலாளராக ஆக்கவேண்டும் என்பதைப்பற்றி மட்டும்தான் சிந்தனை செய்தார். அதுவும் அவர் எல்.கெ.ஜியில் சேர்வதற்கு முன்னதாகவே.

ஒவொருநாளும் அவரே காலையிலும் மாலையிலும் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்தார். அதைத்தவிர அவர்களின் அன்னையும் பாடம் சொல்லிக்கொடுப்பதுண்டு. பள்ளிக்கூடப்படிப்பு, வீட்டில் படிப்பு தவிர இளமை நினைவுகள் என்று எதுவுமே இல்லை. ஞாயிற்றுக்கிழமைகள், விடுமுறைநாட்களில் முழுக்கமுழுக்க பாடங்கள்தான். கோடைவிடுமுறை முழுக்க ஆங்கிலமொழியறிவுக்கும் கணிதத்திறமைக்கும் வகுப்புகள். தீபாவளி, பொங்கல் தினங்களில்கூட கொண்டாட்டம் இல்லை. படிப்புதான்

'சிலசமயம் இரவில் படுத்து சிந்திப்பேன். இளமைக்காலத்தைப்பற்றிய ஒரே ஒரு மகிழ்ச்சியான நினைவாவது மனதில் எஞ்சியிருக்கிறதா என்று. எவ்வளவு நினைத்தாலும் ஒரு சிறிய நிகழ்ச்சிகூட நினைவுக்கு வரவில்லை. பின்பு ஒருமுறை எண்ணிக்கொண்டேன். சரி, ஒன்றிரண்டு துயரமான நினைவாவது இருந்தால் நன்றாக இருக்குமே என்று. அந்த நினைவுகள் வழியாகக்கூட என் வீட்டுடனும் ஊருடனும் மானசீகமாக தொடர்புபடுத்திக்கொள்ளலாமே என்று. அப்படியும் ஒரு நினைவு கிடையாது. படிப்பு படிப்பு படிப்புதான்'

'வீட்டைவிட மோசம் என் பள்ளி' என அவரது மகன் எழுதியிருந்தார். 'தனியார் பள்ளி அது. மிக உயர்மதிப்பெண்கள் பெற்றுத்தரும் செலவேறிய பள்ளி. அங்கே பிள்ளைகளைச் சேர்க்க அஅ நிற்பார்கள்.பள்ளிக்கு உள்ளே நுழைந்த கணம் முதல் வெளியே செல்லும் கணம் வரை கூடவே ஆசிரியர்கள் இருப்பார்கள். பேசவோ சிரிக்கவோ விளையாடவோ அனுமதி இல்லை. படிப்பு மட்டும்தான்'

அந்தப்படிப்பிலும் எந்த சுவாரசியமும் இல்லை. 'பள்ளிப்படிப்புக்கு வெளியே நான் எதையுமே வாசித்ததில்லை. யாருமே எனக்கு இலக்கியத்தையோ கலைகளையோ அறிமுகம் செய்ததில்லை. நானறிந்த படிப்பு என்பது புத்தகத்தில் உள்ளதை அச்சு அசலாக திருப்பி எழுதுவதற்கான பயிற்சி மட்டும்தான்' என்று எழுதியிருந்தார்.

**குழந்தைகளை படிக்க வைக்கும் எல்லோரும்**
**படிக்க வேண்டிய பதிவு...**
**நாளைக்காக மட்டும் வாழமுடியுமா?**

அப்படியே பொறியியல் படித்து வேலைக்காக அமெரிக்கா சென்றபோதுதான் அவருக்குத் தெரிந்தது மனிதவாழ்க்கை என்பது எவ்வளவு மகிழ்ச்சிகள் கொண்டது என்று. பயணங்கள், நண்பர்களுடனான சந்திப்புகள், இலக்கியவாசிப்பு, இசை. அவர் எழுதினார் ' எந்த இடத்தில் நாம் மகிழ்ச்சியாக இருக்கிறோமோ அந்த இடத்தில் நம் மனம் படிந்துவிடுகிறது. அதுதான் நமது ஊர் என்று நினைக்கிறோம். எனக்கு அமெரிக்காவின் நகரங்கள்தான் பிடித்திருக்கின்றன. திருச்சி எனக்கு அன்னிய ஊராகத் தெரிகிறது. ஒருநாளுக்குள் சலித்துவிடுகிறது'

'என் பெற்றோர் மீது எனக்கு மரியாதையும் நன்றியும் உண்டு. அவர்களை நான் புரிந்துகொள்கிறேன். ஆனால் அவர்களுடன் அரைமணிநேரம் என்னால் பேசிக்கொண்டிருக்க முடியாது. இருபத்திரண்டுவருடம் படி படி என்று மட்டுமே சொன்ன இரண்டு வயோதிகர்கள் அவர்கள். அவ்வளவுதான். அவர்களை நான் நேசிக்கவேண்டும் என்றால் அவர்களை எனக்கு தெரிந்திருக்கவேண்டும். அவர்களின் மனம் எனக்குப்புரிந்திருக்கவேண்டும். எனக்கு அவர்கள் அன்னியர்கள்போல தெரிகிறார்கள்'

'இருபத்திரண்டு வருடம் அவர்கள் எங்களிடம் பொதுவாக எதையும் உரையாடியதே இல்லை. படிப்பையும் எதிர்காலத்தையும் பற்றிய கவலைகளை கொட்டிக்கொண்டே இருப்பார்கள். இப்போது அவர்கள் பேசநினைத்தாலும் பேசுவதற்கான தொடர்பு இல்லை. இப்போதுகூட நீ என்ன சம்பளம் வாங்குகிறாய், என்ன மிச்சம் பிடித்தாய் என்று பயம்காட்டமட்டுமே அவர்களால் முடிகிறது. புத்தகம் வாங்காதே, பயணம்செய்யாதே என்று அவர்கள் வாழ்ந்ததுபோல என்னை வாழச்சொல்கிறார்கள்'

'நீங்களே சொல்லுங்கள், அரைமணிநேரம்கூட பேசிக்கொள்ள பொதுவாக ஏதும் இல்லாதவர்களிடம் நாம் எவ்வளவுதான் செயற்கையாக முயன்றாலும் பேசிக்கொண்டிருக்கமுடியுமா? முற்றிலும் அன்னியமாக தெரியும் ஓர் ஊரில் எவ்வளவுநாள் வாழமுடியும்? மரியாதைக்காகவோ நன்றிக்காகவோ ஐந்துநாள் இருக்கலாம். அதற்குமேல் என்ன செய்வது?' என்று மகன் கேட்டார் 'என் இளமைப்பருவம் முழுக்க வீணாகிவிட்டது என்றுதான் நினைக்கிறேன்' அந்தக்கடிதத்தை அப்படியே அவரது தந்தைக்கு அனுப்பினேன்.

'இதைவிட தெளிவாக எதையும் நான் சொல்லிவிடமுடியாது' என்றேன். அவர் புரிந்துகொள்ளாமல் 'நன்றிகெட்டதனம். பொறுப்பற்றத்தனம்' என்று மகனை வசைபாடி ஒரு கடிதம் அனுப்பி எனக்கும் பிரதி அனுப்பியிருந்தார். மேலும் ஒருமாதம் கழித்து 'இந்த தீபாவளிக்கு அவனை வரச்சொல்லமுடியுமா?' என்று கேட்டு ஒரு மின்னஞ்சல் எனக்கு அனுப்பினார்.

'தீபாவளி என்பது இளமையில் கொண்டாடவேண்டிய ஒரு பண்டிகை. அன்றுதான் அந்த உற்சாகம் இருக்கும். வளர்ந்தபின் அந்த நினைவுகளைத்தான் கொண்டாடிக்கொண்டிருப்போம். உங்கள் மகனுக்கு நினைவுகளே இல்லை என்கிறார். நீங்கள் அவருக்கு உரிமைப்பட்ட பண்டிகைக்கொண்டாட்டங்கள் அனைத்தையும் பறித்துக்கொண்டுவிட்டீர்கள் என்கிறார்' என நான் பதில் எழுதினேன். அவர் மீண்டும் பதில் போடவில்லை.

வாழ்க்கை என்பது எதிர்காலத்துக்கான போராட்டம் அல்ல. வாழும் தருணங்களை உயிர்ப்புடன் வைத்துக்கொள்வதுதான். அதற்காகவே பண்டிகைகளும் கொண்டாட்டங்களும் திருவிழாக்களும் நம் முன்னோரால் உருவாக்கப்பட்டுள்ளன.

S.J. ASIAN - AFRO STORE



உங்கள் இலத்திற்கு தேவையான அனைத்து
மளிகைப் பொருட்களுக்கும் நாடுங்கள்
பசுமையான மரக்கறிகள்
மற்றும் தரம்மிக்க
கடல் உணவுப் பொருட்கள்
அனைத்தும் நிதான விலையில் பெற்றுப்
பயனடையுங்கள்.

Mannheim
S1 – 11
68161 Mannheim
Tel.: 0621/86243212
Indo-Afro Ravels
info@asian-afro.de

Ludwigshafen
Schulstr. 7-9
67059 Ludwigshafen
Tel.: 0621/54544276
info@asian-afro.de



Indo Afro Travels
68161 Mannheim

உங்கள் பயணங்களை மகிழ்வூட்ட
சிறந்த விமானச் சீட்டுக்களுக்கு
எம்மை நாடுங்கள்.


Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
ஒருவருட
இணைப்புச் சந்தா
£/€69
SET TOP BOX
INCLUDED
புதுப்பித்தல்
£/€49
14 மாதங்கள்
LycaTV App ஐ
Download செய்து
பார்வையிடலாம்
ஒரு மாதச் சந்தா
£/€4.99
மட்டுமே
Google play
App Store
tv
Roku
AirPlay
chromecast
Samsung SMART TV
LG Smart TV
androidtv
amazon fireTV
kindle fire
XBOX
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
விஜய்
ZEE தமிழ்
KTV
1000க்கும் அதிகமான TAMIL திரைப்படங்கள்
ரிச்சி
தீரன்
கொடிவீரன்
நெஞ்சில் துணிவிருந்தால்
UNITED KINGDOM
0207 132 2727
GERMANY
069 1200 7102
FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCAMEDIA LTD.
ANY PRODUCT OR SERVICE OR TRADE NAME OTHER THAN THOSE OWNED BY LYCAMEDIA LTD, THAT IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THEREOF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR INDIVIDUAL. ANY UNAUTHORIZED USE OF THE LYCATV MARK IS STRICTLY PROHIBITED.
www.lycatv.tv

“இலக்கியச் செம்மல்”
இந்துமகேஷ்




## “இது பொய்யல்ல மெய்”

### பெருமைகள் பேசுவோம்!

என்னைத் தெரிகிறதா?" என்று கேட்ட அந்த இளம் வைத்தியரை ஆச்சரியமாகப் பார்க்கிறேன்: „நினைவுக்கு வரவில்லை!"
„நான் உங்கள் நண்பரின் மகள்!"
„ஓ...! கைக் குழந்தையாகப் பார்த்தது...! இப்போது எங்கே இருக்கிறீர்கள்...எவ்வளவு காலமாக இங்கே பணியாற்றுகிறீர்கள்?"
கேள்விகளும் பதில்களும் தொடர்ந்தன.

ஜேர்மனிக்கு வந்த புதிதில் அறிமுகமான நண்பர்களில் இந்தப் பெண்ணினது தந்தையும் ஒருவர். வந்த புதிதில் மனவேதனைகளையும் வலிகளையும் சுமந்துகொண்டு வாழவின் அர்த்தம் தேடி ஓடிக்கொண்டிருந்தோம்:
அகதி... அகதி...அகதி...
- அந்தப் பெயரைச் சுமந்து வாழ முடியாமல் அதே நேரம் அதிலிருந்தும் விலகியோட முடியாமல் இருதலைக்கொள்ளி எறும்புகளாய் துடித்துத் துடித்தே காலத்தை விரட்ட வேண்டியிருந்தது.

ஆனால் இந்தத் துயரங்களுக்கிடையிலும் எல்லோரிடத்தும் பரிவும் பாசமும் நிறைந்திருந்தது. ஒருவர்க்கொருவா உறுதுணையாய் ஒருவர்க்கொருவர் ஆறுதலாய் காலங்களைக் கழிக்க முடிந்தது. பலரையும் இணைப்பதும் பிரிப்பதுமாய் காலம் காட்டிய வித்தைகளுக்குள் அடங்கிப் போனவர்களைத் தவிர மற்றவர்கள் நாடுகள் கண்டங்கள் என்று மாறிமாறிப் பறந்து கொண்டிருந்தார்கள். நிரந்தர அடைக்கலம் தரும ஒரு இருப்பிடம் தேடி தமது நிம்மதியைத்: தொலைத்துக் கொண்டிருந்தார்கள்.
மாதந்தோறும் வருடந்தோறும் புதுப் புது உறவுகள் இணைவதும் பிரிவதுமாய்....
இந்த நண்பனும் தன் மனைவி மகளுடன் எங்கோ போய் மறைந்தான். காலப்போக்கில் மறந்தும் போனான். என் மனதிலும் அவன் நினைப்பும் எப்போதாவது வந்து போகும் என்ற நிலையாயிற்று.
ஒரு கால்நூற்றாண்டு கடந்தநிலையில் இன்று அவனது மகளை ஒரு வைத்தியராகப் பார்க்கிறேன். அவள் என்னைத் தெரிந்து வைத்திருக்கிறாள் என்பது எனக்கு ஆச்சரியம்தான்.

„ஏன்னை எப்படி அடையாளம் தெரிந்தது?"
„அப்பா உங்களைப்பற்றி எனக்குச் சொல்லியிருக்கிறார்!"
வந்த புதிதில் எங்கள் முகத்தில் பரவிக்கிடந்த கவலைக்கோடுகள் இப்போது மாறியிருக்கின்றன. இந்த நாட்டில் விளைந்த நமது வாரிசுகள் தங்கள் மலர்ந்த முகங்களால் எங்கள் கவலைகளை மறக்கடிக்கிறார்கள். அந்தந்த நாடுகளில் உள்ள அரச அலுவலகங்களில் தனியார் நிறுவனங்களில் பொதுப்பணித் துறைகளில் என்று ஆங்காங்கே பளிச்சிடும் நமது இளைய தலைமுறை..!
பெருமிதம் கொள்கிறது மனது:
„நமது குழந்தைகள்.. நமது குழந்தைகள்!!" என்று ஆனந்தக் கண்ணீரில் குளிக்கின்றன நமது விழிகள். „நாம் தமிழர் என்பதில் நீங்கள் பெருமைப்படும் விடயம் என்ன?" என்று எனது முகநூல் நண்பர்களிடம் கேட்டேன்:
கந்தையா ஜெயராஜா (பிறேமன்) என்ற முகநூல் நண்பர் சொன்னார்:
„ தமிழராகிய எங்களிடம் பெருமையாகச் சொல்லக்கூடிய ஒரு சிறப்பம்சம் தமிழருடைய உழைப்பு உழைப்பு உழைப்புத்தான்!" தமிழன் கடின உழைப்பாளி! என்று பெயரெடுத்தவன். அவனது உழைப்பின் திறனை இந்த உலகமும் நன்கறியும்: அகதியாக வந்தவன் அதிதியாகப் பெருமை கொள்ளும் அளவுக்கு அவனை உயர்த்துவது அவனது உழைப்புத்தான்.
„கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே! சங்கு சுட்டாலும் வெண்மை தரும்!"





## உதைபந்தாட்ட நடுவராக ஷறீகன் சிவநாதன்



ஜெர்மனி செல்ம் நகரில் வசிக்கும் ஷறீகன் சிவநாதன் நோத்ரைன் வெஸ்பாலின் மாநிலத்தில் உதைபந்தாட்ட நடுவராக கடந்த 3 ஆண்டுகளாக பணியாற்றுகிறார். தற்போது Kreis dortmund இல் உயர்ந்த டபையவான Kreisliga A இல் உதைபந்தாட்ட நடுவராக யேர்மனியில் பணியாற்றுகிறார்.

இவர் சிறந்த விளையாட்டு வீரராக மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டி ரெனிஸ் போன்ற விளையாட்டுகளில் மாநில போட்டிகளில் கலந்து கொண்டு பல வெற்றிகளை குவித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அடுத்த வருடம் Bezirksliga Schiedsrichter( Football Referee) பதவியை அடைய உள்ள ஒரே ஒரு தமிழன் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்தான் ஒரேயொரு தமிழர் KreisligaA இல் இப்போது உதைபந்தாட்ட நடுவராக இருக்கிறார் .
இவர் நகுலா சிவநாதன் தம்பதிகளின் மகன் ஆவார். தற்போது Aachen பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் கல்வி பயின்றுகொண்டு இருக்கிறார்.
எல்லாத்துறைகளிலும் தத்தம் திறமைகளால் நம்மினத்துக்குப் பெருமை சேர்க்கும் இளையோர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்பது நாம் பெருமை கொள்ளும் விடயங்களில் ஒன்றுதான். முன்னைய காலங்களில்தான் நாம் பெருமைக்குரியவர்களாக வாழ்ந்தோம் இன்று நிலைதாழ்ந்து போனோம் என ஒருசிலர் சொல்வதில் எவ்வித உண்மையும் இல்லை. பெருமையை நிலைநாட்ட உருவாகிவரும் புதிய சமுதாயம் தமது பணியைச் சரியான பாதையிலேயே தொடர்கிறது.

தொடர்ச்சி 22 ம் பக்கம்



# புளுகு

21 ம் பக்கத் தொடர்ச்சி...

„நீங்கள் பெருமைப்படும் விஷயங்களைச் சொல்லுங்களேன்!" என்று என் முகநூல் நண்பர்களிடம் கேட்டேன். தனக்குப் புளுகம் தந்ததாக பிரான்சிலிருந்து யுகன் கனகம் தந்த தகவல் இது.
பிரான்ஸில் புங்குடுதீவு மக்கள் ஒன்றியம் உருவான காலப்பகுதியில் உருவானது பாரதி விளையாட்டுக் கழகம். அது ஒரு கோடைகாலம், மாலை நேரங்களில் சிறுவர்களுக்கு உதைபந்தாட்டப் பயிற்சி வழங்கி கொண்டிருந்தோம். இம்முறை சில போட்டிகளில் பங்குபெற வேண்டும்.



ஒரு நாள் நண்பர் கூறினார், சுவிஸ் நாட்டில் எம்மவர்களுக்கான ஐரோப்பிய உதை பந்தாட்டப் போட்டி தமிழர் விளையாட்டு ஐரோப்பாக் கிண்ணம் 2004 - நடைபெறப் போகிறது நாமும் பங்கு கொள்ளலாமே ? அனைவரும் சிரித்துக் கொண்டனர். அதற்குள் ஐரோப்பிய கிண்ணமா ?

அவரின் கருத்தை வேறு சிலரும் ஆமோதித்தனர். நீண்ட நேரம் உரையாடல், முடிவு... நாம் கலந்து கொள்கிறோம். அதற்கான அடுத்த கட்ட நடவடிக் கைகளில் இறங்கினோம். சிறுவர்களின் பெற்றோர்களை அணுகி அனுமதி பெறுவதற்கான முயற்சி,சிலர் மகிழ்ச்சி....சிலர் முனகல்...சிலர் இழுத்தடிப்பு.... முடிவு.....சம்மதம் !
வாகன ஒழுங்கு உட்பட்ட அனைத்து ஒழுங்குகளையும் செய்த பின் புறப்படுவதற்கான நேரம், பெற்றோர்கள் உட்பட நண்பர்கள் பலர் திரண்டு வந்து எங்களை வழி அனுப்பி வைத்தனர்.

ஒருபுறம் மகிழ்ச்சி, மறுபுறம் இனம் புரியாத பட பட உணர்வு....
இரவு நேர பயணம், சிறுவர்கள் துரு துருவென உரக்க உரையாடல்.. அவர்களை உறங்கச்செய்வதற்கான முயற்சி ஒன்றும் பயன்தரவில்லை. நித்திரை கொள்ளாமல் போட்டியில் பங்குபெறுவதை நினைக்கும் போது வருத்தமாகவும் ஏமாற்றமாகவும் இருந்தது.

விடிந்து கொண்டிருந்தது... சுவிஸ் நாட்டிற்குள் சென்று கொண்டிருந்தோம். போட்டி நடைபெறும் மைதானத்தை அண்மித்த போது போட்டி தொடங் கியிருந்தது, முதல் போட்டி எங்களுக்கானது.

மைதானத்தில் எதிர் அணியும், நடுவரும் காத்துக்கொண்டு இருந்தனர். வாகனத்திற்கு உள்ளேயே அவசரம் அவசரமாக சிறுவர்கள் உடைகளை மாற்றிக் கொண்டனர்.


யுகன் கனகம்

நடுவர் விசிலை ஊதி விட்டார். காலணி கூட அணியமுடியாமல் சிறுவர்கள் கையில் ஏந்தியவாறு மைதானத்திற்குள் ஓடிச்சென்றனர்.... போட்டி ஆரம்பமானது, முதல் பந்து எமது வீரன் பந்தை வலது பக்கத்திற்கு எடுத்துச்சென்று உள்நோக்கி மேலாக உதைத்தான், அதை லாவகமாக மேலெழுந்து தன் தலையால் அடித்து கோலாக்கிய காட்சி கண் கொள்ளாதது.

வெள்ளைக்கார நடுவர் கை குலுக்கி எமது வீரர்களை பாராட்டினார். தொடர்ந்து எமது வீரர்கள் அசத்தல்..முடிவில் 7 : 0 என எமது அணி வெற்றி ஈட்டியது.எம் அனைவருக்கும் அளவற்ற மகிழ்ச்சி.தொடர்ந்து கால் இறுதி, அரை இறுதி, இறுதியாட்டம்..... வெற்றி !

ஐரோப்பிய கிண்ணத்தை தாயகத்தில் இருந்து வருகை தந்திருந்த தமிழர் விளையாட்டு பொறுப்பாளரிடமிருந்து பெற்றுக் கொண்டபோது.... மகிழ்ச்சி !
பின் மைதானத்தில் சிறுவர்களை கட்டியணைத்து துள்ளிய.......மகிழ்ச்சி !
வாகனத்திலும் வரும் போது ஆடல் பாடல்.....அடைந்த மகிழ்ச்சி !

எமது வருகைக்காக காத்திருந்த பெற்றோர்கள், நண்பர்கள் அடைந்த மகிழ்ச்சி....எனது வாழ்வில் அடைந்த மறக்கவே முடியாத புளுகம் தான் !
-யுகன் கனகம் (பிரான்ஸ்)

(இன்னும் புளுகுவோம்)


மங்கல இசைக் குழு

நாதஸ்வர இன்னிசைச் செல்வன் N.K.ரகுராமன்



உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும்
நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட தவில் மேதை
அளவையூர் குமரகுரு அவர்களின் புதல்வன்
நாதஸ்வர இன்னிசைச்செல்வன்
N.K.Raguraman



Dresdener Str.6
50126 Bergheim
Germany
0049 2271 670236

Tel: 0049 157 89 15 95 71






# கணனிக்குப் பின்னால் உள்ள கணிதம்



சி.சிவவினோபன்

கணனி கற்க வேண்டும் என்றால் ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும் என்பது அரிவரிப் பிள்ளைக்குக் கூடத் தெரிந்த விடையம் தான், ஆனால் அந்தக் கணினியின் இயக்கத்திற்குப் பின்னால் கணிதமிருக்கின்றது, அந்தக் கணிதத்திற்கு அடிப்படை யார்? என்று தெரிந்தால் கண்டிப்பாக ஆச்சரியப்படுவீர்கள். கணனி, கணனியின் பின்னால் உள்ள கணிதம் அதன் அடிப்படை என்று அனைத்தையும் தெரிந்து கொள்வதற்கு முன், நாம் எல்லோரும் ஒரு முக்கிய கேள்விக்குப் பதில் தெரிந்துகொள்ள வேண்டும்.





கணனி புத்திசாலியா? மனிதன் புத்திசாலியா? என்று கேட்டால், வெட்கமே ,ல்லாமல் மனிதன் தான் என்று அனைவரும் சொல்லிவிடுவோம். அப்படி என்றால் அடுத்தபடியாக 3248 ஐ 3 ஆல் வகுத்தால் என்ன விடை என்று கேட்டால், கைத்தோலைபேசியையோ அல்லது கணனியையோ தான் நாட வேண்டிய நிலையில் நாம் அனைவரும் இருக்கின்றோம். அவ்வாறு விடை தெரியாமல் முழிப்பவரிடம் மீண்டும் கணனி புத்திசாலியா? மனிதன் புத்திசாலியா என்று கேட்டால், மனிதன் தான் என்று மீண்டும் வெட்கமே இல்லாமல் சொல்வார்கள். அது எப்படி சாத்தியம் என்று கேட்டால், கணனியைக் கண்டு பிடித்ததே மனிதன் தான் ஆகவே மனிதன் தான் புத்திசாலி என்பார்கள்.

பதில் சரி என்றாலும், பாவித்த காரணம் பிழை என்பதால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. மனிதனால் உருவாக்கப்பட்டது கத்தி, அதனால் மனிதனை விட உறுதி குறைந்தது என்று எண்ணி கத்தியால் குத்தினாலோ, கத்திக்குக் குத்தினாலோ சேதம் கத்திக்குத் தான் என்று சொல்லமுடியுமா? ,ருப்பினும் கணணியை விட மனிதனே அறிவாளியாவான். காரணம் கணனியின் இயங்கும் நிலையையும், மனிதனின் மூளை இயங்கும் நிலையையும் ஆராய்ந்தால் விடை தானாகப் புரிந்துவிடும்.


மூளை எப்படி தொழிற்படுகின்றது என்றால், கேள்வி கேட்பதன் மூலம் தொழிப்படுக்கின்றது. மொழியைக் கற்றுக் கொள்ளும் போது, ஒவ்வொரு பொருளினதும் ஒவ்வொரு செயலினதும் பெயரைக் கேட்டு, மனப் பாடம் செய்கின்றது. அதே போன்று ஒவ்வொரு முடிவெடுக்கும் போதும், அறிவியல்களை புரிந்து கொள்ளும் போதும், கேள்விகளைக் கேட்டு அதற்கான விடையைத் தேடுகின்றது. இங்குதான் முக்கியமாகக் கண்காணிக்க வேண்டும், மனித மூளை கேட்கும் கேள்விகள் எண்ணுக்கடங்காதது (எப்படி, எங்கே, எப்போது, எத்தனை,எங்கிருந்து....), அதே போன்று அதற்கான விடைகளும் எண்ணுக்கடங்காதவை.

கணனி எப்படி இயங்குகின்றது தெரியுமா? கணணியும் கேள்வி கேட்டுத்தான் இயங்குகின்றது. ஆனால் கணனிக்கு இரண்டு கேள்விகள் மட்டும் தான் கேட்க்கத் தெரியும், மற்றும் இரண்டு பதிலை மட்டும் தான் புரிந்துகொள்ள முடியும். அந்த இரண்டு கேள்வி என்னவென்றால்

உதாரணத்திற்கு ஐந்துடன் ஆறைக் கூட்டினால் எத்தனை என்று நாம் யோசிப்பதை, கணினி எப்படி கணிக்கும் தெரியுமா?

ஐந்துடன் ஆறைக் கூட்டினால் பூச்சியம் வரும். ஆமா? இல்லையா? என்று கேள்வி கேட்கும் பதில் இல்லை என்று வரும். உடனே

ஐந்துடன் ஆறைக் கூட்டினால் ஒன்று வரும். ஆமா? இல்லையா? என்று கேள்வி கேட்கும் பதில் இல்லை என்று வரும். இவ்வாறே ஒவ்வொன்றாக பரிசீலிக்கும், இறுதியில் ஐந்துடன் ஆறைக் கூட்டினால் பதினொன்று வரும். ஆமா? இல்லையா? என்று கேள்வி கேட்கும், அப்போது ஆம் என்று பதில் வந்தவுடன் திரையில் 5 + 6 = 11 என்று காண்பிக்கும்.




நாம் ஒரு கேள்வியில் கேட்டு ஒரு பதிலில் விளங்கி கொள்வதை, கணனி ஓராயிரம் தடவை கேள்வி கேட்டு பதிலைக் கண்டு பிடிக்கின்றது. ஆனால் இத்தனை கேள்வியையும் சில மில்லி செக்கனுக்குள் (வினாடியை விடக் குறைந்த நேர அலகில்) பரிசீலிப்பதால், மனிதனை விட வேகமாக பதில் கூறுவது போன்ற மாயை அங்கு பிறக்கின்றது. பயிற்சி இருந்தால் எத்தனை கடினமான கேள்வியின் பதிலைக் கூட கணனியை விட வேகமாக மனித மூளையால் கண்டு பிடிக்க முடியும். எத்தனையோ தொழிநுட்ப்ப வளர்ச்சி வந்தும், ஏன் கணனி இப்படி இரு கேள்வியை மட்டும் கேட்கின்றது இரண்டு பதிலை மட்டும் புரிந்து கொள்கின்றது என்றால், அங்குதான் ஒரு கணித விளையாட்டு இருக்கின்றது.

தொடர்ச்சி 24ம் பக்கம்












# இலங்கையில் பெரும்பாலான பாலியில் துஷ்பிரயோகம் பெண்களின் சம்மதத்துடன் நடக்கிறது!

## பொலீசார் விடுத்த செய்தி போலிச் செய்தியா? நம்புவோம்!! வேறு வழி???



இலங்கையில் கிடைக்கப்பெறும் பாலியல் துஷ்பிரயோக முறைப்பாடுகளில் 65 சதவீதமானவை பெண்களின் சம்மதத்துடன் அதாவது சுயவிருப்பத்துடன் நடப்பவை என பொலிஸ் பகுப்பாய்வு புள்ளி விபரங்களில் தெரியவந்துள்ளது.

அப் புள்ளிவிபர தகவலின் படி 2016 ஆம் ஆண்டு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட பாலியல் துஷ்பிரயோக முறைப்பாடுகள் மொத்தமாக 2036 ஆகும். இதில் 16 வயதுக்கு மேற்பட்டவர்களின் பாலியல் துஷ்பிரயோக முறைப்பாடுகள் 350ம், 16 வயதிற்குட்பட்ட பாலியல் துஷ்பிரயோக முறைப்பாடுகள் 1686ம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.
16 வயதிற்குட்பட்ட யுவதிகள் சுய விருப்பத்துடன் ஆணுடன் உறவு கொண்டாலும் பாலியல் துஷ்பிரயோகம் என்றே கருதப்படும். இவர்களில் 1394 யுவதிகள் அவர்களின் சம்மதத்தினுடையே ஆண்களுடன் உறவு கொண்டுள்ளனர். எனவே உண்மையாக பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளானோரின் எண்ணிக்கை 292 ஆகும்.



இதன் படி கடந்த வருடத்தில் உண்மையாக மொத்தமாக பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான பெண்களின் எண்ணிக்கை 642 ஆகும். எனவே சதவீத பகுப்பாய்வின் 65 சதவீத பாலியல் துஷ்பிரயோகங்கள் சுய விருப்பத்துடன் நடந்தவை என்று தெரிவிக்கப்படுகின்றது.


## கணனிக்குப் பின்னால்

23ம் பக்கத் தொடர்ச்சி...

அந்தக் கணித விளையாட்டை, இலத்திரனின் இயக்கத்துடன் சேர்த்து கணனியின் தொழிற்பாட்டை உருவாக்கினார்கள். அந்தக் கணித விளையாட்டின் பெயர் தான் பைனரி இலக்கம்.பைனரி எண்கள் என்றால் என்னவென்றால் ஒன்று(1) மற்றும் பூச்சியம்(0) என்ற இரண்டு இலக்கங்களை மட்டும்கொண்டு எழுதும் முறை தான் பைனரி இலக்கங்கள் என்று சொல்லப்படும். ஒவ்வொரு இலக்கங்களை பைனரி எண்களாக மாற்ற முடியும் ஒவ்வொரு எழுத்திற்கும் பைனரி எண்கள் உண்டு. ஆனால் அதெப்படி இந்த பைனரி எண்களை மட்டும் கணணியால் புரிந்து கொள்ள முடியும் என்றால், கேள்விக்குப் பதிலைத் தான் இலத்திரனின் இயக்கம் புரிய வைக்கின்றது.

இலத்திரனின் இயக்கம் என்றால், ஒரு சுற்றில் இலத்திரன் ஓட வேண்டும் என்றால் அந்த இலத்திரன் ஒரு மூடிய சுற்றில் ஓட வேண்டும். அப்படி என்றால் ஒரு வீட்டில் மின் விளக்கு ஒளிர வேண்டும் என்றால் வீட்டின் ஒளியாளியை (Light Switch) அழுத்த வேண்டும், ஆளியைத் (Switch) துண்டித்தால், இணைப்புத் துண்டிக்கப்படும் விளக்கு அணையும். அதே போன்று தான் ஒன்று(1) என்றால் ஆளி இணைக்கப்பட்டது உடனே இலத்திரன் ஒடத் தொடங்கும். பூச்சியம்(0) என்றால் ஆளி துண்டிக்கப்பட்டது ஆகவே இலத்திரன் ஓடாது நின்று விடும்.

Current shown using electron flow notation




அதனால் கணனி ஆமா? என்றால் ஒன்றா(1) என்று கேட்கின்றது என்று அர்த்தம் அப்போது இல்லை என்று கொடுத்தால் கணனி பூச்சியம்(0) என்று உள்வாங்கும் பூச்சியம் என்றால் இலத்திர ஒட்டத்தில் ஆளி துண்டிக்கப்பட்டது என்று அர்த்தம். ஆளி துண்டிக்கப்பட்டது என்றால் உடனடியாக கணனி அடுத்த கேள்வி கேட்கத் தொடங்கி விடும். ஆளி இணைக்கப்பட்டு இலத்திரன் ஓடும் வரை கேள்வி கேட்டுக் கொண்டே இருக்கும் கணனி. இதைத் தான் கணனி மொழி என்பார்கள். இந்தக் கணனி மொழி படிப்பதற்கு ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும் என்ற ஒரு விடயம் கூட ஆங்கிலத்தை அனைவரும் கற்க்கும் மொழி ஆகியதற்கு முக்கிய காரணமாக இருக்கின்றது. ஆனால் அந்த பூச்சியத்தையே நிறுவியது ஒரு தமிழர் அவரின் பெயர் ராமானுஜர் என்பது தான் காலத்தால் அழிக்க முடியாத வரலாற்று உண்மையாகும். அப்படி அவர் மட்டுமந்தப் பூச்சியத்தை நிறுவாமல் விட்டிருந்தால், இன்று கணனி இயங்கி இருக்குமா? என்பது சந்தேகமே.இரு கேள்வி கேட்கும் இயந்திரமேஇத்தனை அறிவாளியெனின்!பல கேள்வி கேட்க்கும் பாலகா - நீ எத்தனை அறிவாளியடா!






# உலகெலாம் சூரிய வழிபாடு!




யப்பான்




யேர்மனி



அலங்கரிக்கப்பட்ட உழவு இயந்திரம்

பகலவன் இன்றி உயிர்கள் ஏது? உலகுதான் ஏது? பாரபட்சம் பார்த்து பகலவன் தன் கதிர்களைப் பூமிக்குத் தருவதில்லை. அதனால் நன்றி சொல்லும் மகத்தான பண்புக்கு அடையாளமே இப்பொங்கலின் திருநாளாகும். இதனையே ஜேர்மனியர் Erntedankfest என்று தோட்டங்களில் விளையும் உருளைக்கிழங்கு, பூசணி போன்ற மரக்கறி வகைகளை படைத்துக் கொண்டாடுகின்றார்கள்.

நாம் இன்றைய தினம் மாத்திரமே சூரியனுக்கு படையல்கள் படைத்துக் கொண்டாடிவிட்டு வருடம் முழுவதும் சூரியனின் கதிர்கள் எம்மீது விழவேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். ஆனால், பத்தாயிரம் ஆண்டுகள் பழமையான அஸிரிய, அகேடிய, பாபிலோனிய நகரங்களின் முக்கிய வழிபாட்டுக் கடவுளே சூரியன். இவர்கள் சூரியனை ஷாமேஷ் என்று அழைக்கின்றார்கள்.

புத்தி, ஆரோக்கியத்தை அளிக்கும் கடவுளாகக் கருதி எகிப்திய மக்கள் அமான் என்றும் கிராஸ் என்றும் சூரியனையே வழிபடுகின்றனர். வீரம் தரும் கடவுளாக பெரு, மெக்சிக்கோ நாட்டவர்கள் சூரியனை வழிபடுகின்றனர். பெருநாட்டிலுள்ள இன்கா என்னும் பழங்குடியினர் தாங்கள் சூரியனிலிருந்தே வந்தவர்கள் என்று கூறுகின்றனர். ஜப்பானிலும், சீனாவிலும் சூரியன் பெண்கடவுளாக வணங்கப்படுகின்றது.

தைமாதம் பிறக்கும்போது சூரியன் மகரராசியில் பிரவேசிக்கின்றார். இக்காலப்பகுதியில் தட்பமும் வெப்பமும் மிதமாக இருக்கும். இதனால் பயிர்கள் நன்றாக விளைந்து நற்பலனைத் தருகின்றன. அதனால் அப்பலனைத் தரும் சூரியனுக்குப் பொங்கல் படைத்து பொங்கலோ பொங்கல் என்று தமிழரும், ஹங்கரோ, ஹங்கர் என்று ஜப்பானியரும் பொங்கல் விழாக் கொண்டாடுகின்றனர். ஜப்பானியரும் சீனநாட்டவர்களும் சூரியனைப் பெண்தெய்வமாகவே வழிபடுகின்றனர். எமக்கு மாட்டுப் பொங்கல் போல் ஜப்பானியர்களுக்கு குதிரைப்பொங்கல் அமைகின்றது. குதிரைகளை நன்றாகக் கழுவி அலங்கரித்து மாலை போட்டு இனிப்புவகை கொடுத்துக் கொண்டாடுவார்கள். இதேபோல் பர்மாவிலும் இந்நாளில் புத்தாடை அணிந்து கால்நடைகளுக்குப் பூஜை செய்வது வழக்கத்தில் இருக்கின்றது.

காலைச் சூரிய வழிபாடு மனிதனுக்குச் சாலச்சிறந்தது என்பது யோகக் கலையில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இது இன்று நேற்றல்ல ஆதி மனிதன் கூட சூரியனை வழிபட்டுத் தன் நன்றியைத் தெரிவித் திருக்கின்றான். காயத்திரி, உஷ்ணிக், அனுஷ்டப், பிரஹுதி, பங்கதீ, திருஷ்டுப், ஜகதி என்ற பெயர்களையுடைய குதிரைகள் சூரியபகவானை இழுத்து வருவதாக நம்பப்படுகின்றது. சூரியனுக்குரியவையாக தாமிர உலோகம், கோதுமைப்பண்டம், செந்தாமரை, செம்பட்டு, கபிலைப்பசு, மாணிக்கம், எருக்கங்குச்சி, காரப்பொருள்கள் போன்றவை கொள்ளப் படுகின்றன. மகரசங்கராந்தி நாளன்று இத்தைப்பொங்கல் கொண்டாடப் படுவதனால், மேற்கு வங்காளத்திலுள்ள சாகர்தீவு ஸ்நான கட்டடத்தில் புனிதநீராடி பிதிர்க்கடன் செய்தால் புண்ணியம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்து வருகின்றது.

அறுவடை காலத்தில் அறுவடை சிறப்பாக அமைய சங்ககாலத்திலே பெண்கள் விரதம் இருந்து தைமாதம் முதல் நாளில் விரதத்தை முடித்து பயிர் சிறக்க உதவிய பூமி, கால்நடைகள், சூரியன் போன்றவைக்கு பொங்கல் படைத்து வழிபட்டார்கள். இலக்கிய காலத்திலேயே இந்திர விழா என்ற பெயரில் காவிரிப்பூம்பட்டினத்தில் கொண்டாடப்பட்டதற்கான ஆதாரங்கள் உள்ளன. மதுரை மாவட்டத்தில் மாட்டுப் பொங்கலில் உழவுக்கு உதவிய மாட்டுக்கு பொங்கல் படைத்து பொங்கலோ பொங்கல் மாட்டுப் பொங்கல், பொங்கல் படி பெருக, பானை போங்க, நோவும் பிணியும் தெருவோடு போக" என்று கூறி மாடு தின்ற எச்சில் தண்ணீரை மாட்டுத்தொழுவத்திலே தெளிப்பார்கள்.

தொடர்ச்சி 29ம் பக்கம்

## இன்று சிவகார்த்திகேயன் பக்கம் சாயும் குழந்தைகள்!



விஜய் நல்ல விஷயங்களையே செய்வார். அவர் செய்கிறார் என்பதற்காக அந்த நல்ல விஷயங்ளை நான் செய்யாமல் இருப்பது சரி அல்ல என்று நடிகர் சிவகார்த்திகேயன் தெரிவித்துள்ளார். மோகன்ராஜா இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்துள்ள வேலைக்காரன் படம் வரும் 22ம் தேதி வெளியாகி உள்ளது. அந்த படத்தின் தமிழக வினியோக உரிமை சுமார் ரூ.60 கோடி வரை சென்றுள்ளது. இது அஜீத், விஜய் படங்களுக்கு நிகரான வியாபாரம்.

சில விஷயங்களில் சிவகார்த்திகேயன் விஜய்யை காப்பியடிப்பதாக பேச்சு உள்ளது. குட்டீஸ்களை விஜய் தம் பக்கம் ஈர்த்தார். விஜய்யை பின்பற்றி சிவகார்த்திகேயன் தற்போது குட்டீஸ்களின் ஹீரோவாகிவிட்டார் என்று கூறப்படுகிறது. வேலைக்காரன் பட வேலைகள் முடிந்த பிறகு சிவகார்த்திகேயன் பார்ட்டி கொடுத்தார். இந்த விஷயத்திலும் அவர் விஜய்யை காப்பியடிப்பதாக பேச்சு கிளம்பியுள்ளது.

விஜய் சார் நல்ல விஷயங்களையே செய்வார். அவர் செய்கிறார் என்பதற்காக அந்த நல்ல விஷயங்ளை நான் செய்யாமல் இருப்பது சரி அல்ல. அவரை காப்பியடித்து நான் இப்படி செய்யவில்லை என்று சிவகார்த்திகேயன் பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார். கோலிவுட் கோலிவுட் வேலைக்காரன் படத்தின் வியாபாரத்தை பார்த்து கோலிவுட் மிரண்டு போயுள்ளது. சிவகார்த்திகேயனின் அசுர வளர்ச்சி பல முன்னணி ஹீரோக்களை கலக்கம் அடைய வைத்துள்ளது.




Lebara play
அனைவருக்கும்
எங்கள் இனிய
தைப்பொங்கல்
நல் வாழ்த்துக்கள்
100% LEGAL
HD/SD QUALITY
KERVEN GMBH
Happy Pongal
புதிய Lebara play box
வாங்குபவர்களுக்கு
IBC 1 ticket free... இலவசம்
கடந்த மூன்று வருடங்களாக
KERVEN GMBH நிறுவனத்தின்
வாடிக்கையாளர்களுக்கு
6 மாதம் நீடிப்பு இலவசம்!
KTV
MUSIC
Exclusive online offer
Extra 3 months
or IBC event
1 ticket free 20€
Download on the App Store
ANDROID APP ON Google play
For sales enquiries call 0203 608 0298 Visit play.lebara.com
*Terms and conditions apply. For full terms and conditions visit lebara.com/play/terms-conditions
TEMPO
MONEY TRANSFER
துரித பணமாற்றுச் சேவைக்கு
எம்மை நாடுங்கள்
KERVEN GMBH
Rheinische Str. 64 | 44137 Dortmund
Tel: 023117721820 | 023133015738
Mob: 01738048459
E-Mail:info@kerven-gmbh.com
KERVEN GMBH
191 Rue du Faubourg 75010 Paris
Tel : 09 77 19 59 11 | Mob : 06 26 06 05 22
+33 754 11 20 20
E-Mail:info@kerven-gmbh.com
KQS GmbH IBAN: DE43 4404 0037 0212 0087 00 BIC: COBADEFFXXX
புதுப்பிக்கும் எமது வாடிக்கையாளர்கள் புதிய Set top Box V3 ஐ பெறுவதற்கு
9.99€ மட்டும் மேலதிகமாகச் செலுத்தினால் போதும்



# திருமந்திரமும் வாழ்வியலும் 24

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.



## வாழ்க்கையின் கோலம்

நேசம் பாசம் நெருப்பில் எரிந்தது எனக் கூறும் பாடல் எண் 150

"வாசந்தி பேசி மணம்புணர்ந்த அப்பதி
நேசம் தெவிட்டி நினைப்பு ஒழிவார் பின்னை
ஆசந்தி மேல்வைத்து அமைய அழுதிட்டுப்
பாசத்தீ சுட்டுப் பலி ஆட்டினார்களே"

பெண் பேசித் திருமணம் நிச்சயம் செய்து, மணம் முடித்துக் கூடிக்கலந்து மகிழ்ந்திருந்த தலைவன் மேல் வைத்த ஆசை காலப்போக்கில் திகட்டிப் போய் சலிப்படையச் செய்துவிட, அவனுடைய பாச நினைவுகளையும் பின்னர் மறந்துவிடுவர். இந்நிலையில் கணவன் இறந்துவிட்டால், அவன் உடலைப் பாடையின் மேல் வைத்து, ஒப்பாரி வைத்து அழுது புலம்பித் தங்களின் அன்புப் பாசத்திற்கே தீ வைத்துப் பிண்டம் போட்டார்களே! என்ன கொடுமை! இருக்கும் போது இருந்ததென்ன! உயிர் போன பின் நடந்ததென்ன? இதுதான் நிலையா யாக்கையின் நிலை.

மூச்சடங்கப் பேச்சடங்க உயிரடங்கிப் போனது எனக் கூறும் பாடல் எண் 151

"கைவிட்டு நாடிக் கருத்தழிந்து அச்சற
நெய்அட்டிச் சோறுண்ணும் ஐவரும் போயினர்
மைஇட்ட கண்ணாளும் மாடும் இருக்கவே
மெய்விட்டுப் போக விடைகொள்ளு மாறே"

மருத்துவர்கள் நாடி விழுந்துவிட்டது. இனித் தாங்காது, மருத்துவம் பார்த்துப் பயனில்லை என்று கைவிட்டு விட்டார்கள். நினைவு தடுமாறிவிட்டது. உடலில் ஒட்டிய உயிர் மூச்சு ஒடுங்கி விட்டது. வாசமிக்க நெய்விட்டுச் சமைத்த சுவையான உணவை உண்டு மகிழ்ந்த மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களும் செயலிழந்து விட்டன. ஆனால் மணந்து கொண்ட மை பூசிய கண்களுடைய மனைவி இருக்கிறாள். தேடிய செல்வம் இருக்கிறது. என்ன இருந்து என்ன செய்ய? உயிர் உடலை விட்டுப் போய்விட்டதே! இப்படித்தான் உயிர் உடலை விட்டு விடைபெறும்.

துன்பம் துயரம் அந்திம காலம் என உலகியலை உணர்த்தும் பாடல் எண் 152

"பந்தல் பிரிந்தது பண்டாரம் கட்டற்ற
ஒன்பது வாசலும் ஒக்க அடைத்தன
துன்புறு காலம் துரிசுவர மேன்மேல்

அன்புடை யார்கள் அழுது அகன்றார்களே"

உயிரின் மேல் அமைந்த உடலாகிய பந்தல் பாழடைந்து விட்டது. உயிர்ச் செல்வம் வறண்டு விட்டது. கண்கள் இரண்டு, செவிகள் இரண்டு, மூக்குத் துவாரங்கள் இரண்டு, வாய், சிறுநீர், மலப்பாதை ஆகிய ஒன்பது வாசல் கதவுகளும் ஒரே நேரத்தில் அடைபட்டு விட்டன. உயிருக்கு முடிவு காலம் விரைந்து விட்டது. அன்புடைய சுற்றத்தார்கள் அழுது புலம்பினார்கள். பின் அவர்களும் போய் விட்டார்கள்." இதுதான் வாழ்க்கை என்பதாகும்.

முடியுடை மன்னர்க்கும் முடிவு இதுதான் எனக் கூறும் பாடல் எண் 153

"நாட்டுக்கு நாயகன் நம்ஊர்த் தலைமகன்
காட்டுச் சிவிகை ஒன்றுஏறிக் கடைமுறை
நாட்டார்கள் பின்செல்ல முன்னே பறைகொட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின்ற வாறே"

நாட்டுக்குத் தலைவனாக இருந்தவன். நமது ஊரில் மிகுந்த சிறப்பிற்குரிய பெருமகனாகத் திகழ்ந்தவன். இன்று பாடையில் ஏறிக் கடைசிப் பயணம் போகின்றான். நாட்டு மக்கள் பின் தொடர்ந்து வர, முன்னே பறை ஒலிக்கப் போகிறது இறுதி ஊர்வலம்" நாட்டுக்குத் தலைவனாக, ஊருக்குள் உயர்ந்தவனாக இருந்தவன் இன்று பெறுகின்ற மரியாதை இதுதான். உடலில் உயிர் இருக்கும் வரைதான் தலைமையும், தகுதியும், பெருமையும். உயிர் போய்விட்டால் பிணம்தான். போகுமிடம் சுடுகாடுதான் என்பதாகும்.

கூற்றம் வந்தது, கோலம் கலைந்தது எனக் கூறும் பாடல் எண் 154

"முப்பதும் முப்பதும் முப்பத்து அறுவரும்
செப்ப மதிள்உடைக் கோயில்உள் வாழ்பவர்
செப்ப மதிள்உடைக் கோயில் சிதைந்தபின்
ஒப்ப அனைவரும் ஓட்டெடுத் தார்களே"

தொண்ணூற்று ஆறு தத்துவங்களும் செம்மையாக அமைந்த பாதுகாப்பு மதிலுடைய கோவிலுக்குள் வாழ்பவர், சிறப்பாகச் செய்யப்பட்ட அந்தக் கோயில் பழுதடைந்து கெட்ட பிறகு அந்தக் கோவிலுள் இருந்தவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஓடிவிட்டார்கள். உயிர் போய் உடல் அழியத் தத்துவங்கள் தாமே நீங்கும் என்பதாகும்.

மாடு மனை உறவு காடு வரைதான் எனக் கூறும் பாடல் எண் 155

"மதுஊர் குழலியும் மாடும் மனையும்
இதுஊர் ஒழிய இதணமது ஏறிப்
பொதுஊர் புறம்சுடு காடது நோக்கி
மதுஊர் வாங்கியே வைத்தகன் றார்களே."

தேன் ஊறும் மலர்கள் சூடிய கூந்தலுடைய மனைவியும், மக்களும் செல்வமும் வீடும் என்று இருந்த இந்த ஊராகிய உடலில் இருந்து உயிர் போய்விட, இறந்த உடலை பாடையில் ஏற்றி ஊருக்கு வெளியே பொதுவாக உள்ள சுடுகாட்டை நோக்கிச் சென்று துன்ப மயக்கத்துடனே, பாடையிலிருந்து உடலை எடுத்துச் சிதையில் வைத்துத் தீ மூட்டிச் சென்றுவிட்டார்கள்.

பல நாள் உறவு ஒரு நாளில் போகும் எனக் கூறும் பாடல் எண் 157

"ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரும் மக்களும்
ஊர்த்துறைக் காலே ஒழிவர் ஒழிந்தபின்
வேர்த்தலை போக்கி விறகிட்டு எரிமூட்டி
நீர்த்தலை மூழ்குவர் நீதிஇல் லாரே"



வாழும்போது போற்றிக் கொண்டாடி உறவாட வந்த உறவினரும், மனைவி, மக்களும், ஊருக்கு வெளியே உள்ள நீராடும் இடம்வரை வருவர். பின்பு உடலைச் சுடலையில் வைத்துத் தீமூட்டித் தலை மூழ்குவர். இந்த அன்பு இல்லாத மக்கள் பல காலம் பழகிய உறவுக்கு சில நொடிகளில் முழுக்குப் போட்டுவிடுகின்றார்களே! நீதியில்லாதவர்கள். நியாயமா இது!.


மங்கல இசை
தவில் ஞானச் சுடரொளி
K.P.செல்வநாயகம் குழுவினர்
உங்கள் இல்லத்தில் நடைபெறும்
மங்கல நிகழ்விற்கும்
திருவிழாக்கள் மற்றும்
கலைவிழாக்கள் அனைத்திற்கும்
அழைத்து மகிழுங்கள்
தொடர்புகளுக்கு:
0202 2713 698 // 0152 1212 4341
0176 32 76 38 62
அனைவருக்கும் புதுவருட நல் வாழ்த்துக்கள்





மித்திரன்
திருமண இலவச சேவை
உங்கள் இல்லற வாழ்வின்
உற்ற துணையை
உறுதியாகத் தேடிக்கொள்ள
உதவும் இலவச சேவை நமது.
தொடர்புகளுக்கு:
மித்திரா:
Tel: 02732 57372- Mobil: 0175 4543 416




25 ம் பக்கத் தொடர்ச்சி....

# உலகெலாம் சூரிய வழிபாடு!



ஒவ்வொரு தூணாக 12 மாதமும் கதிரொளி பாச்சும் சூரியன் வித்யாசங்கர் கோவிலில்

பொங்கல் கொண்டாட்டம் போகிப்பொங்கல், பொங்கல், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் என நான்கு நாட்கள் கொண்டாடப்படுகின்றன. போகிப்பொங்கல் என்பது தாம் பயன்படுத்திய, வீட்டிலே பாவனையற்று தேங்கிக் கிடக்கும் பழைய பொருட்களை அகற்றும் தினமாகக் கருதப்பட்டது. இத்தினம் மனங்களில் தேக்கி வைத்திருக்கும் குப்பைகளையும் தெரிந்தெடுத்து அகற்றும் தினமாகும். இது மார்கழி மாதக் கடைசி தினத்தில் கொண்டாடப்படுகின்றது. பொங்கல் தினத்திலே உழவுத்தொழிலுக்கு உதவிய சூரியனுக்கும், மாட்டுப்பொங்கலிலே உழவுத்தொழிலுக்கு உதவிய கால்நடைகளுக்கும், நான்காம் நாள் கொண்டாடப்படும் காணும் பொங்கலில் தொழிலில் முழுமூச்சாக ஈடுபட்டு அறுவடை முடித்தவர்கள். இன்றைய நாளில் தங்களுடைய உறவினர்கள் நண்பர்களைச் சந்தித்து பொங்கலை வழங்கி அன்பைப் பகிர்ந்து கொள்வார்கள்.

பொதுவாக காதரிசி எனப்படும் வெல்லம் கலந்த பச்சரிசியை ஊறவைத்து அதில் சீனி, ஏலக்காய், பிசைந்த வாழைப்பழம் ஆகியவற்றைக் கலந்து செய்வதுதான் இக்காதரிசி. முதன்முதலாகக் காது குத்தும் பிள்ளைகளுக்குக் கொடுப்பதனால் இப்பெயர் வழங்கப்பட்டது. இதனைப் பொங்கல் அன்று படைப்பது வழக்கமாக இருந்தது. ஆனால், தற்பொழுது அவரவர் வசதிக்கேற்ப பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுகின்றனர். குளிர் கூடிய ஐரோப்பியநாடுகளில் மின்னடுப்பில் பானை வைத்து வசதிக்கேற்ப சூரியன் வெளிவரும் நேரம் பார்த்து பொங்கல் படைத்து வழிபடுவர். சிலவேளைகளில் அன்றைய பொழுது சூரியன் மேகக் கூட்டங்களுக்குள் மறைந்தே இருப்பார். ஆயினும் காணாத போதும் கண்டதாகக் கருத்தில் கொண்டு பொங்கல் படைத்துத் தம் கலாச்சாரத்தைப் பேணுகின்றனர்.







சூரியன் பற்றிய அற்புத நிகழ்வு ஒன்று கர்நாடக மாநிலத்திலுள்ள வித்யாசங்கர் கோவிலில் நிகழ்கின்றது. இக்கோவிலிலே கிழக்குப் பார்த்த மண்டபம் ஒன்று உள்ளது. இம்மண்டபமானது 12 தூண்களினால் தாங்கி நிற்கின்றது. இந்தத் தூண்களின் காலடியில் காலைச்சூரியனின் கதிர்கள் விழுகின்றன. ஒவ்வொரு தமிழ் மாதமும் ஒவ்வொரு தூணாக ஒவ்வொரு தூணின் காலடியில் சூரியக்கதிர்கள் விழுவதுபோல் தூண்களை அக்கால கட்டக்கலைஞர்கள் வடிவமைத்துள்ளனர். வானியல் தெரிந்த இவ் வல்லுனர்கள் பூமி சுழற்சியின் தன்மையை அழகாக இக்கட்டிடக்கலையின் மூலம் கொண்டு வந்திருக்கின்றனர்.

இயற்கையின் வனப்பிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற நாம் இயற்கைக்கு நன்றி சொல்லத் தயங்கினால் நன்றிகெட்ட மனிதர்களாவோம். அதனால், இது தமிழருக்கு மட்டுமே உரித்தான நாள் என்று கருதாது ஒவ்வொரு மனிதர்களும் கொண்டாடவேண்டிய திருநாள் என்பதை மனம் பதிக்கவென இக்கட்டுரை தந்துள்ளேன். அனைவருக்கும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

# மானுடமா! வெல்வதா!! எப்படி அது!!!

**சி.ஆறுமுகம்** (சிவா)
மருதங்குளம் வவுனியா



மானுடனாய் பிறப்பெடுத்து
மாயவனும் அன்று
வாலியை வதைப்பதற்கு
வஞ்சனை புரிந்தானே
ஏழை ஏகலைவனை
ஏமாற்றத் துரொணரும்
தட்சணையாய் உன் விரலை
துந்துவிடு என்றாரே
எப்படி மானுடம் வெல்வது?

கத்த முடியாது
கழுத்தை நசித்து விட்டு
செத்துவிட்ட வித்தியாவின்
வெத்துடலை ருசிபார்த்த
வித்தகக் காமப் பேய்களை
பெத்து விட்ட மானுடம் - இனி
எப்படி மானுடம் வெல்வது?

காதலிக்குப் பரிசளிக்க அம்மா
காசு தரவில்லையென்று
பேதலித்துப் போன மகன்
பெற்ற தாயை வெட்டி
அன்னையின் உடலை
ஆற்றில் போட்டுவிட்டு
அப்பாவிபோல் அழுது புரண்டானே
எப்படி மானுடம் வெல்வது?

கட்டுடலை பிறர் காண
கதவுகளை அதிகம் வைத்து
திட்டமிட்டு உடையணியும் சிட்டுக்களே
கொஞ்சம் கேளீர்

ஆடையைக் குறைத்துவிட்டால்
ஆழகென்று நம்பவேண்டாம்
காமத்தீயிற்கு கற்பூரம் ஆவீர்கள்
உடல் அழகை வெளியே காட்டி
பிறர் மனதில் வெறியை ஊட்டி
பாவத்திற்கு வழியைக் காட்டி
பலியாகிப் போனால் பெண்கள்
எப்படி மானுடம் வெல்வது?

மானுடம் வென்றுவிட
கள்ளக் கலவியை
இல்லாதொழித்திட வேண்டும்.
மானுடம் வென்றிட
பிள்ளைப் படுகொலைகள்
பாலியல் கொடுமைகள்
இல்லா தொழித்திட வேண்டும்.

போதைக்கு அடிமையாகி
பாதையை மாற்றிவிட்டு
பேதை மானுடன்
பெரும் தவறைப் புரிகின்றான்
மானுடம் வென்றிட
போதை தவறென்று
புரிந்து கொள்ளல் வேண்டும்
மானுடம் வென்றிட வேண்டும்
நானிலம் கண்டிடவேண்டும்.



“உனக்குத் தெரியுமா”

# பெருமை தரும் எம்மவர் சாதனைகள்!!!







ஈழத்து மெல்லிசை மன்னர், இசையமைப்பாளர், கவிஞர் பாடகர், இலங்கையின் முதலாவது தமிழிசைத்தட்டை இயற்றி இசையமைத்து வெளியிட்ட பெருமைக்குரிய ஈழத்து மெல்லிசை மன்னர் M.P.பரமேஷ் அவர்களின் 70 வது பிறந்தநாளை முன்னிட்டு அவரின் பாடல்களும் மற்றும் அவரின் வாரிசு „இலங்கையின் முதல் தமிழ் பென்னிசையமைப்பாளருமான" பிரபாலினி பிரபாகரன் அவர்களின் பாடல்களும் உள்ளடக்கிய CD California - San Carlos பொது நூலகத்தில் 16.12.2017 மிகப் பிரமாண்டமாக வெளியிடப்பட்டது. "ஈழத்து மெல்லிசை மன்னர்" எனும் சிறப்பைப் பெற்றவர். அவரது காதல் மனைவி திருமதி மாலினியும் மிகச்சிறந்த இசைக்குயில் ஆவார். இசைத் தந்தையின் 70 வது பிறந்தநாளை. அமெரிக்காவில் வசிக்கும் அவரது மகள் பிரபாலினி பெரும் விழா நடத்தினார்.

(அவர் பாடிய 48 பாடல்கள் அடங்கிய CD) ஈழத்து மெல்லிசை மன்னர் எம்.பி. பரமேஷ் அவர் எல்லா நலனும் பெற்று, நெடிது வாழ வெற்றிமணியும் வாழ்த்தி மகிழ்கின்றது.

மேலே அமெரிக்காவில் நடைபெற்ற வெளியீட்டு விழா அழைப்பிதழ்கள்.

வெற்றிமணியில் விளம்பரம் செய்ய அழையுங்கள் 0163 199 2333
புதிய விளம்பரங்களுக்கு மாதம் தோறும் 12ம் திகதிக்கு முன் தொரடர்பு கொள்ளவும்



# இலங்கையில் விவாகரத்துக்கான துரிதப்படுத்தல்?



**ஏலையா க.முருகதாசன்**

இலங்கை முன்னேற்றம் கண்டாலும்  பாலியல் வன்கோடுமைக்கு உட்படும்

பெண்களை "இன்னொரு பார்வை" பார்க்காத சமூகமாக இன்னும் இலங்கைச் சமூகம் முற்றுமுழுதாகத் தெளிவு பெறவில்லை.
ஐரோப்பிய நாடுகளில் கணவன் மனைவிக்கு இடையில் நடைபெறும் உடல் உறவு கூட மனைவியின்  விருப்பத்துடனேயே இடம்பெற வேண்டும் என்ற சட்டம் உண்டு, கடுமையாக அச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டும் வரு கின்றது. நீதிமன்றங்களில் வழக்குகளும் நடைபெற்று வருகின்றன.

அது போன்ற சட்டத்தையே இலங்கை அரசும் கொண்டு வரவிருக்கின்றது. கணவன் மனைவிக்கு இடையில் ஒத்த மனநிலையும் மனைவிக்கு அந்நேரத்தில் உறவுக்கான விருப்பம் இருந்தால் மட்டுமே மனைவியுடன் உறவு கொள்ள முடியும்.கணவனுக்கு உறவு கொள்ள விருப்பமும் ஆசை இருந்த போதிலும் மனைவிக்கு அதற்குரிய மனிநிலையோ உடல்களைப்போ விருப்பமின்மையொ இருக்கும் நிலையில் மனைவியைக் கட்டாயப்படுத்தி உறவு கொண்டால் அது பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமையாகக் கருதப்படுகின்றது

இதில் பேசப்படாத பேசத் தயங்குகின்ற விடயமாகவிருப்பது திருமணம் செய்து கொண்ட கணவனுக்கோ மனைவிக்கோ உடல்சார்ந்த வேறு தொடர்பு இருக்கும் பட்சத்தில் இச்சட்டம் பெண்களுக்கான சாதக நிலையைத் தோற்றுவிக்கலாம் என்ற பார்வையும் உண்டு.

தன்னுடைய கணவன் தன்னுடன் உறவு கொள்ளச் சொல்லி கட்டாயப் படுத்தினார், தன்னை உடல்ரீதியாகத்  தாக்கிக் கட்டாயப்படுத்தி உடல் உறவு கொண்டார் என காவல் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யவும், நீதிமன்றங்களில் வழக்குத் தொடுக்கவும் இச்சட்டம் வழிவகுக்கின்றது.

நீதிமன்றங்களில் விவாகரத்துக்கான வழக்குகளில் ஆய்வாளர்களின் ஆய்வின்படியம் அவதானிப்பிலும் பெரும்பாலான வழக்குகளில் மறை பொருளாக இருப்பது பாலியல் (செக்ஸ்) சம்பந்தப்பட்டதாக இருந்திடினும் வழக்கு, தொடுப்பதற்கான காரணங்களாக வெறு கனாரணங்களே சொல்லப்படுகின்றன."இன்னது"தான் விவாகரத்துக்கு காரணம் என வழக் காளிகளால் சொல்வதை இலங்கை மக்களின் பண்பாடே தடுத்து வருகின்றது.

கால்பட்டால் குற்றம் கைபட்டால் குற்றம் என்பது போல கணவன்மாரின் நிலை தோன்றுவதற்கு இச்சட்டம்  விவாகரத்துக்களை அதிகரிக்குமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இச்சட்டத்தை மனைவிமார் எமது உரிமை என்ற சட்டமாக கடுமையான போக்கில் கைகொள்வார்களானால் இலங்கை வாழ் கணவன்மார் சட்டத்திற்கு அமைய தம்மைத் தயார்படுத்தி கொள்வது தவிர்க்க முடியாததே.

இலங்கையில் பாலியல் வன்கொடுமைக்கு எதிரான கடுமையான சட்டம் அமுலில் வரவிருக்கின்றது.இச்சட்டப்பிரிவுக்குள்,மனைவியைக்கூட அவளின் விருப்பமின்றி கணவனாலேயே உறவு கொள்ள முடியாதவாறு இச்சட்டம் பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்கவிருக்கின்றது. பாலியல் வன்கொடுமை என்பது எவ்விதத்திலும் எற்றுக் கொள்ள முடியாததே.

பெண்மீதான வன்முறைத் தாக்குதலில் பாலியல் வன்கொடுமையே உளரீதியாகவும் உடல் ரீதியாகவும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி ஒரு பெண்ணை வாழ்நாள் முழுவதும் அவளை நிம்மதியற்றவளாக்குவதாகும். ஒரு பெண்ணைச் சுற்றி பல ஆண்கள் இருந்த நிலையிலும் அவள் தனது உடல் உள ரீதியான பாதுகாப்பை உறுதி செய்வதாக இருக்க வேண்டும்.அதற்கான சட்டமாகவும் பாலியல் வன்கொடுமைச் சட்டத்தை நோக்கலாம் ஆண்களில் வக்கிரபுத்தியும் காமவெறி கொண்டவர்களும் தனித்து இருக்கும் பெண்கள் மீதும்,வீதியில் தனித்துச் செல்லும் பெண்கள் மீதும் பாலியல் வன் கொடுமைகளைச் செய்கிறார்கள். ஒவ்வொரு நாடும் அந்தந்த நாட்டுப் பண்பாட்டுக்கமையவும், மக்களின் குணநலனுக்கு ஏற்பவும் பாலியல் வன்கொடுமைச் சட்டங்களைத் தயாரித்து அதை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.
இலங்கையைப் பொறுத்தவரையில் பெண்கள் மீது தொடுக்கப்படும் பாலியல் வன்கொடுமை என்பது, கொடுமைக்கு உட்படும் பெண்கள் வேதனையுடன் தமது வாழ்நாள் முழுவதும் வாழ வேண்டிய சூழ்நிலையைத் பண்பாட்டு ரீதியாகத் தோற்றுவித்துவிடும்.பெண்களை அவமானப்படுத்தும் நோக்கில் "கற்பு" என்ற ஒழுக்கநிலையைக் கற்பித்து அதன்மீதான தாக்குதலே பாலியல் வன்கொடுமை.கல்வியியலில், சமூக முற்போக்குச் சிந்தனையில் என்னதான்


## ஸ்ரீ காளிகாம்பாள் ஜோதிட நிலையம்



அனைத்து மதங்களும் வரவேற்கப்படுகின்றன..
உலகப் புகழ்பெற்ற இந்திய ஜோதிடர்.

**பண்டித் சாய்ராம்**

பரம்பரை பரம்பரையாக தலைமுறையில் சாய்ராம் தங்கள் கடந்த காலம் , நிகழ்காலம், மற்றும் எதிர்காலம் பற்றிக் கணித்தல், முகம்பார்த்து உங்கள் எதிர்காலம் சொல்வார்.
மற்றும் முகநாடி கைரேகை ஆகியவற்றிலும் வல்லுனர்.

for Appt.0049 (0)231 86220 828
0049(0)15163222251 and 0049(0)15218133859

"காத்திரு, எழுந்திரு இலக்கை அடையும்வரை நிறுத்த வேண்டாம்"

பண்டித் சாய்ராம் முகத்தைப் பார்த்து உங்கள் எதிர்காலத்தைக் கணிப்பார் அத்தோடு கை ரேகையும் பார்க்கப்படும். திருமணப் பொருத்தம், அதிஷ்ட இலக்கம், அதிஷ்ட மோதிரம் ஆகியவையும் செய்துதரப்படும்.

**வேதத் தீர்வுகள்:** மொழிகள்: தமிழ் இந்தி ஆங்கிலம்.

1. வேலை வாய்ப்பு
2. பணப் பிரச்சினைகள்
3. காதல்
4. வியாபாரம்
5. திருமணப் பிரச்சினைகள்
6. உடல் நலம்
7. குழந்தைப் பிரச்சினைகள்
8. மன அழுத்தம்/ நோய்
9. பொறாமை
10. கல்வி
11. கணவன், மனைவி பிரச்சினை
12. வெளிநாடு
13. விவாகரத்து
14. பில்லி, சூனியம்
15. தாம்பத்யம்
16. பகை
17. நீதிமன்ற வழக்குகள்
18. துர் அதிஷ்டம்

மற்றும் உங்களது தனிப்பட்ட பிரச்சினைகள் மற்றும் பல....

100% செய்வினை மற்றும் பில்லி, சூனியத்திடமிருந்து
வாழ்நாள் முழுவதற்குமான துரித தீர்வு

08:00 am to 8.00 pm Private and confidential
Borsigstraße 68,44145 Dortmund (Borsigplatz)



## திருமணசேவை

ஐரோப்பா ,கனடா, அவுஸ்திரேலியா,
அமெரிக்கா, இலங்கை,
ஆகிய நாடுகளில் இருந்து
மணமகன், மணமகள், உங்கள் பிள்ளைகளுக்கு
ஏற்றவர்களாக தேர்ந்து எடுத்து
உதவுவோம்.

தொடர்பு கொள்ளவும்.
Germany: 00491627462526
Sri lanka: Viber 0094 767250144

## HK Hammacher

வாகனச் சாரதி பயிற்சி நிலையம்
எமது இணையத்தளத்தை பார்க்கவும்
Fahrschule- hk- hammacher.de



ஆங்கிலம்,யேர்மன்,பிரஞ்,துருக்கி மொழிகளில்
வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு
வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும்
மோட்டோசைக்கிளிற்கும்
சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.

தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651

MPU ASF FES இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

# ராமர் பாலம் 7000 ஆண்டுகள் பழமையானது இது மனிதர்களால் கட்டப்பட்டது?

ராமாயண இதிகாசத்தின்படி, இந்தியா-இலங்கை நடுவே கற்களால் பாலம் கட்டப்பட்டதாகவும், ராமர், தனது பரிவாரங்கள், வானர படையின் உதவியோடு பாலம் கட்டி இலங்கைக்கு போர் தொடுத்து சென்றதாகவும் கூறப்பட்டுள்ளது. ஆஞ்சநேயரும், அணிலும் ராமருக்கு உதவியதாகவும் கூறப்படுகிறது. இந்த புராணக்கதையில் கூறப்பட்டுள்ளது உண்மை என ஆங்கில தொலைக்காட்சி ஒன்று ஆராய்ந்து கூறியுள்ளது. இது தமிழகத்தில் ராம நம்பிக்கை கொண்டவர்களுக்கு பெரும் மகிழ்ச்சியைத் தந்துள்ளது. நீங்களும் ராமர் ப்ாலத்தை பார்க்கவேண்டுமா?





இராமர் பாலம் இராம சேது அல்லது இராமர் பாலம் என்ற பெயரில் அழைக்கப்படும் ஆதாம் பாலத்தை இராவணனிடமிருந்து சீதையைக் காப்பாற்ற உதவிய வானரங்கள் அல்லது குரங்குளின் மூலம் இராமர் கட்டினார். இராமாயணத்தில் இந்த பாலம் சேது பந்தனம் என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.

இதன் உருவாக்கம் சுண்ணாம்புப் பாறைகளை வரிசையாக நீட்டிவிட்டு தமிழ் நாட்டின் தென்கிழக்கு கடற்கரையில் உள்ள பாம்பன் தீவு மற்றும் இலங்கையின் வடமேற்குப் பகுதியில் உள்ள மன்னார் தீவுகளுக்கிடையில் உருவாக்கப்பட்ட இடம் தான் ராமர் பாலம்.

## இந்தியாவிலிருந்து இலங்கைக்கு

இந்தியா மற்றும் இலங்கையை இணைக்கும் வகையில், இப்படியொரு பாலம் இருந்ததையும், அது மனிதர்கள் நடந்து செல்ல வசதியாக இருந்ததையும் புவியியலாளர்கள் உறுதி செய்கின்றனர். தற்போது இந்த இரு நாடுகளையும் பிரிக்கும் கடல் பகுதி சேதுசமுத்திரம் அல்லது சீ ஆப் தி பிரிட்ஜ் என்று அழைக்கப்படுகிறது. ஆதாம் பாலம் ஆதாம் பாலம் கிறிஸ்தவ வரலாற்று கதைகளிலும் இந்த பாலம் இருந்ததற்கான குறிப்புகள் உள்ளன. இலங்கையில் இருந்த ஆதாம் சிகரத்தின் உச்சிக்கு சென்று ஒற்றைக் காலில் ஆயிரம் ஆண்டுகள் தவமிருப்பதற்காக ஆதாம் இந்த பாலத்தைப் பயன்படுத்தி இலங்கையை அடைந்ததாகவும், அதனாலேயே இந்த பாலம் ஆதாம் பாலம் எனவும் அழைக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

மதச்சாயம் பூசப்பட்டதோ கிறிஸ்தவமோ, இந்துவோ எப்படியானாலும் இந்த






பாலம் இருந்தது உண்மை என்று ஆவணப்படுத்தியுள்ளது ஒரு ஆங்கில தொலைக்காட்சி நிறுவனம்.

## அதிரும் உண்மைகள்

அதிரும் உண்மைகள் சேது சமுத்திர திட்டம் என்ற பெயரில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு ஒரு கடல் வழி திட்டம் கொண்டுவந்தது.
இலங்கைக்கும், இந்தியாவுக்கும் நடுவேயான ராமர் பாலம் பகுதியிலுள்ள மணல் திட்டுகளை இடித்துவிட்டு அந்த வழியாக கப்பல் போக்குவரத்து நடத்த திட்டமிடப்பட்டது. எதிர்ப்பு எதிர்ப்பு சேது சமுத்திர திட்டத்திற்கு எதிர்ப்பு ஆனால், சேது சமுத்திர திட்டத்திற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. இந்துக்களின் நம்பிக்கை சார்ந்த எதிர்ப்பாக மட்டுமின்றி, சுற்றுச் சூழலியளாளர்கள் சிலரும் கூட இதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். அந்த கடல் பிராந்தியத்தின் சுற்றுச்சூழலை இத்திட்டம் கெடுத்துவிடும் என்றும் குற்றச்சாட்டு எழுந்தது. இருப்பினும், ராமாயணம் தொடர்பான வாத விவாதங்களே இந்த திட்டத்தில் அதிகம் எதிரொலித்தது.

## Rockfang வீடியோ வெளியீடு

வீடியோ வெளியீடு இந்த நிலையில், அமெரிக்காவின் சயின்ஸ் சேனல் வெளியிட்ட வீடியோவில், ராமர் பாலம் அல்லது ஆதாம் பாலம் என அழைக்கப்படும் இந்த பாலம், மனிதர்களால்தான் கட்டப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

## 7000 ஆண்டுகள் பழமையானது

7000 ஆண்டுகள் பழமையானது அந்த வீடியோவில் கூறப்பட்ட தகவல் இதுதான்: இந்தியா-இலங்கை நடுவேயான இந்த பாலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள கற்கள் சுமார் 7000 ஆண்டுகள் பழமையானவை. இந்த பாலம் 30 மைல்கள் நீளமானவை. அங்கு மணல் திட்டுங்கள் உருவாகியுள்ளது உண்மைதான். ஆனால் அவை கற்களால் பாலம் அமைக்கப்பட்ட பிறகே உருவாகியுள்ளன. மணல் திட்டுக்களின் வயது சுமார் 4000 ஆண்டுகள்தான்.

அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
திருக்கணித ஜோதிடம்
ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி


சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450

RKL IMMO.de IMMOBILIEN & BAUFINANZIERUNG
Umsatzsteuer ID.-Nr. DE186406298 | Berufserlaubnis erteilt am 08.01.2002
Sinnadurai Kiritharan|Tel. 05723-914519| www.rklimmo.de|info@rklimmo.de

Baufinanzierung / வீடு வாங்குவதற்க்கு தேவையான கடன்கள்:100% Free service
Umfinanzierung / வீடுக்கடனை எம்மிடம் மாற்றுதல் 100% Free service
Ratenkredit / தனிநபர் கடன் 100% Free service
Sonderfinanzierung / பலவிதமான கடன் வசதிகள்
Immobilien / வீடு விற்க இல்லையேல் வாங்குவதற்கான ஒழுங்குகள்
Full Service / முழுமையான சேவை
நம்பிக்கை! உத்தரவாதம்!! 15 வருட அனுபவம்!!!
Tel: 05723- 914519 Mobil 0172-5214530 www.rklimmo.de
EU-VAT / Umsatzsteuer ID-Nr DE 186406298 -- Berufserlaubnis erteilt am 08.01.2002 Registrierungsnummer D-W-133-ADSJ-30
Sinnadurai Kiritharan
Tel:05723 914519
அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்


# தமிழில் வெளியான முதல் விண்வெளி திரைப்படம் எம்.ஜி.ஆர் நடித்த கலையரசி!



விண்கலத்தில் எம்.ஜி.ஆர்

ஜெயம் ரவி. இவர் நடித்து விரைவில் வெளியாக இருக்கும் திரைப்படம் 'டிக் டிக் டிக்'. இந்த திரைப்படமும் வித்தியாசமான கதைக் களம் தான். அதாவது விண்வெளியையும், விண்கலன்களையும் கொண்டு காட்சிப்படுத்தப் பட்டிருக்கும் திரைப்படம். ஹாலிவுட்டில் இதுபோன்ற படங்கள், கணக்கிட முடியாதபடிக்கு வெளியாகி இருந்தாலும், நம் நாட்டில் இருந்து வெளியாகும் போது, அதற்கு நாம் மதிப்பளித்து தான் தீர வேண்டும். ஏனெனில் ஒரு நாட்டில் இருக்கும் தொழில்நுட்ப வளர்ச்சியைப் பொருத்துதான் இதுபோன்ற படங்கள் சாத்தியம். மேலும் பொருளாதாரம் என்பதும் கணக்கில் கொள்ளப்பட வேண்டிய முக்கியமான ஒன்று. மேற்சொன்ன இரண்டும் சமீப காலமாகத் தான் நம் நாட்டு திரையுலகத்திற்கு கைவரப்பெற்றிருக்கிறது. ஆகையால் அதைப் பயன்படுத்தி இயக்குனர்கள் செய்யும் வித்தியாசமான முயற்சிகளை நாம் வரவேற்பதே சரியானதாக இருக்கும்.

ஜெயம் ரவி நடிப்பில் வெளியாக உள்ள 'டிக் டிக் டிக்' திரைப்படம் தான், இந்தியாவின் முதல் விண்வெளி திரைப்படம் என்று சொல்லப்படுகிறது.

ஆனால் கருப்பு வெள்ளை சினிமா காலத்திலேயே, தமிழ் திரையுலகில் விண்வெளி மண்டலம், பறக்கும் தட்டு, வேற்று கிரகம் என பல விதங்களில் கதைகளை காட்சிப்படுத் தியிருக்கிறார்கள்.

அமெரிக்க விண்வெளி ஆய்வு மையம், பரீட்சார்த்த மான பல முயற்சிகளுக்குப் பின்னர் 1969ம் ஆண்டில் மனிதர்களைக் கொண்ட ராக்கெட்டை வெற்றிகரமாக விண்ணில் ஏவியது. நிலவிற்குச் சென்ற அந்த விண்கலத்தில் இருந்து இறங்கிய மனிதன், நிலவில் கால் பதித்து சாதனை படைத்தான் என்கிற வரலாறு அனைவரும் அறிந்ததே.

ஆனால் அமெரிக்க விஞ்ஞானிகளின் ஆய்வுக்கெல்லாம் முன்பாகவே, விண்வெளி ஆய்வு. விண்வெளி மண்டல பயணம் போன்ற எண்ணங்கள், உலக மக்களின் உள்ளத்தில் உலா வரத்தான் செய்தன. விண்வெளிப் பயணம் குறித்து உருவான கற்பனைகளை, பிம்பங்களாக உருவாக்கி, அதன் அடிப்படையில் விண்வெளி பயணத்தைப் பற்றிய திரைப்படங்கள், மேலை நாடுகளில் மவுனப் பட காலத்தில் இருந்தே வெளியாகி வந்திருக்கின்றன. இன்று வரையிலும் விண்வெளி தொடர்பான திரைப்படங்களுக்கு ரசிகர்கள் மத்தியில் ஏகோபித்த வரவேற்பு நிச்சயம் உண்டு.



டிக் டிக் டிக்

பொதுவாக இந்திய சினிமாவில் விண் வெளிப் பயணத்தைச் சார்ந்த திரைப்படங்கள் வெளியானதாக தெரியவில்லை. ஆனால் அதற்கு தமிழ் திரையுலகம் மட்டும் கொஞ்சம் விதிவிலக்காக இருக்கிறது.

1957ம் ஆண்டில் ஏ.காசிலிங்கம் என்பவர் இயக்கத்தில் வெளியான படம் 'கற்புக்கரசி'. இந்தப் படத்தில் ஜெமினிகணேசனும், சாவித்ரியும் நடித்திருந்தனர். இந்த தமிழ் திரைப்படத்தில் ஒரு காட்சி.. மாயாவி ராணியிடம் இருந்து கதாநாயகன் பிரதாபன் (ஜெமினிகணேசன்), அவனது தோழன் சிலம்பன் (கே.ஏ.தங்கவேலு) ஆகியோர் தப்பிப்பதற்காக பறக்கும் தட்டைப் பயன்படுத்துகிறார்கள்.ஆனால் அந்தத் திரைப்படத்தை விண்வெளி காட்சிகள் கொண்ட படத்துடன் ஒப்பிடுவது, ஒப்பு உவமைக்கு ஒவ்வாதது.

ஆனால் 1963ம் ஆண்டில் வெளிவந்த 'கலையரசி' என்ற திரைப்படம், விண்வெளி மண்டலத்தைத் தழுவிய ஒரு வான சாஸ்திர கற்பனைச் சித்திரம். அதுவும் தவிர இப்படம் சமூக சித்திரம் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தத் திரைப்படத்தின் கதை நூதனமானது.

வானவெளியில் பூமியைப் போன்ற ஒரு மண்டலம் இருக்கிறது. அங்கு மக்களும் வசிக்கிறார்கள். அவர் களுக்கு ஒரு தலைவனும் (திருப்பதிசாமி) இருக்கிறார். அந்த மண்டல மக்கள், விஞ்ஞான யுக்தி, இயந்திர சக்தி என சகல சக்திகளையும் பெருக்கிக் கொண்டவர்கள். அந்த சக்தியின் பலனே... விண்வெளியில் பறக்க அவர்கள் உருவாக்கிக் கொண்ட பறக்கும் தட்டு. அந்த வேற்றுக் கிரக மக்கள் அறியாதது கலை ஒன்றே. அதைக் கற்றுத்தரத் தான் அங்கு ஆள் இல்லை.

வான் மண்டல தலைவரின் ஆணைப்படி, அங்கு தளபதி (எம்.என்.நம்பியார்) யாக இருப்பவன், தன்னுடன் ஒருவனை அழைத்துக் கொண்டு விண் கலத்தில் பூமிக்கு வருகிறான். பூலோகத்தில் இசை ஞானம் பெற்ற ஒருவரைத் தேடி தங்களின் உலகிற்கு அழைத்துச் செல்வது அவர்கள் திட்டம். அதன்படி பூமியில் இனியக் குரலில் பாடிக்கொண்டிருக்கும் வாணி (பி.பானுமதி), வான்வெளிக்குத் தூக்கிச் செல்லப்படுகிறாள். வாணியின் காதலரான மோகன் (எம்.ஜி.ஆர்.), வாணியை எப்படி கண்டு பிடித்து மீட்டு வந்தான் என்பதைக் கொண்டு கதை அமைந்திருக்கும்.

'கலையரசி' திரைப்படத்தில், விண்வெளி மண்டலத்தில் புவி ஈர்ப்பு சக்தி குறைவானதால், எம்.ஜி.ஆர். மிதக்கும் காட்சி, மிதந்தவாறே எம்.ஜி.ஆரும், ராஜஸ்ரீயும் காதல் டூயட் பாடுவது, விண்வெளியில் பறக்கும் தட்டு மிதந்து வருவது போன்ற தமிழ் திரைப்படம் அதுவரை அறியாத, பல அரிய காட்சிகள் கையாளப்பட்டிருந்தது. இந்தத் திரைப்படத்தில்தான் முதன் முதலாக ஸ்லோமோஷன் காட்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டதாக தெரிய வருகிறது.

இன்றைய காலகட்டம் போல், கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் போன்ற உயர் தொழில்நுட்பங்கள் வராத காலத்திலேயே, தன் தனித் திறமையால், இத்தகைய தந்திரக் காட்சிகளை ஒளிப்பதிவாளரும், தந்திரக் காட்சிகளை பதிவு செய்வதில் வல்லுனருமான கே.ஜி.விஜயம் பதிவு செய்திருந்தார்.

மூலக் கதையை டி.ஈ.ஞானமூர்த்தி எழுதியிருந்தார். 'கற்புக்கரசி' திரைப்படத்தை இயக்கிய, ஏ.காசிலிங்கம் தான் 'கலையரசி' திரைப்படத்தையும் இயக்கியிருந்தார். சில காட்சிகளில் எம்.ஜி.ஆர். கேமாளி யாக தோன்றுவதை ரசிகர்கள் விரும்ப வில்லை. எனவே 'கலையரசி' திரைப்படம் தோல்வியைத் தழுவியது. எனினும் தமிழ் சினிமாவின் முதல் விண்வெளி திரைப்படம் என்ற பெருமை, சரோடி பிரதர்ஸ் தயாரிப்பில் வெளியான 'கலையரசி' திரைப்படத்தையேச் சாரும்.




ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941
Tel: 02304/ 16721 Robert koch Str.5- 58239 Schwerte

Milin Impex GmbH
Web :www.milinimpex.de
பசுமையான மரக்கறிகள் கடலுணவுப் பொருட்கள்
இவற்றின் இறக்குமதியாளர்கள்



அனைவருக்கும்
இனிய தைப்பொங்கல்
நல் வாழ்த்துக்கள்
info@milinimpex.de
Tel: 0231 45 96 17
எமது நிறுவனம் Mo-Sa 10.00 இருந்து 18.00 வரை உங்களுக்காகத் திறந்திருக்கும்
Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17/ 28 Fax: 0231 18 15 288

# கடந்த ஆண்டின் கலக்கல் இயக்குநர்கள்!

**அறம்.. தீரன்.. அருவி.. - ஏற்றம்பெறும் தமிழ் சினிமா!**




தமிழ் சினிமாவில் வருடந்தோறும் கிட்டத்தட்ட 200 படங்கள் வெளியாகின்றன. ஆனால், அவற்றில் வெளியாகும் நல்ல படங்களை விரல்விட்டு எண்ணி விடலாம். முன்னணி நடிகர்களின் படங்கள் பல வசூல் ரீதியாக வெற்றி பெற்றுவிட்டாலும், நல்ல படம் என்கிற ரீதியில் பார்த்தால் தேறுவது வெகு சில திரைப்படங்களே. சமூகத்திற்குத் தேவையான கருத்துகளோடு எடுக்கப்படும் மாற்று சினிமாக்கள் வெளியிட தியேட்டர்கள் கூட கிடைக்காமல் அலைக்கழிக்கப்படும் சூழலும் நிலவுகிறது. அப்படி வெளிவந்தாலும், வசூல் ரீதியாக வெற்றி பெறுவது ஒன்றிரண்டு படங்கள் தான்.

சினிமா தமிழ்த் திரையுலகம் டிஜிட்டல் சினிமாவிற்கு மாறிய பிறகு கடந்த சில வருடங்களாக ஒவ்வொரு வருடமும் வெளிவரும் படங்களின் எண்ணிக்கை 200-ஐ தாண்டி வருகிறது. சென்ற ஆண்டிலும் அந்த எண்ணிக்கை 200 படங்களைத் தாண்டி உள்ளது.




200 படங்கள் வந்தாலும் 20 படங்களாவது நல்ல படங்களாக வந்ததா என்று கேட்டால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஏறத்தாழ 10 படங்கள்தான் வசூல் ரீதியாகவும், வரவேற்பு ரீதியாகவும் நல்ல படங்கள் என்ற பெயரைப் பெறுகின்றன. இளம் இயக்குநர்களின் படங்கள் இளம் இயக்குநர்களின் படங்கள் நித்திலன் இயக்கத்தில் வெளிவந்த "குரங்கு பொம்மை", ஸ்ரீகணேஷ் இயக்கத்தில் வெளிவந்த "8 தோட்டாக்கள்", லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் வெளிவந்த "மாநகரம்" ஆகிய படங்கள் நல்ல வரவேற்பைப் பெற்றன. இவர்கள் மூவருமே அறிமுக இயக்குநர்கள் என்பதும் சிறப்பு.


குரங்குப் பொம்மை


அருவி

இந்த ஆண்டில் ஆச்சரியப்படும் வகையில் கடந்த மாதம் 4 வாரங்களில் வெளிவந்த 25 படங்களில் "அறம்", "தீரன் அதிகாரம் ஒன்று", "அருவி" ஆகிய படங்கள் ரசிகர்களிடமும், விமர்சகர்களிடமும் நல்ல வரவேற்பைப் பெற்று ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளன.

## நாயகிகளுக்கு முக்கியத்துவம்


அடுத்தடுத்து மிகச் சிறந்த படங்களைப் பார்ப்பது தமிழ் சினிமா எதிர்காலத்தில் இன்னும் மேம்படும் என்ற நம்பிக்கையைக் கொடுத்துள்ளது. அதிலும் "அறம்", "அருவி" ஆகிய படங்கள் கதாநாயகிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த படங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

டாப் 10 படங்கள் "அறம்", "தீரன் அதிகாரம் ஒன்று", "அருவி" ஆகிய மூன்று படங்களும் இந்த ஆண்டின் டாப் 10 படங்களின் பட்டியலில் கண்டிப்பாக இடம்பெறும் வாய்ப்புள்ளது. வித்தியாசமான படங்களைக் கொடுக்கும் தயாரிப்பாளர்களும், இயக்குனர்களும், அப்படிப்பட்ட படங்களில் நடிக்கும் நடிகர்களும் இன்னும் அதிகமானால் தமிழ் சினிமா நிச்சயம் தலைநிமிரும். வரவேற்பு கிடைக்க வேண்டும் வரவேற்பு கிடைக்க வேண்டும் விமர்சன ரீதியாக நல்ல படங்கள் பேசப்பட்டால் மட்டும் போதாது. வசூல் ரீதியாகவும் நல்ல படங்கள் வெற்றி பெறுவது மட்டுமே அடுத்து வருபவர்களுக்கு ஊக்கமாக அமையும். தமிழ் சினிமா ரசிகர்கள் கமர்ஷியல் படங்களில் இருந்து விலகி வித்தியாசமான சினிமாவை நோக்கைய தேடலைத் தொடங்கியிருக்கிறார்கள்.

சினிமா வளர்ச்சி பெறும் ரசிக்கும்படியாகவும், சினிமா எனும் கலை ஊடகத்தை சமூகத்திற்கு கருத்து சொல்லும் வழியாகவும் செய்தால் ரசிகர்கள் ஈர்க்கப்படுவார்கள். நல்ல கலை வடிவம் நிச்சயம் அதற்கான பலனை அடைந்தே தீரும். குடந்த வருட இறுதியில் சில புது இயக்குநர்களை தமிழ் சினிமாவுக்கு அடையாளம் காட்டியுள்ளது. அடுத்தடுத்த வருடங்களும் தமிழ் சினிமா ஏற்றம் பெற வாழ்த்துவோம்.


**சூரியகாந்தி**

அன்று ஜெயலலிதாவும் முத்துராமனும் நடித்த சூரியகாந்தி திரைப்படம் பெண்ணை மையமாகக்கொண்டு வெளிவந்து வெற்றி பெற்றபடம். சித்தி,அவளுக்குகென்று ஓர் மனம், குலவிளக்கு இப்படிப் பல....



Hückelhoven நகரில்
துரித பணமாற்றுச் சேவை
Asiatischer Super markt
ஆசியா சமுத்திரம்
பசுமையான மரக்கறிகள்
கடல் உணவுப் பொருட்கள் - மளிகைப்பொருட்கள்
அனைத்தும்
மலிவாகவும் கிடைக்கும்.
Lyca TV
TEMPO
VALUTRANS
Ria Money Transfer
MoneyGram
Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
Handy:01520 900 90 30
R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com
Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399
T.Anpalagan

அனைவருக்கும்
இனிய தைப்பொங்கல்
நல் வாழ்த்துக்கள்

உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
துரித பண மாற்றுச் சேவை!
VALUTRANS MONEY TRANSFER
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
info@eurasian-tours.com
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்
Tel: 02131 273 692
இந்தியா- இலங்கை- விசா பெற்றுத்தரப்படும்!



Jasmine Silk House
புத்தம் புது வரவுகள் முந்துங்கள்
13.12.2017 முதல் 16.01.2018 வரை விடுமுறைக்காகப் பூட்டப்படுகிறது,என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்..
என்றும் மலிவாக தரமாக திருமணப் பட்டுப்புடவைகள் மற்றும் பாட்டிசாறிகள், சிறுவர்களுக்கான ஆடைகள், பஞ்சாபிகள், அனைத்தும் புத்தம், புது டிசைன்களில், எம்மிடம் உண்டு. நம்மை நாடிவரக் காரணம், அதுவே!
ஜஸ்மின் சில்க் ஹவுஸ்
Tel:02102 844744 HP:0173 1937 325
Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen
அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்



ASIA BAZAR
Ria Money Transfer
MoneyGram
துரித பண மாற்றுச் சேவை!
VALUTRANS MONEY TRANSFER
ஆசிய,ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன் சனிக்கிழமை தோறும்
இலங்கை,இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.இன்னும் பல...
உரிமையாளர்: பா.கணேஷ்
அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282



Stuttgart நகரில்...
Pirruntha Silks
தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும் நவீன டிசைன்களில் அமைந்த சேலைகள் மற்றும் இமிற்ரேசன் நகைகள் அனைத்திற்கும் நீண்டாலநம்பிக்கை மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்
0170 334 4059
Ludwig str.87a - 70197 Stuttgart Tel: 0711 615 8976

வீட்டுக்கடன்
1,2%
வட்டிவீதத்திலிருந்து
வீடு கட்ட, வாங்க, விற்க... நாடுங்கள்
தொடர்புகளுக்கு:
gothab Finance
Rheinische Str. 72, 44137 Dortmund
0231/53375365 0152/53961138
0231/10876361
Th. Gobinath

HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN



069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main






India | Singapore | Malaysia | Thailand | Hong Kong | U.A.E. | K.S.A. | Oman | Qatar | Bahrain | Kuwait | U.K. | France | Germany | Australia | South Africa | Canada | U.S.A.

StaR - Impex
மரக்கறி கடலுணவுப் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்
யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
Asia & Afro Großhandel & Einzelhandel
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
Tel:0231 860 26 96
Fax: 0231/8602698
Mobil: 0172/2183703
e-mail: star-impex@live.de
StaR Impex :
Inh :K.Sivasubramaniam
அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்





Kipper Str.3 44147 Dortmund Germany